www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE ; FRANCE

# நண்பன்

இதழ் 16 10. F. 17, ஜூன் 1988

ஜெயலலிதா உடைத்த நான்கு மூக்குகள்...

காளிமுத்துவின் மவுசு

## வி.என்.ஜானகி- ஆர்.எம்.வீரப்பன் ரகசிய திட்டங்கள்!



## கருணாநிதி ஏமாற்றுகிறார்!

இப்பத்தான் அரசியலுக்கு வந்தேன் -தீபா

முஸ்லீம்கள் குற்றச்சாட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# GAYATHIRI

உணவுப் பொருட்களை
உங்களுக்கு வழங்கும்
உன்னத பலசரக்கு மளிகை காயத்திரி
இலங்கை, இந்திய, தானியப் பொருட்கள்
இதர பாவனைப் பொருட்கள்
இன்னும் உங்கள் தேவைகள்
இன்றே நாடுங்கள்.

வாலிபர்க்கும்
வயது வந்தோர்க்கும்
ஏற்ற செருப்பு - ரி. சேர்ட்
எல்லா அளவுகளிலும்.

அழகு நங்கையரை
இணைந்துப் பருத்தும்
அழகான சேலைகள்
அனைத்து டிசைன்களிலும்.

தங்க நகைகள் ஓடர் செய்யவும்
தரமான திருமணப் புடவைகளுக்கும்
தவறாது விஜயம் செய்யுங்கள்.

இலங்கை, இந்திய தினசரிகள்
வார, மாத சஞ்சிகைகள்.
தமிழ் · ஆங்கிலம் · சிங்களம்.

தூர இடப்பயணங்களுக்கும்
உள்ளூர் பிரயாண தேவை
களுக்கும், சாரதியுடன் வானம்.

## காயத்திரி மளிகை.

210. RUE DU Fg SAINT DENIS, M° GARE DU NORD ET LACHAPELLE.
75010 PARIS.
TÉ: 42 006090

BESTONE

ஒருமுறை வருகை தாருங்கள்!

அப்புறம் நீங்களாகவே தொடர்ந்து வர முற்படுவீர்கள்!

---

## நேரடி இறக்குமதியாளர்

நல் மணம் சூழ மைசூர் சைக்கிள் பிராண்ட்
சுகந்த மல்லிகா ஊதுபத்தி வகைகள் ......

சுவை மிக்க கும்பகோணம் T. S. R.
கோகுல் ஊறுகாய் வகைகள்
ரோஜா குல்கந்து, நன்னாரி சர்பத், பன்னீர்
மற்றும் சந்தன வில்லைகள் ......

சுத்தமான. திருநெல்வேலி
**S. P. S.** புளி..........

மதுரை **VENUS** அப்பளம்..........
சென்னை லாலா மல்லி, மசாலாத் தூள்,
கறித்தூள் பற்றும் பல..........

வியாபாரிகள் அணுகிட

## PRECIOUS TRADERS

23. AV. GAL. LECLERC
93120. LA COURNEUVE
TEL: 48 38 42 80

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# S.N.C.R. சுற்றுலா

## அனைத்து சுற்றுலா புறப்படும் இடம்:
## GOLDEN STAR கடை GARE DU NORD

I ANDORRA, LOURDES, BORDEAUX

மினி சிங்கப்பூரான அன்டோரா நாடு, புகழ் பெற்ற லூர்து நகரம், மற்றும் போர்தோ அருகே உள்ள கடற்கரை விஜயம்.

காலம்: ஆகஸ்ட் 12 வெள்ளி மாலை 9 மணிக்கு புறப்பட்டு திங்கள் இரவு திரும்புதல் 3 நாள்.

கட்டணம்: லூர்து நகரில் குளியல் வசதியுடன் விடுதி ஏற்பாடு, 3 நாளும் ஒரு வேளை சாப்பாடு, பானம், தேநீர் உட்பட போய் வர நபர் ஒன்றுக்கு 800 பிராங்

ANDORRA வில் பிரெஞ்சு நாட்டு செக், Carte Blue கொடுத்து பொருள் வாங்க முடியும்.

II MARSEILLE, CANNES, NICE, MONACO

உலகப் பணக்காரர்களின் உல்லாசபுரியான **மொனாகோ** நாடு, 2-ம் பெரிய நகரான **மார்சாய்**, அழகும், புனை வளமும் உடைய புகழ் பெற்ற **நீஸ்** மற்றும் **கான்** நகரங்கள்.

காலம்: ஆகஸ்ட் 5 வெள்ளி மாலை 9 மணிக்கு புறப்பட்டு 9 திங்கள் காலை 6 மணிக்கு பாரிசை வந்தடைதல். 2½ நாட்கள்.

**கட்டணம்:**

2 நாட்கள் ஒரு வேளை உணவு, பானம், தேநீர், போர்வை, படுக்கை வசதி உட்பட 700 பிராங்

III வரலாற்றுச் சுற்றுலா:-

இத்தாலி மற்றும் பல நகரங்கள். ஆகஸ்ட் மாதம் 5 நாட்கள். ஹோட்டல், உணவு, வசதியுடன் 2000 பிராங். குறிப்பிட்ட இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்ப… நாள் இறுதியாக்கப்படவில்லை.

நண்பனின் நண்பர்கள், விற்பனை செய்யும் சில கடைகளிடம் பெயர் பதிவு செய்க.

ஜூலை 20-ம் தேதிக்குப் பின்னரே டிக்கட் விற்பனை ஆரம்பம். இறுதி அறிவிப்பும் வரும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தி.மு.க வெற்றி பெற்றால்




வரப்போகிற தேர்தல் தி. மு. க. வுக்கு சாதகமானதாக இருக்கும் என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது. தி.மு.க. தொண்டர்களும் அந்த முழு நம்பிக்கையுடன் உற்சாகமாக பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், தி. மு. க. தலைவர் கருணாநிதி சில முக்கியமான முடிவுகளை எடுத்திருக்கிறார். "தி மு. க. ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தால் முதல்வர் பதவியை பேராசிரியர் அன்பழகனுக்கு விட்டுக் கொடுத்துவிட விரும்புகிறார். கட்சியின் சூழ்நிலைகள் கருதியும் தனக்கு மேலும் பெருமை சேர்த்து கொள்வதற்காகவும் இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்; என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதனடிப்படையில் தான் அடுத்த முதல்வர் என்று தன்னை யாரும் அழைக்க வேண்டாம் என்று தன் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார் கருணாநிதி.

கருணாநிதியின் இந்த முடிவு சரியானது தானா? தொண்டர்கள் இதை ஏற்றுக் கொள்வார்களா? என்பது குறித்தும் கட்சி பிரமுகர்கள் மட்டத்தில் வாக்குவாதங்கள் நடைபெறுகின்றன.

ஒரு வேளை ஏகோபித்த தொண்டர்கள் கருணாநிதி தான் முதல்வராக வேண்டும் என்று கோரிக்கை வைத்தால் கருணாநிதி ஏற்றுக் கொள்வார் என்றும், ஆனால் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தில் முதல்வர் பதவியை அன்பழகனுக்குக் கொடுத்துவிட்டு கட்சித் தலைவர் பதவியிலேயே நீடிப்பார் என்றும் கருத்து நிலவுகிறது.

அன்பழகனைப் பொறுத்த வரை முதல்வர் பதவிக்கு அவர் ஆசைப்படுவதாகத் தெரியவில்லை. ஆனாலும் கருணாநிதி தன் முடிவில் உறுதியாக இருக்கிறார் என்று சொல்கிறார்கள்.

அன்பழகனுக்கு முதல்வர் பதவியை விட்டு கொடுத்துவிட்டு தன் மகன் ஸ்டாலினுக்கு மந்திரிசபையில் முக்கிய பொறுப்பு கொடுக்க முடிவு செய்வார் கருணாநிதி என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

தேர்தல் முடிந்து வெற்றிக் கனியை பறிக்கும் வரை தனது எண்ணங்களை அவர் வெளியிட மாட்டார் என்று தெரிகிறது. வருகின்ற தேர்தலில் முதல்வர் பதவி யாருக்கு என்கிற கோஷத்தை விட்டுவிட்டு மக்களுக்கான பல புரட்சிகரமான திட்டங்களை கருணாநிதி அறிவிப்பார் என்கிறார்கள்.

எது எப்படியிருப்பினும் வருகிற தேர்தலில் தி. மு. க. வின் அணுகுமுறை மக்களைக் கவர்வதாக இருக்கும் என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது.

— எம்மார்



**தன்னுடைய அமைதியைக் காத்துக் கொள்ளத் தெரியாதவனுக்கு ஒருக்காலும் நன்ருகப் பேச முடியாது.**

**—ப்ளுடார்ச்**

**பேச்சு தோல்வியடையும் போது அப்பழுக்கற்ற அப்பாவித்தனமான அமைதி நம்மை ஆட்கொள்கிறது.**

**—ஷேக்ஸ்பியர்**

**அரசனுக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் வீட்டில் அமைதியைப் பெற்றவனே மிகச் சிறந்த**

**மூன்று விதமான அமைதி இருக்கிறது. பேசுவதில் அமைதியாக இருப்பது நல்லது. ஏனென்ருல் ஒழுங்கற்ற மிகுதியான பேச்சு கெட்டதைச் செய்யத் தூண்டும். விருப்பங்களிலும், ஆசைகளிலும், காமத்திலும் இருந்து விடுபட்டு அமைதியாய் இருப்பது அதைவிட நல்லது. ஏனென்ருல் ஆத்மாவின் அமைதியை அது அதிகப்படுத்துகிறது. தேவையில்லாத அலைக்கழிக்கப்படுகிற எண்ணங்களில் இருந்துவிடுபட்டு இருக்கும் அமைதிதான் எல்லாவற்றையும்விடச் சிறந்தது. ஏனென்ருல் தகுந்த புகழ் அடைவதற்கு அது அஸ்திவாரமிடுகின்றது. நினைவாற்றலுக்கு அது**

www.tamilarangam.net



விழா மேடையில் சிவாஜி-ஜானகி-கருணாநிதி

# மும்மூர்த்திகள்

தமிழக அரசியலில் சினிமா ஒரு வலுவான ஆயுதம் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. சென்னையில் 9.5.88 திங்கள் அன்று மெரீனா கடற்கரையில் காந்தி சிலைக்குப் பின்புறம் கமலஹாசன் ரசிகர் மன்றத்தினர் ஜனாதிபதி பரிசு வாங்கிய கலைஞர்களுக்கு ஒரு விழா எடுத்தனர். விழாவில் கலந்து கொண்ட வி.ஐ.பி.க்கள் — தி.மு.க. தலைவர் கருணாநிதி, அ.தி.மு.க. (ஜா) தலைவி வி.என். ஜானகி, த.மு.மு. தலைவர் சிவாஜி கணேசன். அவர்களுடன் தமிழ்நாடு இ. காங்கிரஸ் துணைத் தலைவர்களில் ஒருவராகிய குமரி அனந்தனும் கலந்து கொண்டார். விழாவில் நாம் சென்று கொண்டிருந்தோம்.

விழா இரவு 7 மணிக்குத் துவங்குவதாக இருந்தது. த.மு.மு. தலைவர் சிவாஜி கணேசன் முன்னதாகவே அரங்கத்திற்கு வந்து விட்டார். தி.மு.க. தலைவர் கருணாநிதி 7.10 மணிக்கு மெரீனா கடற்கரைக்கு வந்தார். மேடைக்கு கீழ்புறம் அமர்ந்திருந்த சிவாஜி கணேசன், சிரித்தவாறு எழுந்து அவரைக் கட்டித் தழுவிக் கொண்டார். 7.30 மணி வரை இருவரும் அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டே இருந்தனர். 7.30 மணி வரை வி.என். ஜானகி வரவில்லை. கமலஹாசன் கருணாநிதியையும் சிவாஜி கணேசனையும் மேடைக்கு அழைத்துச் சென்று அமர வைத்து விட்டார். விருது பெற்ற கலைஞர்களும் மேடைக்கு வந்தனர். குமரி அனந்தனும் மேடையில் ஏறியதும் கருணாநிதியைப் பார்த்து ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டு அவரது அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

தேர்தல் நெருங்கி வரும் இந்த காலகட்டத்தில் சிவாஜி கணேசனும் வி.என். ஜானகியும் ஒரே மேடையில் கலந்து கொண்டதால் மிகுந்த அரசியல் முக்கியத்துவரம் இந்த விழாவிற்குத் தரப்பட்டது. அரசியல் கூட்டணி பற்றி கருணாநிதி ஏதேனும் பேசுவாரோ என்ற எண்ணத்தில் தி.மு.க. முக்கியப் பெரும் புள்ளிகள் பலர் கூட்டத்தில் காணப்பட்டனர். அவர்களில் முக்கியமானவர் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் கி. மனோகரன். கூட்டத்திற்கு வந்த அவர் மணல் பகுதிக்கு உள்ளே வராமல் தனது டி.எஸ்.ஈ. 3400 அம்பாசிடர் காரில் இருந்தவாறே கருணாநிதியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

விழா மேடையில் வி.என். ஜானகியும், கருணாநிதியும் தங்களுக்குள் அடிக்கடி பேசிக் கொண்டே இருந்தனர். குமரி அனந்தன் பேசும் பொழுது, ஒரு முறை வாய் தவறி (பழக்க தோஷத்தில்) ''அண்ணன் தலைவர் சிவாஜி கணேசன்'' என்று சொல்லி விட்டார். உடனே சிவாஜி கணேசன் அவரை முறைத்துப் பார்த்தார். தன் பேச்சை முடிக்கும் பொழுது, ''ராஜீவ், மூப்பனாருக்குத் துணை நில்லுங்கள், கமல் அவர்களே'' என்று சொல்லிக் குமரி அனந்தன் பேச்சை முடித்துக் கொண்டார்.

சிவாஜி கணேசன் பேசும் பொழுது, ''தமிழகத்தின் எதிர்கால அரசியல் எப்படி அமையப் போகிறது'' என்று சூசகமாகச் சொன்னார். அவருக்கு முன்னால் பேசிய பலர், ''விழா மேடை புதுமையான ஒன்று, பார்க்க முடியாததை இன்று பார்க்கிறோம்,'' என்றெல்லாம் பேசினார்கள். சிவாஜி கணேசன், ''இந்த மேடையைத் (கூட்டணியை) தான் நான் எதிர்பார்க்கிறேன், இது ஒன்றாகச் சேரும் மேடை'' என்று சொன்னார்.

வி.என். ஜானகியின் பேச்சுதான் ஹை லைட் என்று சொன்னால் அது மிகையாகாது. தி.மு.க. தலைவர் கருணா



கமலுக்கு மாலை அணிவிக்கிறார் கருணாநிதி

ஒருவன் தான் உண்டது சீரணிக்கப் பெற்றால் அதன் பின்புதான் உண்ண வேண்டியதை சீரணத்தின் அளவை அறிந்து அதற்குத் தக்கபடி உண்ண வேண்டும். ஏனென்றால் நல்வினைப் பயனலன்றி அடைதற்கரிய இம்மனித சரீரத்தைப் பெற்றவன் நெடுங்காலம் அழியாதபடி அதனை உபயோகப்படுத்தும் வழி அதுவே.

உங்கள் வயிற்றில் மூன்றில் ஒரு பகுதியை உணவுக்கும், இன்னும் ஒரு பகுதியை நீருக்கும், மூன்றாம் பகுதியை மூச்சுக்கும் பிரித்து வைத்துக் கொள்ளு

—நபிகள் நாயகம்

உணவு மனிதனைத் தேடி சுற்றிக் கொ கிறது. அவன் உணவைத் தேடி திண்டாடிக்கொ ருக்கிறான். இரண்டில் ஒன்று அமைதியடை

www.tamilarangam.net

நிதியே அவரது பேச்சைக் கேட்டுக் கை தட்டிப் பாராட்டினர். வி.என். ஜானகி மேடைக்கு வந்தவுடன், தன் கழுத்தில் அணிந்திருந்த செயினுடன் கூடிய டாலரை கண்ணில் ஒத்திக் கொண்டார். (டாலரில் அனேகமாக எம்.ஜி.ஆர்.-சத்தியா அம்மையார் படங்கள் இருக்கலாம்) பின்னர், ''கமலுக்கு விருது கிடைத்த செய்தியைப் பத்திரிகைகளில் தான் முதன் முதலில் பார்த்தேன். உடனே கமலைப் பாராட்ட வேண்டுமென்று என் மனது துடித்தது. ஆனால் வெறும் பத்திரிகைகளில் வந்த செய்தி மட்டும்தான். டெல்லியும் டெல்லியில் இருப்பவர்களும் திடீர் திடீரென்று முடிவுகளை மாற்றுவார்கள். நம்ப வைத்துக் கழுத்தை அறுப்பார்கள். எனவே சற்று தயங்கினேன். பிறகு கமலே என்னை வந்து நேரில் பார்த்துச் சொன்னவுடன் நான் அவரை மனமார வாழ்த்தினேன்,'' என்று பழையதையும், புதியதையும் முடிச்சுப் போட்டு மனதைத் தொடும் வகையில் அவர் பேசினர். கூட்டத்தில் ஒரே கரகோஷம்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி பேசும்பொழுது தமிழகத்தின் மிகச் சிறந்த அரசியல் ராஜ தந்திரிகளில் ஒருவர் என்பதை மீண்டும் நிரூபித்து விட்டார். விழாவை ஏற்பாடு செய்திருந்த நேரத்தில் யார் யார் கலந்து கொள்கிறார்கள் என்று பத்திரிகை நிருபர் கேட்க அதற்குக் கமல் பதில் அளித்து இருந்தார். உடனே அந்த நிருபர் 'விழா ஒரு அணி சார்பாக நடைபெறும் விழாவாகத் தெரிகிறதே என்று கமலிடம் கேட்டு இருக்கிறார். உடனடியாக கமல் திடுக்கிட்டுக் கிணறு வெட்டப் பூதம் கிளம்புகிற கதையாக இருக்கிறதே என்று சொல்லி இருக்கிறார்.

விழாவில் இதை எடுத்துக் கூறிய கருணாநிதி, ''கிணறு வெட்டினால் பூதம் கிளம்பத்தான் செய்யும். ஒரு பூதம் அல்ல. ஐந்து பூதம். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய இந்த ஐந்து பூதங்களும் புறப்படும். கிணறு வெட்ட முதலில் நிலம் தோன்றும். அடுத்து நீர் தெரியும். கடப்பாறையைக் கொண்டு பாறையில் இடிக்கும் பொழுது நெருப்புப் பொறி எழும்பும். வெட்டிய கிணற்றில் காற்றுப் போகும். கிணற்று நீரில் ஆகாயம் தெரியும்'' என்று கருணாநிதி சொன்னதும் ஏகப்பட்ட கை தட்டல்.

''இந்த ஐந்து பூதங்களில் நான் அகழ்வாரைத் தாங்கும் நிலம், மற்றவர்கள் எது என்று சொல்ல விரும்பவில்லை. உங்கள் யூகத்திற்கே விட்டு விடுகிறேன்'' என்றார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி சொல்வதில் ஒரு நுட்சமம் பொருந்தியுள்ளது. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்த ல் தலை'' என்ற குறளில் தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல தம்மை இகழ்வாரைப் பொறுப்பதே தலையான பண்பாகும் என்று கூறப்பட்டுள்ளது. தன்னைத்திட்டியவர்களை(வி.என். ஜானகி-சிவாஜி கணேசன்) பொறுத்து தான் இந்த மேடைக்கு வந்ததாக கருணாநிதி சொல்லாமல் சொன்னர்.

கருணாநிதி பேச்சை அரங்கத்திற்கு வெளியே புல் வெளியில் நின்றவாறு அ.தி.மு.க. (ஜெ) சேலம் கண்ணன் எம்.பி. கேட்டுக் கொண்டிருந்தார். அவருடன் ஜெயலலிதா அணியைச் சேர்ந்த வக்கீல் கே.ஜி. ராஜேந்திரன், ஆத்தூர் சி. ராமலிங்கம் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். திடீரென்று அவரை நோக்கி நாஞ்சில் மனோகரனின் உதவியாளர்களில் ஒருவர் வந்தார். சேலம் கண்ணன் உடனே நாஞ்சில் மனோகரனின் காரின் உள் சென்று அமர்ந்து விட்டார். இருவரும் சுமார் 20 நிமிடங்கள் பேசிக் கொண்டு இருந்தனர். அதற்குள் நன்றியுரை சொல்லப்பட்டுக் கூட்டம் கலைய ஆரம்பித்தது. அதைப் பார்த்த சேலம் கண்ணன் காரிலிருந்து இறங்கி அவசரமாக புல்வெளியில் மறைந்து விட்டார்.

— ஏ.எஸ். மணி

படங்கள் — ரங்கராஜன்


**************************************

போரன்புடையீர்! சிங்கப்பூர் ஸ்டோர்

எங்களிடம் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், சீன நண்பர்களின் தேவைகளுக்கேற்ற அனைத்து மளிகைச் சாமானகளும், காய்கறி வகைகளும், மற்றும் கண்ணைக் கவரும் சிங்கப்பூர், ஜப்பான் நாட்டுப் புடவை ரகங்களும், ஆடவர்களுக்குத் தேவையான சர்ட், பனியன், T சர்ட் வகைகளும், தரமானதாகவும், நியாயமான விலையிலும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நண்பர்கள் அனைவரும் வருகைதந்து நல்ஆதரவு தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

SINGAPORE STORE

54, RUEDEL' AQUEDUC

75010, PARIS.

TEL: 42 05 24 81

METRO: STALINGRAD

*************************************


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கருணாநிதியின் தஞ்சை விசிட்

# நிதி - நீதி

''தேர்தல் வரும் பின்னே'', நிதி வசூல் வரும் முன்னே' என்ற அரசியல்மொழிக்கேற்ப, எல்லாக் கட்சிகளும் 'நிதி' வேட்டையில் இறங்கி உள்ளன. வட ஆற்காடு, செங்கல்பட்டு, திருச்சி மாவட்டங்களில் தேர்தல் நிதி பெற்றுக் கொண்ட தி.மு.க தலைவர் கருணாநிதி தஞ்சைக்கு விசிட் செய்தார்.

மே-5, தஞ்சை நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. டியூப் லைட்களாலும், சின்னக் கலர் பல்புகளாலும் உதயசூரியன் வீதியெங்கும் முளைத்திருந்தான். கடை வீதிகளில் தி.மு.க. கொடியினாலேயே தோரணப் பந்தல் போட்டிருந்தனர்.

சரியாக இரவு 7.30 மணிக்குக் கருணாநிதி மேடைக்கு வந்தார். மேடையில் கருணாநிதி உட்பட அனைவருக்கும் சாதாரண நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவருடன் முதல் வரிசையில் முன்னாள் அமைச்சர் மன்னை நாராயணசாமி, எல். கணேசன் மதுரை ஆதினம் ஆகியோர் உட்கார்ந்திருந்தனர். இரண்டாவது வரிசையில் தஞ்சை மாவட்டச் செயலாளர் கோ.சி. மணி, சென்னை மாவட்டச் செயலாளர் டி. ஆர். பாலு வழக்கறிஞர் கணபதி ஆகியோர் இருந்தனர்.

தி.மு.க இளைஞர் அணியைச் சேர்ந்த திருச்சி சிவா பேசும் போது,

''எதிரணியினர் ஒரு ஓட்டுக்கு ரூ.200/- வரை கொடுப்பதற்குத் தயாராக உள்ளார்கள். கொள்ளையடித்த பணம் அவர்களிடம் கோடிக்கணக்கில் குவிந்து கிடக்கிறது. நாமும் நம்மால் முடிந்தளவுக்கு ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டாமா? அதனால் இப்படி நிதி வசூலிக்கிறோம்'' என்றார்.

''இன்றெல்லாம் திருமண நிகழ்ச்சி அதனால் கலைஞருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. முதல் இரவுக்கு ஏங்கும் மாப்பிள்ளையைப் போல எவ்வளவு 'நிதி, இருக்கிறதோ, என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார் கலைஞர்'' என்று சகிக்கமுடியாத ஜோக் அடித்தார் மன்னை நாராயணசாமி.

சென்னை மாவட்டச் செயலாளர் டி. ஆர். பாலு பேசும் போது, ''எல்லா மாவட்டச் செயலாளர்களையும் விட நான் மேலேயேதான் இருப்பேன். அண்ணா அறிவாலய நிதியளிப்பில் முதல் பரிசாக மோதிரம் பெற்றேன். இப்போது உங்களை விட நான் குறைவாகக் கொடுத்தால் போட்ட கணையாழியைக் கழற்றிக் கொண்டாலும் கொள்வார் கலைஞர். அதை தக்க வைத்துக் கொள்வேன்'' என்று முடித்தார்.

''என் உடலே தி.மு.கழகத்தின் சொத்து'' என்று சொல்லி ஆரம்பத்திலேயே கைதட்டலை வாங்கிக் கொண்டவர் மதுரை ஆதினம். ஏகப்பட்ட கைத்தட்டல்களைப் பெற்ற அவர் பேச்சில் கொஞ்சம். ''மங்கையர்கரசிக்கும் திருநாவுக்கரசுக்கும் தொடர்புண்டு. (கூட்டத்தில் ஒரே சிரிப்பு) நீங்கள் எதையோ நினைத்துச் சிரிக்கிறீர்கள். நான் தேவாரத்தில் சொன்னேன். நான் போட்டிருக்கும் ஆறு மோதிரங்களில் ஒன்று - சூரியனிலிருந்து வேல் வருவதுபோன்றது. இது தி.மு.க. சின்னம். தமிழ் நாட்டில் எந்த ஆதின கர்த்தாவுக்காவது என்னைப் போன்று துணிச்சல் இருக்கிறதா? தேர்தலில் யார் நின்றாலும் பரவாயில்லை. கண்ணை மூடிக் கொண்டு உதய சூரியனில் குத்துங்கள்!''

பல இடங்களில் தி.மு.க தலைவர் கருணாநிதியே குலுங்கிச் சிரித்து விட்டார்.

பேச்சை முடித்து விட்டு வந்த ஆதினத்திடம் மன்னை நிதி கேட்க, ''எவ்வளவு வேண்டும் கேளுங்கள்'' என்று ஐந்து முறை உரத்துக் கேட்டார் ஆதினம். எவ்வளவு கேட்பது என்று புரியாமல் மன்னை சில நொடி விழித்தார். பிறகு பத்தாயிரம் கொடுங்கள் என்றார்,'' ப்பூ, இவ்வளவுதானா? இந்த ஆதினமே தி.மு.க சொத்து தான்'' என்று சொல்லி விட்டு நிதி கொடுக்காமலேயே உட்கார்ந்து கொண்டார் ஆதினம்.

தஞ்சை மாவட்டத் தேர்தல் நிதியாக 16,16,634/- ரூபாயை ஒரு சூட்கேஸில் போட்டுக் கலைஞரிடம் கொடுத்தார் மாவட்டச் செயலாளர் கோ.சி. மணி. நிதியளித்தோர் லிஸ்ட் (ஒன்றியம், நகராட்சி) வாசிக்கப்பட்டது. அனைத்து ஒன்றிய, நகரத் தலைவர்களுக்கும் சால்வை போர்த்தினார் கருணாநிதி. அதன் பிறகு கடைசியாக அவர் பேசத் துவங்கினார்.

''இங்கு நிதிக்காக மட்டும் நான் வரவில்லை. நீதிக்காகவும் வந்துள்ளேன். இ. காங்கிரஸ் எம்.பி.களுக்குத் தேசிய கீதம் தெரியாது. 'ஜன கனமண' வில் வரும் திராவிட உத்கல வங்கா' என்ற வரிக்குக் காங்கிரஸ்காரர்களுக்கு 'அர்த்தம் தெரியுமா?

தேசிய நீரோட்டம், தேசிய நீரோட்டம் என்ற சொல்லிக் கொண்டு

தஞ்சைக் கூட்டத்தில் சில காட்சிகள்





தேசத்தைக் கூறு போடுபவர்கள் அவர்கள்தான். காந்தீயம் என்று பேசிக் கொண்டு, வன்முறையில் ஈடுபடுபவர்களும் அவர்கள்தான்.

''பொய்யைச் சொன்னாலும் பொருத்தமாக சொல்லுங்கடா போக்கத்த பசங்களா'' என்று அன்று உடுமலை நாராயணகவி சொன்னதை இன்று நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்'' என்றார் கருணாநிதி.

போஃபர்ஸ், இலங்கைப்பிரச்னை போன்றவற்றில் புதிய தகவல்களைக் கருணாநிதி சொல்வார் என்று எதிர்பார்த்து வந்திருந்தவர்களுக்கு ஏமாற்றமாய் இருந்தது. குறிப்பாக இலங்கைப் பிரச்னை பற்றி அவர் ஒன்றுமே பேசாததில் நிறைய இளைஞர்களுக்கு மனக்கசப்பு!

இது வரையில் வந்த கூட்டங்களை விட இந்த முறை மிகவும் அதிகம் என்று கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் பேசிக் கொண்டனர்.

- நம்து நிருபர்

---

● ஹெக்டே தப்பித்துக் கொண்டு விட்டார் போலிருக்கிறதே?...

-ரமேஷ், மேட்டூர்-1.

நித்திய கண்டம் - பூர்ண ஆயுசு நிலைதான்!

● உறுதியாகச் சொல்லுங்கள். 'கழக ஆட்சி வருமா, வராதா?'

நாதன், வைரவபுரம்.

● 'ஆட்டோ ஸ்டிரைக்' - பி.சு...பிசுத்துவிட்டது தானே.

-ஹேம்சினி, சென்னை - 4.

மக்கள் ஆதரவு இல்லாததும் வலுவான கோரிக்கைகள் இல்லாததும் தோல்விக்கான காரணங்கள்.

● 'விரக்தியின் விளிம்பில் நிற்கிறார் ராஜீவ்!' - என்று ஹெக்டே கூறியுள்ளாரே?...

-பார்த்திபன், ஹைதராபாத்.

www.tamilarangam.net



# வி.என்.ஜானகி-ஆர்.எம்.வீரப்பன் ரகசிய திட்டங்கள்!

ஆட்சியைக் கலைத்த பிறகு சி.பி.ஐ. வேட்டையில் மாட்ட வைத்து விடுவார்கள் என்று பயந்தார் முன்னாள் அமைச்சர் ஆர்.எம். வீரப்பன். ஆனால் அவர் பயந்தது போல் எதுவும் நடக்கவில்லை. வி.என். ஜானகி சேலம், கோயமுத்தூர், மதுரை என்று பேசச் சென்றபோது ஆட்களை லாரி, பஸ் மூலம் ஏற்பாடு செய்தவர்கள் ஆர்.எம். வீரப்பனின் ஆதரவாளர்கள். அதன் பிறகும் அவரிடம் கட்சிச் செலவுகளுக்காகப் பணம் கேட்டி ருக்கிறார்கள். இதில் ஆர்.எம். வீரப்பனுக்கு மிகவும் வருத்தம். "ஏற்கனவே ஆட்சியைத் தக்க வைத்துக்கொள் வதற்காகப் பல லட்சங்கள் செலவு செய்து இருக்கிறேன். இந்த நிலையில் என்னைப் பணம் கேட்டால் எப்படி?" என்று வெடித்திருக்கிறார். உடனே தோட்டத்திற்குச் சென்று வி.என். ஜானகியிடம் பணம் கேட்டிருக்கிறார் கள். அதற்கு அவர் முத்துசாமியிடம் கேட்டுச் சொல் கிறேன் என்று சொல்லியிருக்கிறார். முத்துசாமி என்ன லேசுப்பட்டவரா? "சும்மா வந்து பணம் கேட்டால் என்னய்யா அர்த்தம்? எவ்வளவு செலவாச்சி என்று கணக்குக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லி வழி யனுப்பி வைத்தார் அவர். இதைக் கேள்விப்பட்ட வி.என். ஜானகி மிகவும் மன வருத்தப்பட்டு இருக்கிறார்.

கூட்டணி யாருடன் வகிப்பது என்பதில் ஆர்.எம். வீரப்பன், முத்துசாமி ஆகிய இருவருக்கும் இடையில் மன வேறுபாடு உள்ளது. "தனித்து நின்றால்தான் நம் கட்சிக்கு அனுகூலம். இந்தத் தேர்தலில் யாருக்கும் 'மெஜாரிட்டி' கிடைக்கப்போவதில்லை", என்கிறார்கள் முத்துசாமியின் ஆதரவாளர்கள். ஆனால் ஆர்.எம். வீரப்பன், "சிவாஜியுடன் நாம் கூட்டுச் சேர்ந்தால்தான் காங்கிரசின் எதிர்ப்பு ஓட்டுக்களைப் பெற்று வெற்றி அடைய முடியும்," என்று கருதுகிறார்.

கூட்டணி பற்றிய விஷயங்கள் இப்படி இருக்க அ.தி.மு.க. (ஜெ) — காங்கிரஸ் ஒப்பந்தம் ஏற்பட்டால் சில முன்னாள் மந்திரிகள் ஜெயலலிதா அணிக்குத் தாவுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். திருவண்ணாமலை வீரரும் திருச்செங்கோடு சூரரும் இந்த வரிசையில் நிற்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்தபோது பண விஷ யத்தில் யாரையும் நம்பியது இல்லை — வி.என். ஜானகியைக்கூட. அவரது பணத்தில் பெருமளவு முன் னாள் அமைச்சர்கள் பொன்னையன், முத்துசாமி ஆகி யோரிடம் இருந்தது. ஜெயலலிதா அணியிலுள்ள பண்ருட்டி ராமச்சந்திரனிடமும் திருநாவுக்கரசிடமும் கோடிக்கணக்கான ரூபாய் கட்சிச் செலவுக்காகக் கொடுத்துவைக்கப்பட்டு இருந்தது.

பண்ருட்டி ராமச்சந்திரனிடமும் திருநாவுக்கரசிடமும் எந்தக் காலத்திலும் இனிமேல் பணம் கேட்க முடியாது. எனவே முத்துசாமி மற்றும் பொன்னையனைச் செலவு செய்ய சொல்கிறார் வி.என். ஜானகி. செலவு செய்ய பயந்துகொண்டு திருச்செங்கோடு பொன்னையன் ஜெய லலிதா அணிக்கு விரைவில் தாவுவார்.

திருவண்ணாமலை ப.உ. சண்முகம் இப்பொழுதெல்லாம் கட்சிக் கூட்டங்களில் பேசுவதையே தவிர்த்து வரு கிறார். அவரது கவனம் வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் ஓரளவு இருக்கிறது.



எம்.ஜி.ஆர். வி.என். ஜானகி [illegible]



வி.என். ஜானகி — ஆர்.எம். வீரப்பன்

இதற்கிடையில் ஆங்காங்கு இருக்கும் ஜானகி அணிப் பிரமுகர்கள் குறிப்பாக ஜேப்பியார்; நெகமம் கந்தசாமி, தாமரைக்கனி போன்றவர்கள் மீது உள்ள பழைய வழக்குகளை விசாரிக்க மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு தலைமையக செய லகத்திலிருந்து ரகசிய ஆலோசனை போயுள்ளது. தாமரைக்கனி இதற்குப் பயந்துகொண்டு முன் ஜாமீன் கூடப் பெற்றிருக்கிறார்.

எம்.ஜி.ஆரின் பணத்தில் ஒரு பகுதி அமெரிக்க டாக்டர் பழனி ஜி. பெரியசாமியிடம் உள்ளது. தமிழ கத்தில் அரசியல் சூழ்நிலை மாறியவுடன் சென்னையில் கட்டப்பட இருந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் திட்டத்தைப் பழனி ஜி. பெரியசாமி கைவிட்டு விட் டார். பதறிப்போன வி.என். ஜானகி அவரை அழைத்து விசாரித்திருக்கிறார். எம்.ஜி.ஆர். பணம் பற்றிய பேச்சு வந்தவுடன் இதை மழுப்பி விட்டாராம் பெரியசாமி. வி.என். ஜானகிக்கு இதில் மிகவும் வருத்தம்.

ஜெயலலிதா அணியின் சார்பில் 'சத்தியம் நீயே தர்மத்தாயே' என்ற ஒரு தேர்தல் பிரச்சார நாடகம் அரங்கேற உள்ளது. அதை முந்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஜானகி அணியின் சார்பில் ஒரு தேர்தல் பிரச்சார நாடகம் 15-5-88 அமாவாசை அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ராகு காலம் கழித்து ஆரம்பிக்கப்பட்டது. சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவிற்கு வி.என். ஜானகி வந்திருந்தார். போஸ்டரில் போட்டிருந்தபடி ஆர்.எம்.



[illegible] — முன்னாள் அமைச்சர் முத்துசாமி

www.tamilarangam.net




விரப்பன் விழாவிற்கு வரவில்லை. ராகவானந்தமும் மாதவனும் முதலிலேயே ஏ.சி. அறையில் காத்திருந்தனர். சேலம் பகுதி பொதுச் செயலாளர் கே.பி. செல்வராஜும் உட்கார்ந்திருந்தார். வி.என். ஜானகி முத்துசாமி, ஜேப்பியார், தி.நகர் மூர்த்தி, கு.க. செல்வம் படைகளோடு வந்து இறங்கினர். ராகவானந்தம் மற்றும் மாதவன் உட்கார்ந்திருந்த அறையில் ஜானகி வந்து அமர்ந்தார். அவர் அருகே போய் மாதவன் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மாதவன் முத்துசாமிக்கு சைகை காட்ட அவர் வேகமாக வெளியே வந்து சைதை துரைசாமியை அழைத்துப் பேசினர்.

"போபர்ஸ் ஊழல் உரைக் கூட்டம் என்று போஸ்டர் போட்டு கூட்டங்களை ஏற்பாடு பண்ணுங்க. ஆலடி அருணா பேசட்டும். கூடவே தங்கராஜ் பேசட்டும்" (பார்லிமெண்டில் ஜெயலலிதா தந்ததாக ஐந்து லட்சம் பணப்பெட்டியைக் காட்டியவர்) என்று ஆலோசனை கூறப்பட்டது. விரைவிலேயே இந்தக் கூட்டங்கள் சைதாப்பேட்டையில் தொடங்கி தமிழ்நாடு எங்கும் நடக்கும்.

தமிழகம் எங்கும் ஜானகி அணியின் சார்பில் எம்.ஜி.ஆர். சிலைகள் வைக்கத் திட்டமிட்டுள்ளார்கள். முதல் சிலை சேலம் மாவட்டம் ஆத்தூரில் வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சிலை வைக்க அரசு அனுமதி கிடைக்காமல் போனால் ஆங்காங்கே சிறு மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள் கட்டி அங்கு எம்.ஜி.ஆர். சிலை வைக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

வி.என். ஜானகியை எம்.ஜி.ஆர். அரசியலுக்குக் கொண்டுவர முயற்சித்ததே இல்லை என்று ஜெயலலிதா குற்றம் சாட்டுகிறார். அதை முறியடிக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். 1982ல்தான் ஜெயலலிதாவை அரசியலுக்கு அறிமுகம் செய்தார். ஆனால் வி.என். ஜானகியை அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே அரசியலுக்குக் கொண்டுவந்து விட்டார்.

அ.தி.மு.க.வை எம்.ஜி.ஆர். ஆரம்பித்தது 1972ல். ஒரு வருடம் கழித்து சென்னைக் கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தினர். அதற்கு முன்பாக நடைபெற்ற ஊர்வலத்தில் மகளிர் அணிக்குத் தலைமை தாங்கியது வி.என். ஜானகிதான். அப்போது எடுக்கப்பட்ட திரைப்படத்தை அ.தி.மு.க. (ஜா) தனது தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள போகிறது. ஜெயலலிதாவின் பிரச்சாரத்தை முறியடிக்க இது உதவும். அது போலவே ஒவ்வொரு திருமண நாளிலும் எம்.ஜி.ஆர். வி.என். ஜானகியை அழைத்துக்கொண்டு மறைந்த பட அதிபர் சாண்டோ சின்னப்பா தேவரிடம் ஆசி பெறுவது வழக்கம். அப்போது எடுக்கப்பட்ட படங்களையும் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளதிட்டமிடப்பட்டுள்ளது.எம்.ஜி.ஆரின்மனைவி என்ற உரிமையை நிலைநாட்டவும், வாக்காளர்களின் அனுதாபத்தைப் பெறவும் இது உதவும் என்று வி.என். ஜானகி நம்புகிறார்.

# மாதை சற்பழித்ததாய்

சிங்கப்பூர், மே 19

லாட்டரி சீட்டு வாங்கும் சாக்கில் அடுக்கு வீட்டில் தன் அம்மா வபதில் இருந்த 35 வயது மாது ஒருவரை 16 வயது பையன் ஒருவன் கற்பழித்துவிட்டான் என்று உயர்நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு குழந்தைகளின் தாய் அந்த மாது, மார்சிலிங் டிரைவிலுள்ள தனது அடுக்கு வீட்டில் 1985 ஜனவரி 2ந்தேதி தான் தனியே இருந்தபோது வீட்டுக் கதவு தட்டும் சப்தம் தனக்கு கேட்டதாக அந்த மாது கூறினார்.

வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த கே. மகேந்திரன் நான்கு இலக்க லாட்டரி தனக்கு வேண்டும் என்று கூறினான். அந்த மாது கள்ளத்தனமாக லாட்டரி விற்பனை செய்துவந்தார். பையனை வீட்டுக்குள் நுழைவதற்கு அவர் அனுமதித்தார். லாட்டரி வாங்குவதற்காக அவன் ஒரு வெள்ளி கொடுத்தான்.

வீட்டிலிருந்து மகேந்திரனை வெளியே அனுப்புவதற்காக மாது கதவை திறந்தபோது அவன் அவரை பின்புறமாக இருந்து இறுக்கமாக பிடித்துக்கொண்டான். பலவந்தமாக படுக்கை அறைக்கு இழுத்துச் சென்றான்.

உதவிக் கோரி கூச்சலிட்டுப் பார்த்தார்! போராடவும் செய்தார் மாதினால் பையனை சமாளிக்க முடியவில்லை. படுக்கை அறைக்கு அவர் எப்படியோ மாதை கட்டாயப்படுத்திகொண்டுபோய்விட்டான் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் இந்தக் கட்டத்தில் நீதிமன்றத்திலிருந்து பார்வையாளர்கள் வெளியேற்றப்பட்டு விசாரணை ரகசியமாக நடந்தது. முன்னதாக டிபிபி திரு லிசிங் லிட் படுக்கை அறையில் வைத்து மகேந்திரன் மாதை கற்பழித்துவிட்டான் என்று கூறினார்.

நீதிபதி திரு டி எஸ் சின்னதுரை முன்னிலையில் விசாரணை நடக்கிறது.

www.tamilarangam.net



# அகஸ்தியரின் பேட்டி

> "எம்.பி.யானால் பெரிய பெரிய மந்திரிகளோட எல்லாம் பழகலாம்; பணக்காரங்களை எல்லாம் சந்திக்கலாம்"

## இப்பத்தான் அரசியலுக்கு வந்தேன் —தீபா

சமீப காலமாக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியிருக்கும் நட்சத்திரம் தீபாவைப் பேட்டி காண நினைத்தோம்.

மறுநாள் மூன்று மணிக்கு நார்த் போக் சாலையிலுள்ள தீபா வீட்டுக்கு, போட்டோ கிராபருடன் சென்றேன்.

போட்டோ கிராபரைப் பார்த்த பிறகுதான் தீபாவுக்குச் சிரிப்பு வந்தது. அதன் பிறகு பேட்டியை ஆரம்பித்தேன்.

"சினிமா வாய்ப்புக் குறைந்து போய் விட்டதால்தான் நீங்கள் அரசியலுக்கு வந்து விட்டதாகச் சிலர் சொல்கிறார்களே?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை இப்போதும் சவுத் லாங்வேஜ் படங்களில் எல்லாம் பிஸியாக நடித்து வருகிறேன். பிரதமரின் கரத்தை வலுப்படுத்தவும் சேவை பண்ணவுமே தான் அரசியலுக்கு வந்தேன்."

"எம்.எல்.ஏ.வுக்கு போட்டியிடுவீர்களா? எம்.பிக்கு நிற்பீர்களா?"

"எம்.பி.க்குத்தான்"

"ஏன்?"

"எம்.எல்.ஏ.வாகி என்னா யூஸ். மெட்றாஸையே தான் சுத்தணும். எம்.பி.யானால் டெல்லிக்குப் போவலாம். பெரிய பெரிய மந்திரிகளோட எல்லாம் பழகலாம். பணக்காரங்களை எல்லாம் சந்திக்கலாம். இங்கிருந்தா மறுபடியும் மறுபடியும் உங்களையேதான் பார்க்கணும்!" புருவங்களை உயர்த்திபடியே சொன்னார், தீபா.

"பார்லிமெண்டின் இப்போதைய எதிர்கட்சித் தலைவர் யார்னு தெரியுங்களா?"

"யாராயிருந்தால் எனக்கென்ன? அவரையெல்லாம் எனக்குத் தெரியாது"

"உங்களுக்குத் தெரிந்த அரசியல் தலைவர் யார்?"

"ராஜீவ் காந்தி"

"வேறு யாரையாவது தெரியுமா?"

"இந்திரா காந்தியைத் தெரியும்!"

"காங்கிரஸ் இ. பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"எனக்கு காங்கிரஸ் 'ஐ'—யைப் பற்றி தான் தெரியும் காங்கிரஸ் 'இ' —ன்னா என்னாங்க?"

"இந்திரா காங்கிரஸைத் தான் இ. காங்கிரஸ் என்று சுருக்கமாகச் சொல்வது."

"ஓ... அப்படியா?"

"மதுரையில் உங்க ரசிகர்மன்றத்தில் 10 லட்சம் 'உறுப்பினர்கள் இருக்காங்களாமே! மேயருக்கு போட்டியிடுவீங்களா?

"மேயர்னா என்னாங்க?"

"மாநகராட்சியின் தலைவர் (மக்களால் தேர்தெடுக்கப்படுபவர்) தான் மேயர்".

"அப்படியா... அதைப் பற்றி ரசிகர் மன்றத்துடன் கலந்தாலோசித்து பின்னர் முடிவை அறிவிப்பேன்."

"ஃபேர்பாக்ஸ், போர்பாக்ஸ் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"என்னா நீங்க. அரசியல் கேள்வி மட்டும் கேட்கப் போறதா சொல்லிவிட்டு, இந்த கேள்வியை எல்லாம் கேட் கிறீங்க?" என்று தீபா சிணுங்கவே, வேறு கேள்வி கேட்டோம்.



"வைஜயந்திமாலாவுக்குப் போட்டியா அரசியலில் நீங்கள் நுழைந்திருக்கிறீர்களா?"

"அவுங்க எல்லாம் வாயாலதான் பேசுவாங்க நான் எதையும் செஞ்சி காட்டுவேன். நான் யாருக்கும் போட்டியில்ல.

"கட்சியில சேர்ந்து கார்டு வாங்கிட்டீங்களா?"

"உறுப்பினர் கார்டெல்லாம் வாங்கிட்டேன். எங்ககெடக்குன்னு தெரியல. தேடிப்பார்க்கல நான்."

"உங்க எதிர்காலத் திட்டம் என்ன?"

"என்னோட பிறந்த நாளுக்கு ரசிகர்மன்றம் சார்பா ஏழைகளுக்கு இலவசத் திருமணம் செஞ்சி வைக்கப்போறேன். இரத்த தானம் பண்ணப்போறோம்."

"இதுவரைக்கும் இப்படி ஒவ்வொரு பிறந்த நாளிலும் செங்சிருக்கீங்களா?"

"இல்ல. இந்த வருஷத்திலேயிருந்துதான் செய்யப் போறேன். அப்புறம், தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு கிராமத்தைத் தத்தெடுத்துக்கப் போறேன். ரசிகர்மன்றத்து சார்பாய் அந்தக் கிராமத்திற்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, —தன்னிறைவு பெறச் செய்து இந்தியாவிற்கே அந்தக் கிராமத்தை முன்மாதிரியான கிராமமாய் உருவாக்கப் போறேன்."

"இவ்வளவு திறமைசாலியான தாங்கள் எப்போதோ அரசியலுக்கு வந்திருக்கலாமே! இவ்வளவு தாமதம் ஏன்?"

"எனக்கு ஓட்டுப் போடற வயசு இப்போதான் வந்தது. அதனால்தான் நான் அரசியலுக்கு வயசில்லாததால் முன்பே வரவில்லை."

—சங்குசக்கரசாமி

பட்டினியாக இருக்கும் ஒருவன் உணவுக்காக் எதையும் செய்யத் தயாராக இருக்கிறான்.

—லாஃபோன்டேன்

மதிய உணவுக்குப் பிறகு இரண்டு நிமிடமா சாய்ந்து கொள். இரவு உணவுக்குப் பிறகு இரண் அடியாவது நட.

—எகிப்து பழமொ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நாவலுக்கு கதை, பாத்திர வார்ப்பு, அமைப்பு ஆகிய மூன்று அம்சங்களும் முக்கியம். இவற்றில் எதனைத் தவிர்த்தாலும் நாவலாகிவிடாது. இந்த மூன்று அம்சங்களும் இணைந்துகொள்ளும்போது நாவலுடைய வெற்றி எதனில் அடங்கியிருக்கிறது என்றால், கரு, பாத்திரம் ஆகியன எந்தக் களத்தில் கதை உருவாகின்றதோ அந்தக் களத்தில் உலவும் பாத்திரங்கள் அந்தக் களத்தின் இயல்புடனும் பாத்திரங்களின் குண இயல்புடனும் நாவலை நகர்த்திக் கதை சொல்லும் உத்தியை எழுத்தாளன் தான் விரும்பும் கோணத்தில் அமைத்துக் கொள்ளலாமே தவிர, மூன்று அம்சங்களையும் விலக்கிவிட முடியாது. எனினும், இந்த மூன்று அம்சங்களிலும் கதைக்கருவே முக்கியம். உதாரணமாக நாவலாசிரியன் ஒரு பிரச்சினையை மையமாக வைத்து அதற்கு நாவல் வடிவம் கொடுப்பதற்கு முன், அந்தப் பிரச்சினையை எவ்வாறு நோக்குவது, எப்படித் தீர்வு காண்பது என்ற ஒரு தீர்மானத்துடன் அவன் தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் முக்கிய அம்சமே கதைக்கரு ஆகும். இதனை வைத்தே களத்தின் பாத்திரங்களும், பாத்திரங்களின் குண இயல்புகளும் அவன் கையாளும் உத்திகளுக்கு ஏற்றவாறு நாவலாக விரிகின்றன."

## ஆக்க இலக்கியம்

ஆக்க இலக்கியங்களுக்கு விமர்சனங்கள் எந்தளவுக்கு உதவுகின்றன; உங்கள் சிருஷ்டிகள் விமர்சிக்கப்படும்போது நீங்கள் அவற்றை வரவேற்பதுண்டா?

"உண்மையைச் சொல்லப் போனால் விமர்சனமும் ஓர் ஆக்க இலக்கியம்தான். இத்துறைக்கு விமர்சன இலக்கியம் ஓர் உன்னத உந்துசக்தி வாய்ந்தது. எனது இலக்கியப் படைப்புக்களை யார் யார் விமர்சிக்கின்றார்களோ அவர்களை எனது அத்தியந்த நண்பர்களாகக் கருதுபவன். உண்மையில் எனது வளர்ச்சிக்கு இது பெரிதும் துணை புரிந்துவருகிறது. எனது படைப்புக்களைப் பற்றி எதுவுமே சொல்லாமல் மௌனம் சாதிப்பவர்களும், விமர்சிக்காமலே விடுபவர்களும் எனது இலக்கிய வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்காதவர்களென்றே

## விமர்சன வகை

விமர்சனங்களில் ஆக்க விமர்சனம், அழிவு விமர்சனம், கண்டன விமர்சனம், நேரிய விமர்சனம் ஆகிய நான்கு வகைகள் உண்டு. இவற்றில் ஆக்க விமர்சனமே இலக்கியத்தைச் செழுமைப் படுத்துகிறது. கண்டன விமர்சனம், அழிவு விமர்சனம் இரண்டும் இலக்கிய விமர்சனங்களுக்குப் புறம்பானவை. இவை எழுத்தாளனின் இலக்கியங்களை விடுத்து தனிப்பட்ட குண இயல்புகளையே விமர்சித்து நிற்கின்றன. பக்கம்சார்ந்த அல்லது சந்தர்ப்பவாத இலக்கியங்களும் இலக்கிய வளர்ச்சிக்கு ஊறு விளைவிப்பன.

எனது படைப்புக்கள் பல கோணங்களிலும் பல விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டதுண்டு.

ஆக்க இலக்கியவாதிக்குச் சமுதாயத்தைப் பற்றிய பொறுப்பு எத்தகையதோ, அதைப் போன்றே இலக்கியங்களை விமர்சிக்கும் விமர்சகருக்கும் பெரிய தொரு பொறுப்புண்டு.

விமர்சனம் என்பது கூரிய விளிம்பில் கால்வைத்து மிக்க அவதானமாக நடக்கும் ஒரு கைதேர்ந்த கலைஞனின் வித்தை போன்றது. எனவே விமர்சகர்களுக்குத் தனிப்பட்ட விருப்பு வெறுப்பற்ற நேரிய நிதானம் வேண்டும்.

தனது இரசனைக்கு உட்பட்ட இலக்கியம் மட்டுமே வாசகரது இரசனையாகக் கொள்வது சரியான கண்ணோட்டமுள்ள விமர்சனமாகாது. அவன் ஆக்க இலக்கியவாதியைப் போன்று சமுதாயக் கண்ணோட்டத்தில் முழுமையான தெளிவு இருந்தாலே விமர்சிக்கும் தகுதி உடையவனாகின்றான். விமர்சனக் கலையின் உயர்வை இதில் ஈடுபட விரும்புபவர்கள் உணர்தல் நன்று.

இதன் உண்மையான அர்த்தம் முரண்பட்ட சமுதாய அமைப்புக்குள் இலக்கியங்களும் முரண்பட்ட கருத்துருவங்களைத் தாங்கி வெளிவருவது போலவே விமர்சனங்களும் அமைகின்றன என்பதாகும். உண்மை இப்படியிருக்க, இந்தக் கண்ணோட்டத்தைத் தவிர்த்து, சந்தர்ப்பவாத விமர்சனம் செய்வதென்பது சாத்தியப்படாத ஒன்று.

கலை கலைக்காக என்றும், கலை மக்களுக்காக என்றும் இருவித கண்ணோட்டமுள்ள படைப்புக்களுக்கும் ஒரே விமர்சகன் ஒரேவிதமாக விமர்சிப்பதால்தான் இவ்வித சந்தர்ப்பவாதப் போக்குகள்

## சிருஷ்டி நோக்கம்

சிறுகதை, நாவல், நாடகம் போன்ற ஆக்க இலக்கியங்கள் வாயிலாக நீங்கள் சாதிக்க விரும்புவதென்ன?

"நீதி, நேர்மை, சமத்துவம் சகோதரத்துவம் கொண்ட உலக வியாபித சமுதாயக் கோட்பாட்டை நான் பரிசுத்தமாக நேசிப்பவன். இந்த நோக்கில்தான் எனது இலக்கியங்களைப் படைத்துவருகின்றேன்.

மனிதனை மனிதன் சுரண்டாத, ஒரு மனிதனின் தயவில் மற்றொருவன் வாழக்கூடாத சுதந்திர சமுதாயத்துக்கு வழி அமைத்துச் செல்லும் நோக்கமுடையதாகவே எனது படைப்புக்களை அளித்து வருகின்றேன்.

மக்களிடையே வேரூன்றியுள்ள வேண்டாத மூடநம்பிக்கைகள், ஒருவனை ஒருவன் ஏமாற்றிப் பிழைக்கும் கயமைத்தனங்கள், இத்தகைய சமுதாய அமைப்பில் தோன்றும் 'திடீர்ப் பிரமுகர்களின் போலித்தனங்கள்— இவை போன்ற நாச சக்திகளை அம்பலப்படுத்துவதும், மக்களின் எதிரிகளை மக்களுக்கு இனங்காட்டி அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதும் எனது படைப்புக்களின் உள்ளடக்கம்.

எனது இலக்கியங்கள் கடந்த காலச் சம்பவங்களை எச்சரிக்கையாக நினைவூட்டுவதும், நிகழ்காலச் சம்பவங்களை விஸ்தரித்து அவர்களை நோக்க வைப்பதும், எதிர்காலத்தின் செப்பமான வாழ்வுக்கு முடிந்தவரை வழிகாட்டுவதையுமே குறிக்கோளாகக் கொண்டன.

அதேவேளை எமது மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றையும் கலாரசனையோடு விளங்குவதில் பல புதிய பரிசோதனை இலக்கியங்களையும் மக்களுக்காக அளித்துள்ளேன் என்பதில் ஓரளவு மனத் திருப்தியடைகின்றேன்."

சரித்திர நாவல்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? சமூக நாவல்கள் போன்று சரித்திர நாவல்களும் சமுதாயத்தில் தாக்கத்தை உண்டாக்குகின்றனவா?

"சமுதாய ஓட்டத்தின் வரலாற்றை சரித்திர நாவல்கள் பிரதிபலிக்கின்றன. எனவே இந்த நாவல்களும் சமுதாய மாற்றத்துக்கு உந்துகருவியாகத் திகழ்வதை நாம் நிராகரித்துவிட முடியாது. சமுதாயப் பிரச்சினைகளை வரலாற்றினூடாகவும் விஞ்ஞான

ரீதியாகவும் அணுகுதல் வேண்டும். இதற்கு இத்தகைய கண்ணோட்டமுள்ள சரித்திர நாவல்களே பெரிதும் துணை புரிகின்றன."

## உத்தி வகைகள்

கதைகளை நகர்த்துவதற்கு தாங்கள் எப்படியான உத்திவகைகளைக் கையாளுகின்றீர்கள்?

"கதைகளை உருவாக்கி நகர்த்துவதற்குச் சகல எழுத்தாளர்களுமே ஏதோ ஓர் உத்தியைக் கையாளவே செய்வர். பெரும்பாலான எழுத்தாளர்கள் எந்தக் களத்தில் எந்தக் கதையை வார்த்தாலும் ஒரே உத்தியையே கையாள்வர். அது அவரவர்களுக்கேற்ற பாணியாகும். அநேகமாக எனது கதைகளை நான் தேர்ந்தெடுக்கும் களம், கதை மாந்தர்களுக்கேற்ப, மாறுபட்ட வெவ்வேறு ரகமான உத்திகளை கையாள்கிறேன். இது ஒரு பரீட்சார்த்தம் என்றும் சொல்லலாம். இப்படிப் பல்வேறு உத்திகளில் கதையை நகர்த்துவதற்கு நுண்ணிய அணுகுமுறை தேவை.

அவ்வுத்திகள் இவ்வாறு அமைபவை—

ஆசிரியரே கதையைக் கூறுவது, கதை மாந்தர்களைக் கொண்டு அவர்கள் கூற்றாகக் கதையை நகர்த்துவது, பாத்திரங்கள் பேசும் மொழிவாயிலாகக் கதையை நகர்த்துவது, சம்பவக் கோவை மூலம் கதையை வளர்ப்பது, தன்னிலை, முன்னிலை, படர்க்கையாக ஆசிரியனே கதைமாந்தர்கள் வாயிலாகக் கதையைக் கூறுவது, எழும் பாத்திரங்களும் இன்றியே பாத்திரங்கள் பேசுவது போல் கதையை உருவாக்குவது, பாத்திரங்களும் ஆசிரியரும் இணைந்து கதையை நகர்த்துவது, பாத்திரங்களை ஆசிரியர் வியாக்கியானம் செய்யும் பாணியில் கதையை நகர்த்துவது, உவமானங்கள் மூலம் ஆசிரியனே கதையை நகர்த்துவது. நாவல்களிலும் பார்க்கச் சிறுகதைகளிலேயே இப்படியான உத்திகளை அதிகமாகக் கையாளுகின்றேன். 'பற்றி இலக்கியக்காரர்' இவ்வித உத்திகளைக் கையாள்வது அரிது."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'பற்றி இலக்கியம்' என்று எதனைக் குறிப்பிடுகின்றீர்கள்? அதனைச் சற்று விளக்குங்கள்?

"தானே கதையைச் சிருஷ்டிக்காமல், யாரோ சிருஷ்டித்த கதையை மறுபடியும் கதையாக எழுதும் எழுத்தாளர்களையே 'பற்றி இலக்கியக்காரர்' என்கின்றேன்.

கதைகளுக்கு நாட்— விமர்சனம் எழுதுவது வேறு, கதைகளையே மறுபடியும் கதைசெய்வது வேறு. கம்பன் காவியத்தை ராஜாஜி கதையாகச் சுருக்கி எழுதினர். இங்கே பெரும் காவியம் சுருக்கப்பட்டு உரைநடையில் கதையாக வடித்துத் தரப்பட்டது. இது பற்றி இலக்கியப் போக்கேயானாலும், இதில் எழுத்தாளன் தனித்துவம் மகத்தான முறையில் பேணப்பட்டுள்ளது. இதில் ராஜாஜியின் தனித்துவமும் மேதைத் மேதைத்தனமும் வெளிப்படுகின்றன. 'சக்கரவர்த்தி திருமகன்' நூல் ராஜாஜி அப்படித்தான் ஆக்கினர். இதனையும் ஒரு சிறந்த உத்தியாகக் கொள்ளலாம்

'சிலப்பதிகாரம்' என்ற காவியத்தையும் நமது ஈழத்து எழுத்தாளர் சொக்கன் 'சதி' என்ற தலைப்பில் தினகரனில் இரசிக்கத்தக்க வகையில் நாவலாக எழுதிவருகின்றார். இதுவும் ஒருவகை உத்தியே.

மகா பாரதத்தில் வரும் ஒரு சிறு சம்பவத்தைக் கருவாக எடுத்து 'போர்வை' என்ற தலைப்பில் நமது ஈழத்து எழுத்தாளரான என். கே. ரகுநாதன் ஓர் அருமையான கதை எழுதினர். இதுவும் ஓர் உத்திவகையே. இவ்வுத்திகளைக் கையாள்வதற்கும் தனித் திறமை வேண்டும்'"

உங்கள் இலக்கியங்கள் யாருக்காகப் படைக்கப்படுகின்றனவோ, அவை அவர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதுகின்றீர்களா?

"எனது இன்றைய இலக்கியங்கள் மட்டுமல்ல. ஆரம்பகாலப் படைப்புக்களும் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதற்குப் பலசம்பவங்களைக் கூறமுடியும். அவற்றையும் நான் தற்போது எழுதிக்கொண்டிருக்கும், 'எனது இலக்கிய வாழ்க்கை அனுபவங்கள்' என்ற நூலில் விரிவாகக் காணலாம். உதாரணமாக, ஒரு சிறு சம்பவத்தை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

## பாராட்டு விழா

மலையகம், யாழ்ப்பாணத் தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் கதாபாத்திரங்களாக இணைத்து எத்தனையோ சிறுகதைகள், நாவல்களை எழுதியுள்ளேன். இப் படைப்புக்களில் பிரதான பாத்திரங்களாகத் தங்களை இணைத்துக் கொண்டதால் மட்டுமல்ல, அப் பாத்திரங்கள்மூலம் சமுதாயப் பற்றையும் புதிய யுகத்தையும், புத்துணர்வையும் ஊட்டியதாகப் புரிந்துணர்வு கொண்ட பெருவாரியான மலையகத் தமிழ் முஸ்லிம் மக்கள் என்பால் அன்புகூர்ந்து, அன்னுடம் சந்தித்து, பாசத்துடன் பழகி, தங்களில் ஒருவனுக என்னையும் ஆக்கிக்கொண்ட சம்பவங்கள் ஏராளம். அவற்றில் இரண்டொன்றைக் கூறுகின்றேன்.

1966ம் ஆண்டு வாக்கில் மலையகத்து மக்களும் முஸ்லிம் மக்களும் தாங்கள் ஸ்தாபித்த 'மலையகக் கலை இலக்கிய சங்கத்தில் என்னை ஆலோசகராகவும் தலைவராகவும் நியமித்துக் கொண்டார்கள். 1968ம் ஆண்டு வெளியான 'தீ' என்ற எனது நூலை மலையகத்து அறிஞர் இரா. சிவலிங்கம் தலைமையில் கண்டி மாநகரத்திலும், கவிஞரும் எழுத்தாளரும் கல்லூரி அதிபருமான திரு. ஏ. வி. பி.கோமஸ் தலைமையில் மாத்தளை நகரத்திலும், அங்குவாழ் மலையக யாழ்ப்பாண, முஸ்லிம் மக்கள், இணைந்து வெளியீட்டு விழாக்களும், பாராட்டு விழாக்களும் நடத்திச் சிறப்பித்தார்கள். 'தீ' என்ற அந்த நூலிலும், தொழிலாளவர்க்கத்தின் விழிப்புணர்வுகளைப் பிரத்தியட்சப் படுத்தியமையால் அதன்பால் இவர்கள் ஈர்க்கப்பட்டதன் விளைவே அவர்கள் காட்டிய இந்தப்பாச உணர்வு என நம்புகின்றேன்.

1960ம் ஆண்டு தினகரனில் வெளியான எனது குறுநாவலை, கவிஞர் கண்ணதாசன் தனது இலக்கிய சஞ்சிகையான 'கண்ணதாசன்' ஆண்டுமலரில் மறுபிரசுரம் செய்தார். 1975ம் ஆண்டு வாக்கில் இது வெளிவந்தது. யாழ்ப்பாணக் கிராமத்துச் சூழலை மையமாக வைத்து எழுதப்பட்ட குறுநாவல், அது."

## ஈர்த்த அறிஞர்கள்

உங்களை ஆகர்ஷித்த இலக்கிய கர்த்தாக்கள்— எழுத்துலக அறிஞர்கள் பற்றிச் சற்றுக் கூறினால் பயனுக இருக்குமெனக் கருதுகின்றேன்...?

"இதனைப் பல்வேறு வகையாக அர்த்தப்படுத்தலாம். இவ்வகையில் இலக்கியவாதிகள் அறிஞர்களாக லியோ டால்ஸ்டாய், ரவீந்திரநாத் தாகூர், மாக்ஸிம் கார்க்கி, ஷேக்ஸ்பியர், இங்கர்சால், வால்டேயர். பெர்னுட்ஷா, எமிலிஸோலா, ரூஸோ, ஜீன் மெல்லியர், மாப்பஸான், ஹெமிங்வே, மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, மாயாகோவ்ஸ்கி, ட்ரொஸ்க்கவஸ்க்கி மகாகவி சுப்பிரமணிய பாரதியார், திருவள்ளுவர், புதுமைப்பித்தன், வெ. சாமிநாதசர்மா, வி. ஸ. காண்டேகர், திருவாரூர் வி. கல்யாணசுந்தரமுதலியார் (திரு. வி. க.) சாமி சிதம்பரனுர், ராகுலசாங்கிருத்தியாயன் (ராகுல்ஜீ), சிதம்பரரகுநாதன், கு. ப. ராஜகோபாலன், டாக்டர் மு. வரதராஜன், ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி), வ. ராமசாமி ஐயர் (வ. ரா.), சுத்தானந்த பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை, தி. ஜானகிராமன், பி. எஸ். ராமையா, சு. சி. செல்லப்பா, க. நா. சுப்பிரமணியம், கு. அழகிரிசாமி, தகழி சிவசங்கரம்பிள்ளை, ஏ. கே. அப்பாஸ், பிச்சமூர்த்தி, பி. கேசவதேவ், ல. ச. ராமாமிர்தம், வித்தன், வல்லிக்கண்ணன், சங்கராம், பி. எம். கண்ணன், ஜெகசிற்பியன், ராஜம் கிருஷ்ணன், ஆர். சூடாமணி, அநுத்தமா, சோமு, ஜெயகாந்தன், டி. செல்வராஜ், சி. பி. சிற்றரசு, அசோகமித்திரன், சுந்தரராமசாமி, இந்திரா பார்த்தசாரதி ஆகியோரை முக்கியமாகக் குறிப்பிடலாம்."

## பெண் எழுத்தாளர்

ஈழத்து இலக்கியக் களத்தில் பெரும்பாலும் ஆண்களே இலக்கியங்களைப் படைத்துள்ளதாகப் பொதுவில் கருதுவதாகப் படுகிறது. பெண் எழுத்தாளர்கள் பற்றிப் பேசப்படுவதில்லையே...?

"இந்திய சுதந்திரப் போராட்ட எழுச்சி அலையில் இலங்கை அரசியல் சுதந்திரம் பெற்றதேயன்றி, தியாகம் செய்து பரிச்சயப்பட்டதல்ல. இதனடியாக எமது இனத்தின் கலை, கலாசாரம், பண்பாடு பழக்க வழக்கங்கள் காரணமாக எமது தமிழ்ப் பெண்கள் பொதுஸ்தாபன அமைப்புக்களில் பங்களிக்காமல் வாழ்ந்து பழக்கப்பட்டமையால் அவர்களுக்கு மக்களுடன் உறவாடும் சந்தர்ப்பம் அரிதாகவே இருந்துவந்தது. இந்த வரலாற்றினூடாகவே இதனையும் அலசவேண்டும் என்றபோதும் 1956ம் ஆண்டுக்குப்பின் தேசிய இனங்களின் விழிப்புணர்ச்சி காரணமாக நமது பெண்களும் மெல்ல மெல்லப் புத்துணர்வு பெறலாயினர். இக்கால கட்டத்தில்தான் ஈழத்துத் தமிழ் இலக்கியத்திலும் தேசிய உணர்வும் பற்றுதலும் தோன்றின. இந்தத் தேசிய எழுச்சி காரணமாகச் சில பெண்கள் ஈழத்து இலக்கியத்துறையில் பிரவேசித்தனர். இது மிகவும் வரவேற்கத்தக்கதே.

இந்தவகையில் மௌனகுரு சித்திரலேகா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், குறமகள் (வள்ளிநாயகி) மனோன்மணி சண்முகதாஸ், அன்னலட்சுமி ராஜதுரை, புதுமைப்பிரியை, நா. பாலேஸ்வரி, நயீமாபஷீர், பவானி, யோகா பாலச்சந்திரன், கோகிலா மகேந்திரன், பூரணி, கமலினி செல்வராசன் மண்டூர் அசோகா, சிவமலர் செல்லத்துரை, மண்டதீவு கலைச்செல்வி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்."

## நகைச்சுவை

நகைச்சுவை இலக்கியங்கள் பற்றித் தங்கள் கருத்தென்ன, அவை சமுதாயத்திற்குகந்த பங்களிப்பைச் செய்வதாகக் கருதுகின்றீர்களா?

"படைப்பிலக்கியத் துறையில் நகைச்சுவையும் ஒரு காத்திரமான உத்தியே. நகைச்சுவை இலக்கிய வடிவங்களில் சரியான கருத்துருவங்கள் பதியப்படுவதில்தான் இவற்றின் வெற்றி அல்லது சிறப்பு தங்கியுள்ளது.

இன்று அர்த்தமில்லாத கருத்துருவமற்ற நகைச்சுவைகளையும் அதிகமான வாசகர்கள் விழுந்து ரசித்துச் சிரிக்கிற போக்கை அவதானிக்க முடிகிறது. நகைச்சுவையானது சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கும் மாத்திரமன்றி செயலில் தூண்டுவதற்கும் கைக்கொள்ளப்படும் ஓர் உன்னத உத்தி.

நானறிந்தவரை தமிழில் நகைச்சுவையால் சிரிக்க— சிந்திக்க— செயல்படத் தூண்டிய கருத்துரைகளை வழங்கியவராக, முப்பது ஆண்டுகளாக அக்காலத் தமிழ் சினிமாவில் கொடிகட்டிப் பறந்த நகைச்சுவை மன்னன் என். எஸ். கிருஷ்ணன் அவர்களையும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ன்பு 'வாஷிங்டன் திருமணம்' ன்ற நகைச்சுவை நா வ லை ழுதிய திரு. சா. வி.யையும் றிப்பிடலாம். வ.ரா-போன்ற லக்கிய அறிஞரே புதுமைப்

த்தன், பாரதிபோன்றவர் ளைத் தனது பேனுச் சித்த ங்களாக எழுதிய நூலில் ன் எஸ்- கே- யையும் ஒரு மதாவியாகக் குறிப்பிட் மை இங்கு கவனத்தில் காள்ளத்தக்கது.

நவீன சிந்தனைகளைப் பிறர் னம் நோகாமல் இடித்து ரக்கும் பாங்கிற்கு 'வாஷிங் ன் திருமணம்' என்ற சா.வி ின் நாவல் சான்று.

தமிழகத்தின் கல்கி,தேவன் டோடி ஆகிய ஆற்றல் ாய்ந்த எழுத்தாளர் க ளும், ருத்திகா போன்றவர் களும் கைச்சுவை இலக்கியங்களைப் டைத்தனர். நமது எழுத் ாளர்களான ரீ. பா க் கி ய ாயகம் உதயணன் பொ. ண்முகநாதன் போன்றவர் ளும், 'சிரித்திரன்' ஞானசுந்

ரமும் இந்த இலக்கிய ளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுவாக இலக்கியவாதி ளிடம் கவிதா நெஞ்சமும் கைச்சுவை உணர்வும் இயல் ாகவே இருக்க வேண்டும். ந்த அம்சங்கள் இல்லா ிட்டால் அவனல் பூரணத் வத்தைக்காண -முடியாது.'

## கருத்தோட்டம்

இலக்கியக் கண்ணோட்டம் முதாயக் கண்ணோட்டம், முதாயப் பார்வை என் றல்லாம் அதிகமாக உங்கள் ருத்தோட்டங்களில் பிரஸ் ாபித்து வருகின்றீர்கள். வை பற்றித் தெளிவுபடுத்து ீர்களா?

"மனித குலம் தோன்றி தா" அன்றேல் 'தோற்றுவிக் க்க'ப்பட்டதா என்கிற ர்ச்சையின் போது, சமு ாயத்தில் நேரெதிர் முரண் ாடான தத்துவங்கள், கோட்பாடுகள் சித்தாந்தங் கள் சமுதாயத்தை விமர்சிக்க முனைகின்றன. கற்பனையால் உருவகித்து அதனை முதலாகக் கொண்டு சமுதாயத்தைப் பார்க்கும் கண்ணோட்டம் ஒன்று. பொருளை அதாவது பௌதிகத்தை முதலாகக் கொண்டு சமுதாயத்தை நோக்கும் கண்ணோட்டம் மற்றொன்று. எந்த ஓர் இலக் கியவாதியோ, விமர்சகனோ இவ்விரண்டு சமுதாயக் கண் ணோட்டங்களில் ஒன்றையே னும் தழுவியே இலக்கியம் படைக்கின்றான்.

தாம் அறியாவற்றையே கற் பனையால் உருவகித்துக் சித் திரித்து சமுதாய த் தை ப் பார்க்கும் இலக்கியவாதிகளைக் 'கற்பனவாதிகள்' என்றும், சரித்திர விஞ்ஞான ரீதியாக சமுதாயத்தை நோக்கும்

இலக்கியவாதிகளை, 'யதார்த்த மெய்யியல்வாதிகள்' என்றும் வகுக்கலாம். இவ்வாறு மாறு பட்ட இருவேறு சமுதாய அமைப்புக்களையும், நேரெதி ரான இரண்டு சித்தாந்தங்களை யும் கொண்ட உலகில் கலை இலக்கியம் என்பது நிச்சய மாக ஓர் ஆயுதமே. கலை இலக்கியத்தின் பாத்திரம், பணிகள் பற்றிய மக்களின் கருத்துக்கள், கலாசாரத்தைப் பரப்புதல் சம்பந்தமான அடிப் படைப்பிரச்சினைகள் பற்றிய மக்களது பார்வைகள் ஆகி யன குறித்து விவாதங்களும் வி ம ர் ச ன ங் க ளு ம் மாறுபட்ட கண்ணோ ட் ட ங் களிடையே நடைபெறுவது இயல்பு.

## சார்புடைமை

ஆக்கபூர்வமான இலக்கிய வாதியின் சார்புடைமை ஒரு போதும் தானுகத் தோன்றுவ தில்லை. வாழ்க்கைக் கொந் தளிப்பிலே அது உருவாக்கப் படுகின்றது.

நீண்ட காலமாகச் சேக ரிக்கப்பட்ட அனுபவத்தின் விளக்கமும் தன்னிச்சையான தேர்வும் கலந்ததன் விளைவே, சார்புடைமை ஆகும். இலக் கியவாதியின் அச்சார்புடைமை அவனுடைய அகச் சுதந்திரத் துக்கு ஒரு அளவுகோல்.

இது தவிர்ந்தது உண்மை யான வரலாறல்ல என்னும் உண்மையை நோக்கின், இலக் கியங்களும் இலக்கியங்கள் சார்ந்த விமர்சனங்களும் எப் போதும் ஒவ்வொருசமுதாயத் துக்கான பிரசாரக் கருவி களாகவும், உந்து சக்திகளா கவுமே விளங்கி வருகின்றன. இதன் பின்னணியாகவே இலக்கியங்களையும் விமர் சனங்களையும் நோக்க வேண்டும். இதன் உண்மை யான அர்த்தம், இலக்கியங் களும் விமர்சனங்களும் வர்க் கம் சார்ந்து கையாளப்படு வதே."

'தொடர்ந்து சலியாது ஓய்வின்றி இலக்கியப் பணி யில் ஈடுபட்டுவருகின்றீர் களே, இது எவ்விதம் தங்க ளால் சாத்தியமாகின்றது?' எனக் கேட்டபோது, அவர் பூரண முகமலர்ச்சி அடைந்த வராக, 'நான் பற்றோடு காம் பற்றிய என் வாழ்க்கைத் துணைவியும், உறுதியான நம் பிக்கையுடன் ஏற்றுக்கொண்ட சமுதாய இயக்க இயல் தத்துவ சித்தாந்தமுமே' என்று உணர்ச்சி மயமாகப் பதிலளித்தார்.

(முற்றும்)

பேட்டிகண்டவர்:

**க. கணேசலிங்கம்**

*தினகரன் வாரமஞ்சரி 1985 ஆம் நவம்பர் மீ*

## பண்ருட்டியார் மவுசு

பண்ருட்டி இராமச் சந்திரனின் சொந்தத் தொகுதி யான பண்ருட்டியில் அரசியல் நிலை எப்படி உள்ளது தெரியுமா?

கடந்த பொதுத் தேர்தல் களில் மூன்று முறையாக தி.மு.க ஒன்றிய செயலர் டாக்டர் நந்தகோபாலை எதிர்த்து நின்றார். வெற்றி கண்டார். பண்ருட்டி இராமச்சந்திரன். தற்போது தேர்தலில் நிற்க போவதில்லை என்றும் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்.

வன்னியர் போராட்டத்தின் போது இவர் நடந்து கொண்ட விதம், பண்ருட்டியிலேயே இவரது செல்வாக்கு வீழ்ச்சி யடையக் காரணமாகி விட்டது. இந்நிலையில் புலியூரைச் சேர்ந்த அ. தி. மு. க. (ஜா) ஒன்றிய செயலர் வேணு கோபால் இராமச்சந்திரனை வீழ்த்துகிற பணியில் ஈடுபட்டு வருகிறார். பண்ருட்டி நகர அ. தி. மு. க. (ஜா) செயலர். காத்தவராயனும் எம். எல். ஏ. சீட்டு வாங்கி, இராமச்சந்திரனை தோற்கடிக்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். இவர்களைப் போலவே பண்ருட்டி திமுக ஒன்றிய செயலருக்கு நின்று தோற்ற கலிய பெருமாள், நெய் வேலு அசோகன், பண்ருட்டி நகர சபை தலைவர் மணி, தி. மு. க. மாவட்ட செயலருக்கு நின்று தோற்ற நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி போன்ற தி. மு. க. பிரமுகர்களும் இராமச் சந்திரனை ஒழிப்பதில் தீவிரமாகி யுள்ளனர். இதையெல்லாம் உணர்ந்து கொண்ட பண்ருட்டி இராமச்சந்திரன் சாமர்த்திய மாக தன் சகோதரர் சி. குப்பு சாமி என்பவரை பண்ருட்டியில் எம். எல். ஏவுக்கு நிறுத்த முடிவு செய்து விட்டார். தற்போது பண்ருட்டி பகுதியில் இந்த குப்புசாமிக்கு "இளையவர்" என்றுதான் போஸ்டர்களே ஒட்டப்படுகிறது. தம்பியை தயார் செய்து விட்டு அரசியலை விட்டு ஒதுங்குவது போல் நடித்து கொண்டிருக்கிறார் இராமச் சந்திரன். பண்ருட்டியிலுள்ள காங்கிரஸ் எந்த விதத்திலும் இராமச்சந்திரனுக்கு கை கொடுக்காது என்பதும் உறுதி யாகியுள்ளது. ஏனெனில் 77ல் காங்கிரஸ் தனித்து நிற்கும் போதேகாங்கிரஸ் பெற்றமொத்த வாக்குகள் 1250 தான். தொடர்ந்து வந்த தேர்தல் களிலும் காங்கிரசாரின் வாக்கு கள் தி. மு. க. விற்கே விழுந் திருக்கிறது. ஆக ஜெயலலிதா காங்கிரஸ் உறவு பண்ருட்டிக்கு சாதகமில்லை.

உன்னுடைய குடும்ப இரசியங்களை மறைத்து வை.
—தேல்ஸ்

இரகசியமாக வைத்துக்கொள்கிறேன் என்று ...ற்றவர்களிடம் உருகி அளிக்கவர்களிடமிருந்து நான்

உன்னுடைய இரகசியத்தை மற்றவர்கள் வெளி யிடாமல் இருக்கவேண்டும் என்று விரும்புவாயானால் முதலில் அதை உனக்குள்ளே மறைத்து வைக்க

www.tamilarangam.net






கடந்த 4ம் தேதி 'ஜெ' கட்சியின் அலுவலகம் முன்னால் ஒரே கூட்டம்.

என்ன தான் நடக்கிறது என்று நேரில் போனோம்.

நெடுஞ்செழியன் நறுக்குத் தெரித்தார் போல் பத்தரை மணிக்கே ஆஜர்;- உக்கம்சந்த் பால்கனியில் நின்றபடி, கழுத்து முறுக்கு செயின் பளபளக்க நெடுஞ்செழியனுக்கு ஒரு சலாம் போட நெடுஞ்செழியன் அவரை கவனிக்க முடியாதபடி கூட்டம் நெருக்கித்தள்ளியது.

போஸ்டரில் வாழ்த்துரை வழங்குவதாகப் போடப்பட்டிருந்த லிஸ்டில் எஸ்.டி.எஸ், அரங்கநாயகம், திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர் பண்ருட்டி, நெடுஞ்செழியன், நா.காமராசன் இப்படி ஏராளமான பெயர்கள்.

அரங்கநாயகமும், எஸ்.டி.எஸ்.சும் ஏற்கனவே வந்து ஜெயலலிதா வரவிற்காகக் காத்திருந்தனர்.கே.கே.எஸ்.எஸ்.ஆரின் கார் வாசலில் வந்து நின்றது; அவர் இறங்கியதும், மலரவன் மலர்ந்த முகத்தோடு 'வாங்கண்ணே' என்று கூப்பிட்டுக் கொண்டு வர——என்னய்யா கத்தி-கத்தி-கடைசியிலே கத்திப் பத்திரிகையைக் கொண்டாந்துட்டீங்களாக்கும் என்றதும்—"கத்தி பத்திரிகை இல்லேண்ணே நம்பக் கட்சிப் பத்திரிகை" என்று மலரவன் கூறியதும்- சிரிப்பு அலை.

கூட்டத்தில் நின்றவர்களை எல்லாம் வேர்வையால் குளிக்க வைத்து-முக்கால் மணிக்கு மேல் காக்க வைத்து கடைசியில் ஜெயலலிதா தன் வெள்ளை கன்டெசாவில் சரக்கென்று வந்து இறங்கினார்.

அடுத்த வினாடி பத்தாயிரம் சீன வெடிச் சரம். கொளுத்தப்பட அந்தத் தெருவே ஐந்து நிமிடம் அதிர்ந்தது. கோஷங்கள் கிளம்பியது ஜெயலலிதா தன் ரூமிற்குள் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் வந்த மூன்றும் நிமிடம், மாடியில் இருந்த உக்கம்சந்த், கீழே இறங்கி தன் காருக்குப் போனார். " என்னண்ணே அதுக்குள்ள கிளம்பிட்டீங்க" என்று ஒரு தம்பி வினவ——

"அம்மாவைப் பார்த்துட்டேன்" என்று கூறிவிட்டு வெளியேறியவர், வெயிலுக்கு இதமாக வெள்ளரிப் பிஞ்சை வாங்கித்தின்றுவிட்டுக் கார் ஏறினார்.

"எட்டுக்குப்பத்து" மேடையில் இரண்டே நாற்காலிகள், ஒன்று ஜெயலலிதாவுக்கு, இன்னொன்று நெடுஞ்செழியனுக்கு.

பாவம் அரங்கநாயகம் அண்ட் எஸ்.டி.எஸ். இருவருக்கும் மேடையில் அமர நாற்காலி இல்லை. உடனே மடக்கு நாற்காலி இரண்டு அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டு அந்த இருவரும், ஒரு ஓரத்தில் ஓரம்கட்டப்பட்டனர்.

முகத்தில் உலகமகா சோகத்துடன் அரங்கநாயகம் அமர்ந்திருக்க- கன்னத்தில் கைவைத்தபடி எஸ்.டி.எஸ் உட்கார்ந்திருந்தார்.

கோவைத்தம்பி மைக்கைப்பிடித்தார். வரவேற்புரை கூறியதும், நெடுஞ்செழியன் எழுந்து தலைமை உரை ஆற்றினார்.

பொது செயலாளர் (ஜெ) பேசியதும், அடுத்து அரங்கநாயகம், அடுத்து எஸ்.டி.எஸ், என்று அடுத்து பேசுபவர்கள் பெயர் பட்டியலை நெடுஞ்செழியன் அறிவித்தார்.

அடுத்து மரடிரேயில் செருகப்பட்ட வெள்ளி நிஜக் கத்தியை ஜெயலலிதாவிடம் தர அதை வாங்க ஜெயலலிதாவும், நெடுஞ்செழியனும் எழுந்து நின்ற போது, அரங்கநாயகமும்எஸ்.டி.எஸ்.சும்கேமிராவுக்குள் வராமல் தடுக்கப் பட்டனர். அந்தக் கோபத்தில் அவர்கள் இருவரும் நாற்காலியை விட்டு எழாமல் உட்கார்ந்தே இருந்தனர்.

இதைக் கவனித்த கோவைத்தம்பி, அவசர அவசரமாக அம்மையாரிடம் ஏதோ சொல்ல... அடுத்த வினாடி 'ஜெ'-'தள்ளிநில்லுங்க' எனறதும் எஸ்.டி.எஸ், அரங்கநாயகம் எழுந்தார்கள், கேமிரா வயிற்றில் எல்லோரும் ஐக்கியமானார்கள்.

ஜெயலலிதா பேசி முடித்ததும், தாங்களும் பேச அழைக்கப் படுவோம் என்று தொண்டையைக் கனைத்து சரி செய்து கொண்ட அரங்கநாயகம், எஸ்.டி.எஸ், கே.கே.எஸ்.எஸ்.ஆர். திருநாவுக்கரசு ஆகிய நால்வருக்கும் படு ஏமாற்றம். நெடுஞ்செழியன் அறிவிப்பை அலட்சியப்படுத்தி விட்டு அந்த நால்வருக்கும் பேச வாய்ப்பே தராமல் ஜெயலலிதா கிடுகிடு வென்று கீழே இறங்கிப் போய் விட்டார். நீண்ட நேரம் கையால் மைக்கைப் பிடித்தபடி திகைத்து நின்று கொண்டிருந்தார் அரங்கநாயகம்.

"என்னதான் இருந்தாலும் இப்படியா அவமானப் படுத்துவது" என்று கூட்டத்தில் ஒருவர் கூற——

"அடபோப்பா அந்த அம்மாவுக்காகத்தானேப்பா கூட்டம் வந்துருக்கு... எவ்வளவு நேரம் வியர்த்துக்கிட்டிருப்பாங்க. அதான் கிளம்பிட்டாங்க.. என்று இன்னொருவர் கூறினார்.

அந்த நால்வர் மீதும் நமக்கு உண்மையிலேயே பரிதாபம் ஏற்பட்டது... இப்படி ஒரு அவமானத்தைச் சந்திக்க விரும்பாமல் தானோ என்னவோ.. பண்ருட்டி கூட்டத்திற்கே வராமல் ஆப்சென்ட் ஆகிவிட்டார்.


— நிஷாந்தி

**உயிர்ப் பிராணிகள் எத்தனையோ இருக்கின்றன. அவை தங்கள் உணவைச் சுமந்து திரிவதில்லை. அவைகளுக்கும் உங்களுக்கும் இறைவன்தான் உணவளிக்கிறான். அவன் (அனைவரையும்) செவியுறுவோனாகவும் நன்கறிந்தோனாகவும் இருக்கிறான்.**

**தன் அறிவாலும் வீரத்தாலும் அடைந்ததை உண்ணும் மனிதனே உண்மையில் சாப்பிடுகிறவனாவான். அவ்வாறு இல்லாமல் வாலைக்குழைத்து நாய் கூட ஒரு கவளம் வாங்கித் தின்று வயிறு வளர்த்துவிடும்.**

www.tamilarangam.net












# வக்கீலைக் கொலை செய்து போலீசுக்கு வக்காலத்து வாங்கும் ஹெக்டே!

கர்நாடகத்தில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த மாநிலத்தின் போலீஸ் மந்திரியே முன் ஜாமீன் கேட்டுக் கோர்ட்டில் மனுச்செய்து பின்னர் ராஜினமாவும் செய்துவிட்டார். அவர் மேல் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் ஹெக்டே மந்திரிசபை கவிழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பரபரப்பான இந்தச் சம்பவங்களின் பின்னணி என்ன?

ஆகஸ்ட் 24, 1987. தமிழ்நாட்டில் உள்ள சேலத்துக்குப் பக்கத்தில் ஒரு நடுத்தர வயது ஆண் ரத்தக்காயங்களுடன் ரயில்பாதை அருகில் பிணமாகக் கிடந்தார். முகத்தில் கேரளரேகை! தமிழகப் போலீசின் சுறுசுப்பான விசாரணையில் கொலை செய்யப்பட்ட நபரின் பெயர் ரஷீது. தொழில் வழக்கறிஞர் என்று தெரியவருகிறது.

ஆகஸ்ட் 16-ந்தேதி காலைவரை பெங்களூரில் இருந்த ரஷீது, அதன் பின் மாயமாகி, 24-ந் தேதிதான் சேலத்தில் பிணமாக அகப்பட்டிருக்கிறார். கர்நாடக வக்கீல்கள் சங்கம் விஷயத்தைக் கேள்விப்பட்டதும் கர்நாடக போலீஸ் மந்திரி ஜலப்பாதான் தனிப்பட்ட விரோதம் காரணமாகப் போலீசை வைத்தே ரஷீதைத் தீர்த்துக் கட்டிவிட்டார் என்று புகார் கூறிப் பாரபட்சமில்லாத விசாரணையைக் கோரியது.

"கர்நாடகப்போலீஸ் பத்தரை மாற்றுத் தங்கம். எங்க போலீஸ் அமைச்சரும் குன்றுமணி அளவுக்குக்கூடக் களங்கம் இல்லாதவர்" என்று முதலில் வக்காலத்து வாங்கிப் பார்த்தார் முதலமைச்சர் ஹெக்டே! முடிவில் தன் 'யோக்கிய சிகாமணி'த் தனத்தை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் சி.பி.ஐ. (மத்திய புலனாய்வுத் துறை) விசாரணைக்கு உத்தரவிட்டார்.

இப்படியாக வழக்கு தமிழக போலீஸ், கர்நாடக போலீஸ் கரங்களில் இருந்து சி.பி.ஐ.க்குத் தாவியது. ரஷீது கொலை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் விபரமாகப் பெங்களூர் பத்திரிகைகளில் அடிபட்டன.

பெங்களூர் நகரம் மட்டுமல்ல, கர்நாடக மாநிலம் முழுவதுமே 'கல்லூரி' 'நன்கொடை' என்ற பெயரில் காசுக்காகக் கல்வியை விற்கும் வியாபார ஸ்தலங்கள் நிறைய உள்ளன.

இந்தக் கல்லூரிகளுக்கு மாணவர்களைப் பிடித்துவிட (பலான தொழிலைப் போல) தரகர்களும் உண்டு. அப்படிப்பட்ட தரகர்களில் ஒருவர் சாதசிவன். எத்தனை நாட்களுக்குத்தான் தரகுவேலையே பார்த்துக் கொண்டிருப்பது? போரடிக்காதா என்ன?

புரோக்கர் சாதசிவன் துணைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொண்டு பெங்களூரிலேயே அப்படிப்பட்ட 'பலான வியாபாரக் கல்லூரி' ஒன்றிரண்டை ஆரம்பித்து விட்டார். அப்புறம் என்ன? வியாபாரம் ஜெகஜ்ஜோதியாகப் பெருகிப் பணம் கொழிக்க ஆரம்பித்தது.

அந்த நேரத்தில்தான் ஆரம்பித்தது தகராறு! சதாவன் தொடர்புள்ள "சஞ்சய்காந்தி நினைவு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி"யின் நிர்வாகக் குழுவில் இருந்து அவர் வெளியே வீசிஎறியப்பட்டார்.

இதற்கு முக்கிய காரணமாக சதாசிவன் குற்றஞ் சாட்டியது கர்நாடக போலீஸ் மந்திரி ஜலப்பாவை! ஏற்கனவே கோலாரில் ஒரு மருத்துவக்கல்லூரி விவகாரம் தொடர்பாக கோர்ட் வரை போய்க் கடைசியில் ஜலப்பா ஜெயித்தார்.

இந்தச் சம்பவங்களை அடுத்து "என்னைக் கர்நாடகாவை விட்டே துரத்துவதற்கு ஜலப்பா முயற்சி செய்துவருகிறார்" என்று சதாசிவன் எல்லோரிடமும் புலம்பிவந்தார். சஞ்சய்காந்தி நினைவு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடர்பான கோர்ட் விவகாரங்களிலும் மற்ற வழக்குகளிலும் சதாசிவனுக்காக ஆஜராகி வாதாடியவர்தான் வக்கில் ரஷீது. கேரளாவில் இருந்து பணவாசனை காட்டி அவரைப் பெங்களூருக்கு அவ்வப்போது அழைத்துத் தனக்காக ஆஜராகச் செய்துவந்தார் சதாசிவன்.

ஆகஸ்ட் 14-ஆம் தேதி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கலாட்டா செய்ததாக 'ஹைகிரவுண்ட்ஸ்' ஸ்டேஷனின் போலிசார் ரஷீதைக் திடிரென்று கைது செய்தனர். அன்றே சொந்த ஜாமீனில் அவர் விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான பிறகு ரஷீது உள்ளூர் பத்திரிகை ஒன்றிடம் சென்று போலீஸ் ஸ்டேஷனில் தன்னைச் சித்ரவதை செய்ததாகவும், குண்டர்கள் சிலர் போலீஸ் ஆசீர்வாதத்துடன் தன்னைக்கொலை செய்ய

பண்ருட்டி ராமச்சந்திரனின் ஆரம்ப கால கா
]னை இப்போது காணோமே?

-எஸ்.ராஜா, அயன்புரம்.

‹தந்திரமாக உலவ விட்ட பொழுது கர்ஜித்தார்!

› காமராஜரின் பொற்கால ஆட்சி திரும்பவும் வரும்
என்று நீங்கள் நம்புகிறீர்களா?

-முரளிபாபு, நெய்வேலி-2.

காமராஜரின் ஆட்சி பொற்கால ஆட்சி என்பதே
தவறு. இதில் பழைய ஆட்சி மீண்டும் எதற்கு?

● இ.காங்கிரசினர், தமிழகத்தில் ஏற்படும் வன்முறைகளுக்குக் காரணமே தி.மு.க.தான் என்கின்றனரே!...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முயன்று வருவதாகவும் புகார் சொன்னார். இதே போலக் கர்நாடக வக்கீல்கள் சங்கத் தலைவரிடமும் சக நண்பர்கள் சிலரிடமும் அவர் சொன்னதாகக் கேள்வி.

இந்த நிலையில்தான் திடீரென்று ஆகஸ்ட் 16-ந் தேதி காலை ரஷீது காணாமல் போனார். 24-ந் தேதி தமிழக போலீசிடமிருந்து அவரது பிணம் பற்றிய தகவல் வந்தது.

ஹெக்டே உத்தரவிட்டபடி சி.பி.ஐ. விசாரணை நடத்திக் கடைசியில் பெங்களூர் போலீஸ்சர் ஆறு பேரையும், ரவுடிகள், ரஷீது கொலைசெய்யப்பட்ட லாட்ஜ் அதிபர்கள் உட்பட வேறு ஆறுபேரையும் குற்றவாளிகள் என்று அறிவித்துக் கைது செய்தது.

போலீசாரில் எஸ்.ஐ. உத்தப்பா, உதவி எஸ்.ஐ. கிருஷ்ணன் குட்டி நாயர், தலைமைக் காவலர்கள் (ஏட்டு) நாகராஜ், நாராயணப்பா, காவலர்கள் மோகன், பிரசன்னா ஆகியோர் அடக்கம்.

"ஆகஸ்ட் 15-ந் தேதி முழுவதும் கல்லூரி நிர்வாகம் ஏற்பாடுசெய்த குண்டர்கள் ரஷீதை வேட்டை நாயாகத் துரத்தித் துரத்திவந்தார்கள். பயந்து போன அவர் மறுநாள் காலை ரேணுகாச்சார்யா கல்லூரி மைதானத்தில் என்.சி.சி. அணிவகுப்பு நடை பெற்றுக் கொண்டிருந்த சமயம் சிலரை அணுகிக் காப்பாற்றும் படிக் கெஞ்சியிருக்கிறார். அவருடைய பட படப்பைப் பார்த்த கல்லூரி வாட்ச்மேன் உடனே 'ஹைகிரவுண்ட்ஸ்' போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். இங்கேதான் இரண்டு நாட்களுக்கு முன்னதாக ரஷீது தான் கொடுமைப் படுத்தப் பட்டதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஸ்டேஷனில் இருந்த சப்இன்ஸ்பெக்டர் உத்தப்பா துணைக்கு மூன்று காவலர்களுடன் ரஷீதை அவர் தங்கியிருந்த சந்தியா லாட்ஜிக்கு அனுப்பி வைத்திருக்கிறார். ரஷீது லாட்ஜில் தொடர்ந்து தங்கமறுத்துக் காலி செய்து கொண்டு மறுபடியும் 'ஹைகிரவுண்ட்ஸ்' போலீஸ் ஸ்டேஷனுக்கு திரும்ப, எஸ்.ஐ. உத்தப்பாவின் ஆலோசனையின் பேரில் சேஷாத்ரிபுரத்தில் உள்ள ஹோட்டல் 'சூர்யபிரகாஷில் மாலை 5.50க்கு அறை எடுத்திருக்கிறார் — துணைக்கு இரண்டு 'ஏட்டு'க்கள் வேறு!

இந்த நேரத்தில்தான் போலீஸ் தூண்டுதலின் பேரில் கோவிந்த பிரசாத், பாண்டியன், சிவகுமார், ரங்கநாத் என்ற நான்கு ரவுடிகள் அங்கு வந்து "ஏட்டைய்யாக்கள்" துணையுடன் ரஷீதைக் கொடூரமாகக் கொலை செய்திருக்கின்றனர்.

ஏப்ரல் மாதம் 11-ந் தேதியன்று ரஷீத் கொலை தொடர்பாக அவர் கொலை செய்யப்பட்ட சூர்யபிரகாஷ் ஹோட்டல் அதிபர் போஜராஜும் அவர் மகனும் சி.பி.ஐ. யால் கைது செய்யப்பட்டனர். 12-ந் தேதி ஆறு போலீசாரையும், நான்கு ரவுடிகளையும் சி.பி.ஐ. கைதுசெய்தது. ஏப்ரல் 30-ந் தேதி போஜராஜ் பெங்களூர் நீதிமன்றத்தில் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

"ஆகஸ்ட 16-ந் தேதி எங்கள் ஓட்டலுக்கு வரும்போதே ரஷீத் சோர்வாக வந்தார். அவரைச் சிலர் பயங்கரமாகத் தாக்கிவிட்டதாகவும் ஓய்வு எடுப்பதற்காகவே ஓட்டலுக்கு வந்திருப்பதாகவும் அவருடன் வந்திருந்த போலீசார் சொன்னார்கள்.

இரவு 8 மணி' வாக்கில் ரஷீத்தின் அறையில் இருந்து மரண ஓலம் கேட்டதாக ஓட்டலின் வரவேற்பாளர் (ரிசப்ஷனிஸ்ட்) என்னிடம் கூறினார்.

ஹோட்டல் காவலரை அனுப்பிப்பார்த்த போது ரஷீத் பிணமாக படுக்கையில் இருந்திருக்கிறார். கொஞ்ச நேரத்தில் ஒரு கறுப்பு நிற அம்பாசிடர் காரில் வந்து பிணத்தை எடுத்துச் சென்றுவிட்டார்கள். ஊழியர்கள் பயந்து மிரண்டு போயிருந்த நிலையில் ஆகஸ்ட் 18-ந் தேதி சப்இன்ஸ்பெக்டர் உத்தப்பா வந்து 16-ந் தேதி ரஷீத் ரூமைக் காலி செய்துவிட்டுப் போனதாகச் சொல்லும்படி அச்சுறுத்திவிட்டுப் போனார். மீறி ஏதாவது சொன்னால் கொலைக் கேஸில் புக்செய்து உள்ளே தள்ளி விடுவேன் என்றும் மிரட்டினார்."

போஜராஜின் இந்த வாக்குமூலத்தில் அதே மாதம் 25-ந் தேதி இதுபற்றிப் போலீஸ் துணைக் கமிஷனர் நாராயணனிடம் புகார் செய்ததாகவும் குறிப்பிட்டு இருக்கிறார்.

சி.பி.ஐ. வட்டாரங்கள் ரஷீத்கொலை வழக்கில் துணைகமிஷனர் நாராயணனுக்கும் போலீஸ் அமைச்சர் ஜலப்பாவுக்கும் பங்கு இருப்பதாகக் கூறுகின்றன.

முதல்வர் ஹெக்டே தன் அமைச்சருக்கும் போலீசுக்கும் ஆதரவாக செயல்பட்டு வருகிறார். சி.பி.ஐ. யை அரசியல் உள்நோக்கத்துடன் மத்தியஅரசு பயன்படுத்தி வருவதாக அவரும், மந்திரி ஜலப்பாவும் குற்றம் சாட்டுகின்றனர். மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் சமீபத்தில் பெங்களூர் வந்திருந்த போது "யாராக இருந்தாலும் தயங்காமல் கைது செய்யுங்கள்" என்று சி.பி.ஐ. க்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்.

எது எப்படியோ, ஹெக்டேவுக்கு இருக்கும் தலைவலிகள் போதாதென்று இந்தத் தலைவலியும் சேர்ந்திருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த 'மிஸ்டர் பரிசுத்தம்' என்ற இமேஜ் கொஞ்சம் கொஞ்சமாக அவரை விட்டு விலகிக் கொண்டிருக்கிறது.

— சிரி.

## பாவம் ஜானகி கட்சி!

அ.தி.மு.க. (ஜா) அணியின் பொதுச் செயலாளர் (பொறுப்பு) ராகவானந்தம் தமிழக அரசுக்குச் சமீபத்தில் ஒரு கடிதம் எழுதினார். அதில் மறைந்த முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். சத்துணவு பரிமாறுவது போலவும், தெலுங்கு-கங்கைத் திட்டத்தில் கலந்து கொள்வது போலவும், நேரு சிலைத் திறப்பு விழாவில் கலந்து கொள்வது போலவும் எடுக்கப்பட்ட அரசுப் புகைப்படங்களின் பிரதிகளைத் தரும்படியும், அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி விடுவதாகவும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டு இருந்தார். ஆனால்தமிழக (கவர்னரின்) அரசு எம்.ஜி.ஆர். புகைப்படங்களைக்கட்சிப் பணிகளுக்குத் தர மாட்டோம் என்று கூறி மறுத்து விட்டது.



வாசுகி, விசாகப்பட்டணம்.

தி.மு.க ஆதரவால் தான் விடுதலை புலிகள் தமிழ்நாட்டில் சுதந்திரமாக உலவ முடிகிறது! அடிக்கடி ஆயுதப் பிரயோகங்களும் நடப்பது என்னவோ உண்மை!

• 'தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சியை வர விடமாட்டோம்' என்று ப.சிதம்பரம் கூறியிருப்பது பற்றி...?

-மு.மதிவாணன், அரூர்.

உள்துறை அமைச்சரின் எவ்வளவு வலுவானது என்

• 'அ.தி.மு.க (ஜா)வின் முதல் எதிரி காங்கிரஸ் தான் என்று ஆர்.எம்.வீ. பேசியுள்ளாரே?...

-எஸ்.சம்பத், வேலாயுதம்பாளையம்.

அதுவும் சரிதான். காங்கிரஸ் என்றாலும் ஜெயலலிதா என்றாலும் ஆர்.எம்.வீயைப் பொறுத்தவரை இரண்டும் ஒன்றுதான்.

• 'யாத்திரை... பாதை...' என்று போகிற போக்கைப் பார்த்தால் காங்கிரஸ் அரியணையை பிடிக்கும் போல் இருக்கிறதே?

-வி. [illegible]

www.tamilarangam.net

# ஆம்னி பஸ்களின் அடாவடித்தனங்கள்..!

மடாலை வேளைகளில் தப்பித் தவறிக் கூட சென்னை எழும்பூர் இரயில் நிலையம் பக்கம் கையில் ஒரு பையுடன் சென்று விடாதீர்கள்! எனது அனுபவத்தில் கூறுகிறேன். உங்களுடைய உடல் உங்களுடையது அல்ல! உடைமைகள் பறிக்கப்பட்டு பலவந்தமாக அருகிலிருக்கும் ஆம்னி பஸ்களில் திணிக்கப்படுவீர்கள்! போகாத ஊருக்கு பயணம் செய்ய நேரிடும்! அந்தப் பக்கம் போகிறவர்களை 'அண்ணே வாங்க! அக்கா வாங்க! சார் வாங்க! மேடம் வாங்க!' என்று கூவி வழிமடக்கி பஸ்களில் இந்த அப்பாவிகளை கொண்டு நிரப்புவார்கள்! அனேகமாக இவர்களின் கையில் சிக்கும் வெளியூர்காரர்களின் பாடு திண்டாட்டம்தான்!



சென்னைக்கும் மதுரைக்கும் நாற்பது ரூபாய் கட்டணம் என்பார்கள்! ஆனால் அறுபது ரூபாய் டிக்கெட் போட்டு உட்கார வைத்து விடுவார்கள்! மூன்று படம் வீடியோவில் காட்டுவோம்' என்று கூறி ஒரே ஒரு படத்தை காட்டுவார்கள்! சமயத்தில் அது கூட கிடையாது! பெயருக்கு 'புஷ் பேக்' இருக்கைகள்!' அவற்றில் ஸ்பாஞ்சே இருக்காது! மதுரை மட்டும் வரை செல்ல அனுமதி பெற்றிருக்கும் இந்த பஸ்கள் கன்னியாகுமரி, திருநெல்வேலி, ராமேசுவரம் வரை செல்லும் என்று கூசாமல் பொய் சொல்லுவார்கள்! நம்பி ஏறினால் அவ்வளவுதான்! நட்டாற்றில் தள்ளி விட்டு போய் விடுவார்கள்! ஏதாவது சொன்னால் 'போய் மெட்றாஸில் கேளு' என்பார்கள். இஷ்டப்பட்ட போது கிளம்புவதும், விருப்பமுள்ள இடங்களில் நிறுத்துவதும் இவர்களது வழக்கம். நேரக் கட்டுபாடே கிடையாது! தங்களுக்கு 'வேண்டப்பட்ட ஓட்டல்களை' கண்டு விட்டால் பஸ் ஒரு அங்குலம் கூட நகராது.

அன்று 8.12.86.

'மனைவிக்கு சீரியஸ்' என்று தந்தி வரவே அலறியடித்துக் கொண்டு எழும்பூர் சென்றேன். அங்கு நேஷனல் டிராவல்ஸ் என்னை கூவி அழைக்கவே அருகே சென்றேன்! ''பஸ் எங்கே போகுது!' என்று கேட்டதும், 'சாருக்கு எங்கே போகணும்' என்றனர்!

'தூத்துக்குடி' — என்றேன் நான்!

'அங்கதான் போகுது! ஏறுங்க'

'நேஷனல் டிராவல்ஸ் தூத்துக்குடி போகாதே' — என்றேன் சந்தேகத்துடன்! 'வெல்கம் டிராவல்ஸ் தானே போகும்?'

'அட! விஷயம் தெரியாதா சார்! வெல்கம் டிராவல்ஸ் ரூட்டை ஒரு லட்ச ரூபா கொடுத்து போன மாசம்தான் வாங்கினோம்' — என்றனர்.

என் அவசரம் எனக்கு! தீர விசாரிக்காமல் ரூ.55/— கொடுத்து டிக்கெட் வாங்கி சீட்டில் அமர்ந்தேன்., அப்போது மணி 8.40 இருக்கும்.

சரியாக 11.30 மணிக்கு அந்த இடத்தை விட்டு கிளம்பிய பஸ் மறுநாள் காலை ஏழு மணிக்கு திருச்சியை அடைந்தது!

திருச்சியில் ஆரம்பித்தது குழப்பம்! என்னுடைய சக பிரயாணிகள் சிலர் காரைக்குடிக்கும், கீழக்கரைக்கும் அந்த பஸ் போகும் என்று நம்பி டிக்கெட் வாங்கியிருந்தனர்! திருச்சி அடைந்ததும் தான் தாங்கள் ஏமாற்றப் பட்டதை அறிந்து அமர்க்களம் செய்தனர்! அங்கிருந்த போலீஸாரிடம் புகார் செய்தும் பயனில்லை!

ஒரு வழியாக பஸ் எட்டு மணிக்கு கிளம்பி 11.30க்கு மதுரையை அடைந்தது! பஸ்ஸில் இருந்த அனைவரும் இறங்கி விட்டனர்! ஒரு கைக் குழந்தையுடன் ஒரு பெண். இன்டர் வியூவுக்காக சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர். மற்றும் நான். ஆகியோர் மட்டுமே மிஞ்சினோம். இனி அந்த பஸ் அந்த இடத்தை விட்டு நகராது என்பதை புரிந்து கொண்டு இறங்கினோம். என் மனைவியின் நிலையை காணத் துடித்துக் கொண்டிருந்த நானும் மற்ற இருவரும் மதுரை கூடலழகர் கோயில் அருகே 'அம்போ'வென்று நின்று கொண்டிருந்தோம். பிறகு கஷ்டப்பட்டு அவரவர் ஊர்களுக்கு பஸ் பிடித்து சென்றோம்! இப்போது சொல்லுங்கள்! இந்தியாவிலேயே பஸ் வசதி தமிழகத்தில் தான் சிறந்தது என்று கூறுவார்கள்! இந்த பஸ்களின் வசதி எப்படி?

— தூத்துக்குடி தமிழவன்

நாமே இரகசியத்தை காப்பாற்றி வைக்கமுடியாத போது மற்றவர்கள் நம்முடைய இரகசியத்தை வெளியிடாமல் இருக்கவேண்டும் என்று நாம் எப்படி எதிர் பார்க்க முடியும்.

—ரோச் ஃபோகால்டு

ஒருவன் குடிபோதையில் இருப்பதையும் அவன் காதலிக்கிறான் என்பதையும் தவிர மற்ற அனைத்தையும் அவன் இரகசியமாக வைத்திருக்கலாம்.

—அன்டிஃபேனெஸ்

உடல் நலத்துக்குத் தீமை செய்யும் காரமான உணவு ருசியாய் இருப்பதைப் போல, உடல் நலத்தை வளர்க்கும் நல்ல உணவில் ருசி இருக்காது.

—காந்திஜி

பூரண வயதுள்ளவர்களுக்குப் பலமான ஆகாரம் தகும். ஏனெனில் இவர்கள் நன்மை தீமைகளைப் பகுத்தறியும்படி பழக்கப்பட்ட புலன்களை உடையவர்கள்.

—பைபிள்


அமைதியின் மூலமாக முட்டாள்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. புத்திசாலிகளின் நற்குணங்களில் நன்றாகவும் அது இருக்கிறது.

—போய்லியூ

இது ஒரு ஆபத்தான உலகம். நாம் ஏதாவது சொல்ல வேண்டியிருந்தாலொழிய நாம் பேசவே கூடாது. ஆண்களிடம் பேச்சு இருப்பது போலப் பெண்களிடம் அமைதி இருக்கிறது என்பதை யாரால் மறுக்க முடியும்

www.tamilarangam.net




A. S. Khaja Mohideen

மணிச்சுடர்

2 Peters Road, Madras 600 014

# கருணாநிதி ஏமாற்றுகிறார்!

## முஸ்லீம்கள் குற்றச்சாட்டு

**2.5.88 விசிட்டர் வார இதழில் 'முஸ்லீம் லீக் கட்சி உடைகிறது' என்ற தலைப்பில் வெளியிட்ட கட்டுரைக்கு ஏராளமான வரவேற்பு கடிதங்களும் விமர்சனக் கடித கணைகளும் வந்தன.**

முஸ்லீம் லீக் கட்சி பிரமுகர்களில் ஒருவரான AS.காஜா முகைதீன் எழுதிய கடிதத்தை விசிட்டர் வாசகர்களுக்காக வெளியிடுகின்றோம்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

தங்களுடைய விசிட்டர் பத்திரிக்கையில் முஸ்லீம் லீக் பற்றி விமர்சித்திருக்கிறீர்கள். அவை அனைத்தும் உண்மைக்கு மாறானவை. கலைஞரின் 26.4.88 தேதி அறிக்கையும் ஏமாற்றும் செய்தியாகும்.

தி.மு.க.வுடன் நீண்டகால தொடர்பு முஸ்லீம்களுக்கு உண்டு. அந்த தொடர்பை ரத்து செய்து கொள்ளும் எண்ணம் எங்களுக்கு இருந்ததில்லை.

தேர்தல் சம்பந்தமாக பேசுவதற்கு ஒரு உயர்மட்ட குழு எங்களுடைய செயற்குழு கூட்டத்தில் அமைக்கப்பட்டது. எத்தனை சீட் வாங்குவது, நிர்வாகத்தில் பங்கு பெறுவது போன்றவைகளை மேற்படி கமிட்டி பேசி முடிவு எடுக்கும். பேரறிஞர் அண்ணா, முதறிஞர் ராஜாஜி, காயிதேமில்லத் மூனறு பெரும் தலைவர்களும் கூடி கூட்டணி அமைத்து போட்டியிடுவதென முடிவெடுத்தனர். 100 தொகுதி வெற்றி பெற்றபின் கூட்டணி வெற்றி என்றார் அண்ணா, 127 இடங்கள் கிடைக்கவும் தி.மு.க. வெற்றி என்றார் அண்ணா, பூரண மெஜாரிட்டியானவுடன் தி.மு.க. அரசு அமைக்கும் என அறிவித்தார் கூட்டணிக்கு வித்திட்டவர்கள் முஞ்சியில் கரியை பூசியதைப் போல் ஆகிவிட்டது! இது முதல் ஏமாற்றம்!

இரண்டாவது தேர்தலில் வஃபு வாரியத்தை கேட்டோம். மது விலக்கை தவிர்க்கும்படி கோரினோம். கருவாட்டு வியாபாரி என பட்டம் சூட்டினார்கள். தங்க தாம்பாளத்தில் விரிசல் ஏற்பட்டது.

நகராட்சி, பஞ்சாயத்து தேர்தல் வந்தது. முஸ்லீம் லீக் சொன்ன வாக்குப் படி நடந்து கொண்டது. ஆனால் தி.மு.க. அவ்விதம் நடந்து கொள்ளவில்லை. உதாரணத்துக்கு எழுதுகிறேன். திருச்சி நகரசபையிலே முஸ்லீம்கள் தொகுதி 4ல் தி.மு.க வேட்பாளர்களை நிறுத்தியது. உடனடியாக திருச்சி லீக்காரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். தி.மு.க. வினர் கேட்கவில்லை; உடனே முஸ்லீம் லீக் வேட்பாளரை தலைவருக்கு நிறுத்தியது. பிறகு திருச்சி தி.மு.க.வினர் வளைந்து வந்தனர். தனது 4 வேட்பாளர்களையும் வாபஸ் வாங்கியது. லீக் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றனர். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் முஸ்லீம் லீக் ஆதரவின்றி தி.மு.க. வெற்றி பெற இயலாது இது இங்கு மட்டுமல்ல. தமிழகமெங்கும் உள்ளநிலை.

இதைதான் எங்கள் பொதுக்குழு கூட்டத்தில் எடுத்துச் சொல்லி உயர்மட்டக் குழு நன்கு விவாதித்து உடன்பாடு காணவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

எங்களுக்கு அமைச்சு நிர்வாகத்தில் பங்கு தேவை. இலவசமாக ஓட்டுகளை அளிக்க முடியாது என கூறுவதில் என்ன தவறு. பதவி ஆசை பணத்தாசை வந்து விட்டது என பறைசாற்றுகின்றனர். இந்த நாட்டை ஆண்ட சமுதாயத்துக்கு பதவி ஆசை வரக் கூடாதா? உங்களுக்கு ஒட்டு போட்டு உங்களை அரியணையில் ஏற்றி வைத்து விட்டு நாங்கள் வேடிக்கை பார்க்கவா கட்சி வைத்திருக்கிறோம்! இனி நடக்காது. முஸ்லீம்கள் ஒன்று திரண்டு விட்டனர். ஏய்ப்பதற்கு இனி இடமில்லை. நடக்கப்போவது இதுதான். உறவு வேண்டுமா? நிர்வாகத்தில் பங்கு வேண்டும். இல்லை என்றால் உங்களுக்கும் பே!....பே! உங்கள் அப்பனுக்கும் பே!பே!.....

**—ஒ-ம்**
**காஜாமைதீன்.**
**28.4.88.**

---

* தெருத்தெருவாக உண்டியல் ஏந்தியாவது தேர்தல் நிதி வசூல் செய்வோம் என்கிறாரே, ஜெயலலிதா!...

— எம். குணசேகரன்
வேலாயுதம்பாளையம்

பலவழிகளில் சேர்ந்திருக்கும் ''கருப்பு தெருக்களில் வெள்ளையாக' மாற தேர்தல் நிதி வசூல் செய்வோம் என்கிறார் ...

* பணிக்கர் மரணத்தில் சந்தேகத்தை எழுப்பி உள்ளனரே! சிலர்...

— எம். வாசுதேவன்
சென்னை 83

இந்தியாவின் பன்னாட்டு மருந்து கொள்ளை நாள்தோறும் பலரை கொல்கிறது. பணிக்கர் மரணமாவது பன்னாட்டு மருந்து கம்பெ

* கர்நாடகத்தில் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவர ராஜீவ் முயல்வதாக ஹெக்டே குற்றஞ்சாட்டியுள்ளாரே?...

— வித்யாதரன்
திருப்பூர்

ராஜீவ் முயலவில்லை. சந்திரசேகர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ராஜீவ்காந்தியின் மனமாற்றம்

**தி**.மு.க எம்.பி வை. கோபால்சாமி மாநிலங்களவையில் ஈழத் தமிழர் பிரச்னை பற்றி ஆற்றிய உரைகளைத் தமிழாக்கி 'இரத்தம் கசியும் இதயத்தின் குரல்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிடப் பட்டுள்ளது. அதிலிருந்து ஒரு பகுதி.

(முகவரி: **கண்ணகி பதிப்பகம்**, கலிங்கப்பட்டி 627724, திருவேங்கடம் (வழி) திருநெல்வேலி மாவட்டம். விலை ரூ. 20)







**வை. கோபால்சாமி:** பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களே! எங்கே ஓடுகிறீர்கள்! முரசொலி மாறன் பேச்சை கேட்க உட்காருங்கள். இலங்கையில் ஆயிரக்கணக்கில் தமிழர்களை கொன்று குவிக்கும் கொலைபாதகரே! எங்கே ஓடுகிறீர்கள்?

**அரவிந்த கணேஷ் குல்கர்னி:** (இ.காங்) கோபால்சாமி பிரதமரை கொலைபாதகர் என்று குற்றம் சாட்டியது சகிக்க முடியாதது. அதை அவர் வாபஸ் பெற வேண்டும்.

**வை. கோபால்சாமி:** கொலைகாரரை கொலைபாதகர் என்று அழைக்காமல் வேறு என்ன சொல்லி அழைப்பது?

**(ராஜீவ் காந்தி பதில் எதுவும் சொல்லாமல் மாநிலங்களவையிலிருந்து 6.11.87-ம் தேதி வெளியேறினார். மீண்டும் மாநிலங்களவை 9.11.87-ம் தேதி கூடியது. அப்போது நடைபெற்ற விவாதம் கீழே தொடர்கிறது.)**

**வை. கோபால்சாமி:** யாழ்பாணத்திலும், வடமராச்சியிலும் கடந்த 48 மணி நேரத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இளைஞர்களை வீடு வீடாகத் தேடிக் கொல்கிறார்கள். தமிழ் பெண்களை கைது செய்து பணயக் கைதிகளாக வைத்துள்ளனர். மருத்துவமனைகள் தகர்க்கப் பட்டுள்ளன. எந்த வித மருத்துவ வசதியும் இல்லை. இது கொலைகார அரசு; ரத்த வெறி பிடித்த அரசு.

(இ. காங்கிரஸ் கூச்சல்)
(சபையில் பெரும் அமளி)

**அவைத்தலைவர்:** பிரதமர் பற்றி வை. கோபால்சாமி கூறிய வார்த்தைகள் நீக்கப்படுகின்றன. அவர் அப்படி பேசக் கூடாது. உட்கார வேண்டும்.

**வை. கோபால்சாமி:** எங்கள் இனமே அழிக்கப்படும் பொழுது, தமிழ் ரத்தம் ஆறாக ஓடும்போது நாங்கள் பிண்டங்களாக உட்கார்ந்திருக்க வேண்டுமென்கிறீர்களா? பிரபாகரன் தலைக்கு ஜெயவர்த்தனா விலை அறிவித்திருக்கிறார். ஜெயவர்த்தனே தரும் கூலிக்கு கொலை செய்யும் அரசாக இந்த அரசு மாறி விட்டது!

(சபையில் பெரும் அமளி)

உபேந்திரா (தெலுங்கு தேசம்), வாஜ்பாய், குருபாதசாமி ஆகியோர் கோபால்சாமியை சமாதானப்படுத்தினார்கள்.

**அவைத்தலைவர்:** விவாதம் வரும் பொழுது இதுபற்றி பேசலாம்.

**வை. கோபால்சாமி:** இப்படித்தான் கடந்த வெள்ளிக்கிழமை சொன்னீர்கள். ஆனால் இரண்டு நாளில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். எங்கள் இனத்தை கருவறுக்கும் பொழுது, இந்த சபையை நடத்தவிட மாட்டேன். வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க மாட்டேன்.

**அவைத்தலைவர்:** கோபால்சாமி நடத்தை முறையற்றது. ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளானது என கண்டனம் செய்கிறேன்.

**குருபாதசாமி:** (ஜனதா) கோபால்சாமியின் உணர்ச்சிக் கொந்தளிப்பை நாங்கள் உணருகிறோம். அதில் பங்கேற்கிறோம். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை கூடாது.

**இ. காங்கிரஸ் உறுப்பினர்கள்:** பிரதமர் பற்றி கோபால்சாமி பேசிய வார்த்தைகளை அவர் திரும்ப பெற வேண்டும்.

**வை. கோபால்சாமி:** எங்கள் சகோதர, சகோதரிகளை நீங்கள் கொன்று குவிக்கும்பொழுது நாங்கள் வாயைமூடிக் கொண்டு இருக்க முடியாது. இந்த அரசும் பிரதமரும் செய்யும் பாவத்திற்கு ஒரு நாள் பதில் சொல்லத் தான் வேண்டும் என்று நான் எச்சரிக்கிறேன்.

**அவைத்தலைவர்:** கோபால்சாமி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறேன். அவர் சபையை விட்டு வெளியேற வேண்டும்.

**வை. கோபால்சாமி:** உங்கள். நடவடிக்கை பற்றி எனக்குக் கவலையில்லை என்று கூறி ராஜீவ் காந்தியை எதிர்த்து முழக்கங்களை எழுப்பினார்.

**வஞ்சிக்கப்பட்ட வரலாறு**

இலங்கைத் தமிழர்களின் சரித்திரத்தில் கரிய இருள் சூழ்ந்து விட்ட நேரம் இந்த நேரம். அவர்களின் வரலாற்றில் ஒவ்வொரு அத்தியாயமும் அவமானத்தையும் அடக்கு முறையையும் சந்தித்த வரலாறாக, துன்பப் புலம்பலையும் சோகப் பெருமூச்சையும் சுமந்த வரலாறாக போராட்டமும் தியாக உலகம் பூராவிலும் உள்ள தமிழர்கள் பயங்கரமான அதிர்ச்சிக்கு ஆளாகி. உள்ளனர்.

ஏனெனில் எந்த மண்ணிலிருந்து ஆதரவும் ஆறுதலும் கிடைக்கும் என நம்பினார்களோ, எந்த மண்ணில் சொந்த பந்தத்தால் பிணைக்கப்பட்ட ஐந்து கோடி மக்கள் வாழ்கிறார்களோ அந்த இந்தியா, எவரும் சற்றும் எதிர்பாராத வகையில் இலங்கைத் தமிழர்களை அழிக்க போர் தொடுத்திருப்பது இரக்கமற்ற கொடூரமான படுகாயங்களை (The most unkindest Cuts) விளைவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீது பிரதமர் ராஜீவ் காந்தி பல விதமான குற்றச் சாட்டுக்களைச் சொன்னார். ஒவ்வொரு கட்டத்திலும் ஒப்புக் கொண்டு விட்டு கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மீறினார்கள் என்றும் ஒப்பந்தத்தை உடைப்பது ஒன்றே அவர்கள் நோக்கம் என்றும் குற்றம் சாட்டினார். இந்த கடுமையான குற்றச்சாட்டை பிரதமர் நிரூபிக்க வேண்டும். எந்தெந்த கட்டத்தில் புலிகள் என்னென்ன வாக்குறுதிகள் தந்தனர்; அவைகளை எப்படி மீறினார்கள் என்பதை வரிசைப்படுத்தி சாட்சியங்களோடு பிரதமர் விளக்க வேண்டும்:

ஏனெனில் இந்தியாவின் முப்படைகளும் இலங்கைத் தமிழர்கள் மீது போர் தொடுத்துள்ளன. இந்த யுத்தத்தை நியாயப்படுத்த முயலும் பிரதமர் அவர்களே! உங்கள் குற்றச்சாட்டு வெறும் பித்தலாட்டம் என்பதை நான் நிரூபிக்கிறேன்.

**கொழும்பு ஒப்பந்தம் புலிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டதா?**

கொழும்பு ஒப்பந்தம் பற்றிய அடிப்படையான கேள்விக்கு வருகிறேன். இந்த ஒப்பந்தத்தை புலிகள் ஏற்றுக் கொண்டார்களா? இல்லை ஒப்புதல் அளித்தார்களா? இல்லை; எந்தக் கட்டத்திலும் இல்லை.

இதுவரை விடுதலைப் புலிகளின் சம்மதம் பெறாமலே ஏன் பிரதமர் கொழும்பில் கையெழுத்துப் போட்டார். இந்தக் கேள்வியை நான் அப்போதே கேட்டேன். ஆனால் அரசாங்கம் எனது கேள்விக்கு இன்று வரை பதில் சொல்லவில்லை. ஆகஸ்டு 4-ம் தேதி யாழ்பாணத்தில் சுதுமலையில் லட்சக்கணக்கான தமிழர்கள் மத்தியில் உலக நாடுகளின் பத்திரிகை நிருபர்கள் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்ட கூட்டத்தில் பிரபாகரன் ஆற்றிய உரையிலே கூட ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் சொன்னார்.

ஒப்பந்தத்துக்கு புலிகள் ஒப்புதல் அளிக்கவில்லை என்பதைத் தானே பிரபாகரனின் பேச்சு உறுதிப்படுத்துகிறது. பிரதமர் பேச விரும்புகிறார் என்று சொல்லி ஒப்பந்தத்தை பற்றி தெரிவிக்காமல் பிரபாகரனை டெல்லிக்கு அழைத்து வந்து அசோகா ஓட்டல் அறையில் பூட்டி வைத்தது அயோக்கியத்தனம் அல்லவா? பத்திரிகை நிருபர்கள் எவரும் பிரபாகரனை சந்திக்க அனுமதிக்கப் படவில்லை.

நான் சந்திக்க முயன்றேன்; முடியவில்லை. மறுநாள் மத்திய அரசு அதிகாரிகளுடன் தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து பல இடையூறுகளுக்குப் பின்னர் பிரபாகரன் என்னோடு தொலைபேசியில் சொன்னார். நாங்கள் வஞ்சிக்கப்பட்டு விட்டோம்; எங்கள் முதுகிலே குத்தி விட்டனர். நாங்கள் இந்திய இராணுவத்தோடு மோதும் நிலை ஏற்பட்டு விடும் என்று தான் என் மனக்கொதிப்பையும் வெளியிட்டேன். எனது வாசகம், கடுமையானதாக இருப்பதாகச் சொல்லி இந்திய அரசு என்னைச் சமாதானப்படுத்த முயன்றது.

எங்கள் பிரச்சனையில் பிரதமருக்கு அனுதாபம் இருக்கிறது என்று தான் நான் தெரிவித்தேன்.

ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக நான் எந்தக் கட்டத்திலும் சொல்லவில்லை. இந்தியாவையும் இந்திய மக்களையும் நான் புண்படுத்தி விடக் கூடாது என்பதால்தான் நான் எனது வாசகத்தின் கடுமையை மாற்றினேன்''

**ஒப்பந்தத்தை உடைப்பது யார்?**

வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் ஒன்றாக இணைக்கும் திட்டத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்வேன் என்று மூன்றாவது நாளே ஜெயவர்த்தனே அறிவித்தாரே! ஒப்பந்தத்தின் மீது விழுந்த முதல் மரண அடிதானே இந்தப் பேச்சு. இந்திய சர்க்கார் ஏன் இதனை ஆட்சேபிக்கவில்லை?

இலங்கைத் தமிழர்களை நிரந்தர இன்னலுக்கு உள்ளாக்கும் சிங்களக் குடியேற்றம் அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்போடு ஒப்பந்தத்துக்கு பின்னால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் பூர்விக மண்ணில் நடத்தப் பட்டது தான் ஒப்பந்தத்தின் மீது விழுந்த இரண்டாவது மரண அடியாகும்.

கிழக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றத்துக்கு ஆதரவாக சிங்கள ராணுவத்தை நிறுத்தினாரே ஜெயவர்த்தனே! ஏன் இந்திய அரசு ஆட்சேபிக்கவில்லை? 200 சிங்கள ராணுவ முகாம்களை ஒப்பந்தத்தின்படி இலங்கை அரசு தமிழர் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தவில்லையே? இதனை ஏன்

www.tamilarangam.net

கலேக்கப்படவில்லேயே? இதனே ஏன் இந்திய அரசு ஆட்சேபிக்கவில்லே? ஒப்பந்தத்துக்கு விரோதிகள் ஜெயவர்த்தனேயா? புலிகளா? எங்கே உங்கள் ஒப்பந்தம் இருக்கிறது? இலங்கை அரசு தனது நடவடிக்கைகளால் ஒப்பந்தத்தை சுக்கல் சுக்கலாக கிழித்து விட்டது.

### கோரிக்கைகள் ஏற்கப்பட்டதா?

நமது பிரதமர் ராஜீவ்காந்தி சொல்கிருர். இலங்கைத் தமிழரின் அனேத்து கோரிக்கைகளும் ஏற்கப்பட்டு விட்டதென்று. தமிழர்களின் கோரிக்கை என்ன? அவர்களின் அடிப்படை கோரிக்கைகள் என்ன என்பதை பிரதமர் உணர்ந்தாரா? ஈழத் தமிழர்களின் ஒரே லட்சியம் தமிழ் ஈழம்தான். அதனே நீங்கள் ஏற்கவில்லே. ஆனல் வடக்கும் கிழக்கும் இணேந்த தமிழ் நிலம் தமிழர்களின் பூர்வீக தாயகம் என்பதை இலங்கை அரசு ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதை தொடக்கத்திலிருந்து வலியுறுத்தப்பட்டது பிரதமருக்கு ஞாபகம் இல்லேயா?

ஒப்பந்தத்துக்கு மறுநாளே ஜெயவர்த்தனே தனது பேச்சில் பூர்வீக தாயகம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென குறிப்பிட்டது பிரதமருக்குத் தெரியாதா? தமிழ் மாநிலங்களுக்கு சுயாட்சி அதிகாரங்களே இல்லே என்பதைத்தானே இப்போது கொண்டு வரப்பட்டுள்ள மசோதாக்கள் உறுதிப்படுத்துகின்றன.

மிதவாதிகள் கூட இதைச் சொல்லி விட்டார்களே, நிலத்தை நிர்ணயிப்பது மத்திய அரசுதான் என்ற முடிவு தமிழர்களின் தலேயில் மண்ணே கொட்டுவது தானே? தாங்கள் ஒரு தேசிய இனம் என்பதையும் சுய நிர்ணய உரிமைக்கு அங்கீகாரம் வேண்டுமென்பதை அத்தனே குழுக்களும் வலியுறுத்தி வந்தார்களே? அந்த கோரிக்கை அடியோடு நிராகரிக்கப் பட்டு விட்டதே? இத்தனேக்கும் பிறகு ராஜீவ் காந்தி எல்லாம் ஏற்கப்பட்டு விட்டதாக நாக்கூசாமல் பேசுகிருர்.

### தியாகத் தீயில் திலீபன்

சிங்களர் குடியேற்றத்தை எதிர்த்து புலிகளின் அரசியல் பிரிவு பிரச்சாரச் செயலர் திலீப்ன் உண்ணுவிரதம் இருந்தார். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் திலீபன் உண்ணுவிரதம் இருந்த இடத்தில் கண்ணீரோடு காத்துக் கிடந்தனர். தண்ணீர் பருகாமல் திலீபன் மரணத்தை எதிர் நோக்கி காத்திருந்தார். அந்த வீர இளேஞன் தியாகத் தீயில் தன்னேப் பலியிட்டுக் கொண்டான். இந்தியத் தூதர் தீட்சித் திலீபனே போய் அணுகி உண்ணுவிரதத்தை நிறுத்தச் சொல்லி ஏன் வேண்டுகோள் விடுக்கவில்லே? அவனது கோரிக்கைகளுக்கு ஏன் உத்தரவாதம் அளிக்க வில்லே? அகில இந்திய

**''என்ன விளேவுகள் வரும்? சொல்லுங்கள்! விபரீதத்தின் உச்ச கட்டம் தூக்கு மேடையாகத்தான் இருக்க முடியும். எங்கள் இனத்திற்காக போராடுவதற்கு தூக்கு மேடைதான் தண்டனே என்ருல் வெகுமதி என்று ஏற்றுக் கொள்ளத் தயார்''**

**— வை. கோ்பால்சாமி**

வானெலி திலீபனின் உண்ணுவிரதத்தை கிண்டலும் கேலியும் அலலவா செய்தது. இந்த யுத்தம் ஏன் ஏற்பட்டது?

### புலிப்படையினரின் மரணமும்! போர்ப் புயலும்!

அக்டோபர் 3-ம் தேதி நடைபெற்ற ஒரு சம்பவம் தான் திருப்பு முனேயாக அமைந்தது. பருத்தித் துறைக்கு அருகே கடலில் படகில் பயணம் செய்த 17 புலிகள் சிங்கள கடற்படையால் கைது செய்யப்பட்டனர். 17 பேரும் புலி இயக்கத்தில் மிக முக்கியமானவர்கள். அவர்களில் புலிகளின் பிரதான தளபதிகளில் இருவரான புலேந்திர னும், குமரப்பாவும் அடங்குவர். அந்தப் படகில் அவர்களிடம் இயந்திரத் துப்பாக்கி இருந்ததாக ராஜீவ் காந்தி சொல்கிருர். சொந்தப் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வைத்துக் கொள்ளலாம் என்று ராஜீவ்காந்தியே அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மரணத்தை துச்சமெனக் கருதுகின்ற இந்த மாவீரர்கள் சிங்கள கடற்படையினரோடு போரிட்டு செத்திருக்கலாமே! ஏன் அவர்கள் சிங்களவர்களோடு மோதவில்லே? தங்களுக்கு பொது மன்னிப்பு ஜெயவர்த்தனே அறிவித்திருந்ததால் இந்திய அமைதிப்படை தங்களே விடுவிக்கும் என்று பூரணமாக நம்பியதால் அவர்கள் மோதவில்லே. பலாலி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். பிரபாகரன் இந்திய தூதரிடம் 17 பேரையும் உடனே விடுவிக்க வேண்டும் என்று கூறினர். அவர்களே கொழும்புக்கு கொண்டு செல்ல நேருமாளுல் புலிகள் சயனேடு விஷமருந்தி சாக நேரிடும் என்ற அச்சத்தைத் தெரிவித்தார். சிங்கள ராணுவத்தின் சித்திரவதைக்கு பயந்து அல்ல! அதனே அவமானம் என்று கருதுவதால் தற்கொலே செய்து கொள்வார்கள்.

மூன்று நாட்கள் வரை அவர்களே விடுவிக்க இந்திய அரசு தக்க முயற்சிகள் எடுக்கவில்லே. 5-ம் தேதி கொழும்புக்கு இலங்கை விமானப்படை விமானத்தில் அவர்களே கொண்டு செல்ல முனேந்த போது சயனேடு விஷம் அருந்தி அந்த வீராதி வீரர்களில் 12 பேர் மாண்டார்கள். திரிகோணமலே புலிப்படை தளபதி புலேந்திரனின் கழுத்திலும் மார்பிலும் பத்துக்கு மேற்பட்ட படுகாயங்கள் இருந்தன. இதிலிருந்து சிங்களவர்களால் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர் என்பது தானே தெரிகிறது. இந்தப் பொல்லாத மரணம் திரிகோணமலே வட்டாரத்தில் தமிழர்களிடம் பெரும் புயலே உருவாக்கிற்று.

ஆக்கிரமித்து குடியேறிய சிங்களவர்களே புலிகளும் தமிழர்களும் சேர்ந்து கொன்றனர். இந்தப் படுகொலே களே நான் நியாயப்படுத்தவில்லே. ஆனல் பிரதமர் ராஜீவ் காந்திக்கு நினேவூட்டுகிறேன்.

இந்திராகாந்தி அம்மையார் கொல்லப்பட்ட போது ஆயிரக்கணக்கான

அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட கொடுமையைப் படமாக வீடியோ கேசட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதோ என் கையில் இருக்கிறது. இம்மன்றத்தில் உள்ள எதிர்க் கட்சித் தலேவர்கள் பலரும் அதனேப் பார்த்தார்கள். போட்டு காட்டட்டுமா?

(கேசட்டைத் தூக்கி கோபால்சாமி அமைச்சருக்கு காண்பித்தார்)

**அவைத்தலேவர்:** இங்கு காட்ட அனுமதி கிடையாது.

**வை. கோபால்சாமி:** மைய மண்டபத்தில் போட்டுக் காட்ட அமைச்சர் ஒப்புக் கொள்வாரா? உண்மைகளே சந்திக்க நீங்கள் தயாராக இல்லே. புலிகள் முஸ்லீம்களே தாக்கியதாக பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு கட்டுக்கதையை அவிழ்த்து விட்டுள்ளார்.

ஜெயவர்த்தனே முன்பு உருவாக்க முயன்ற சதி. அது நடக்கவில்லே. இப்போது ராஜீவ் காந்தி இந்த அற்பத்தனமாக பிரச்சாரத்தில் இறங்கி உள்ளார்.

இந்தியத் துருப்புக்களே புலிகள் உயிரோடு கொளுத்தியதாக பித்தலாட்ட பிரச்சாரத்தை இந்திய அரசு செய்தது. ஆனல் புலிகளால் சிறை வைக்கப்பட்டுள்ள இந்திய சிப்பாய்களே நேரில் கண்டு திரும்பிய சுமிர்பால் கூறிய விவரம் அக்டோபர் 30-ம் தேதி ''டெலி கிராப்'' பத்திரிக்கையில் வெளி வந்துள்ளது. தாங்கள் புலிகளால் உபசரிக்கப்படுவதாகவும் புலிகள் தங்களின் உணவுகளே பகிர்ந்து கொள்வதாகவும் கூறியதாக அவர் தெரிவிக்கிருர். ஆனல் இந்திய அரசு வானெலி, தொலேக் காட்சி மூலம் கோயபல்ஸ் பிரச்சாரத்தை முடுக்கி விட்டிருக்கிறது.

சகிக்க முடியாத கொடுமை என்னவென்ருல், பிரபாகரன் தலேக்கு 10 லட்சம் பரிசு என்று ஜெயவர்த்தனே அறிவித்த அதே மேடையை பகிர்ந்து கொண்ட இந்திய இராணுவ அமைச்சர் கே.சி. பந்த் வெட்கம் மானம் இல்லாமல் மறுப்பும் சொல்லாமல் திரும்பி இருக்கிருர். போர் நிறுத்தத்திற்கு இந்தியா மறுக்க காரணம் என்ன? மிகப்பெரிய வலிமையான இராணுவம் வைத்துள்ள இந்தியாதானே பெருந்தன்மையோடு போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். ஆனல் புலிகள் இராணுவத்திடம் மண்டியிட வேண்டும். சரணடைய வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி திமிரோடு பேசுகிருர். புலிகள் அழிக்கப்பட்டால் அடுத்த கணமே ஜெயவர்த்தனே இந்திய இராணுவத்தை வெளியேறச் சொல்லுவார்.

இந்தியத் துருப்புகளின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்த பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கையில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்காக ஒரு வார்த்தை கூட அனுதாபம் தெரிவிக்காதது அவரது மனப்பான்மையை காட்டுகிறது. **இந்தியத் துருப்புகள் சிந்துகிற இந்திய இரத்தத்திற்கும் இலங்கைத் தமிழர்கள் சிந்துகிற இரத்தத்திற்கும் ராஜீவ் காந்தி தான் பொறுப்பேற்க வேண்டும்.** இலங்கைத் தமிழ் இனத்தை அழிக்க இந்திய இராணுவம் இனப்படுகொலே நடத்துகிறது என்று முரசொலி மாறன் சொன்னதற்கு பிரதமர் ஆத்திரப்பட்டார். அதற்காக தான் வெட்கப்படுவதாகச் சொன்னர். ஆனல் இலங்கையில் ''சன்'' என்ற பத்திரிக்கையில் வெளியிட்ட செய்தியில் முன்பு இலங்கை இராணுவத்தின் மீது இந்தியா என்ன பழி சுமத்தியதோ அதைத்தான் தற்போது இந்திய இராணுவம் நடத்துகிறது எனத் தெரிவித்தார். இலங்கையில் நடப்பது இனப்படுகொலே என்று 1983-ல் இந்திரா காந்தி சொன்னதை இந்திய இராணுவமே தற்போது செய்து கொண்டிருக்கிறது.

**வெளி விவகார அமைச்சர் நட்வர்சிங்:** இந்திய இராணுவம் குறித்து கோபால்சாமி சொன்னதை திரும்பப் பெற வேண்டும்.

**வை. கோபால்சாமி:** நிச்சயம் முடியாது. சொன்ன கருத்தில் உறுதியாக நிற்கிறேன்.

(இ. காங்கிரஸ் உறுப்பினர்கள் பலத்த கூச்சல்)

**வை. கோபால்சாமி:** எங்கள் இனத்தை அழிக்கும் இந்திய இராணுவத்தின் வெறியாட்டத்தை வெளிப்படுத்துவதை தேசத்துரோகம் என்று கூட நீங்கள் குற்றம் சாட்டலாம். இந்த அரசு ஏவியுள்ள படுகொலேகளே அம்பலப் படுத்துவது குற்றம் என்ருல், இந்திய இராணுவத்தின் வெறியாட்டத்தை சுட்டிக் காட்டுவது குற்றம் என்ருல், எங்கள் மக்களுக்காக நீதி கேட்பது குறிப்பிட்ட ராஜீவ் காந்தி ''பெரிய விருட்சம் சாய்கிற போது பூமி நடுங்கத் தான் செய்யும்'' என்று நியாயப்படுத்தினர்.

எத்தனேயோ போர்க்களங்களில் சிங்கள சைன்யங்களே எதிர்த்துப் போரிட்டு வெற்றிகளேக் கண்ட வீரத் தளபதிகளான புலேந்திரனேயும், குமரப்பாவையும் தங்களேக் காப்பாற்றும் காவல் தெய்வங்களாக தமிழர்கள் போற்றி வந்தனர்; அந்தத் தளபதிகளின் சாவு தமிழர்களே வெகுண்டெழச் செய்தது.

இந்த வீர வேங்கைகளின் மரணத்தைப் பற்றி பிரதமர் ராஜீவ் காந்தி குறிப்பிட்ட வார்த்தைகள் என்னே பதைபதைக்கச் செய்கின்றன. கலவரம் ஏற்படட்டும் என்று வேண்டுமென்றே தற்கொலே செய்திருக்கலாம் என குத்தலாகப் பேசினர். நமது பிரதமரிடம் இருந்து மனிதாபிமானமற்ற — இரக்கம் அற்ற இந்த வார்த்தைகளே நான் சற்றும் எதிர்பார்க்வில்லே.

நேற்றைக்கு முன் தினம் சிங்கள வெறியர்களால் 200 தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்களே! அந்த வெறியர்கள் மீது உங்கள் துப்பாக்கிகள் ஏன் திருப்பவில்லே? விடுதலேப் புலிகளே ஒடுக்குவதற்கு இந்திய அரசு காரணம் தேடிக் கொண்டிருக்கிறது.

### புலிகளின் சாவுக்கு பாரத அரசே பொறுப்பு!

எனவேதான் விடுதலேப்புலிகள் மீது இந்திய அமைதிப்படை தாக்குதலேத் தொடங்கியது. தளபதிகள் உட்பட 12 புலிகளின் சாவுக்கு இந்தியா தான் பொறுப்பேற்க வேண்டும்.

இந்திய அமைதிப்படையின் பிரதான தளபதி தேவிந்தர் சிங் கொடுத்த பேட்டி அக்டோபர் 25-ம் தேதி 'ஹிந்து' பத்திரிக்கையில் வந்துள்ளது.

''அக்டோபர் 6-ம் தேதியே புலிகளின் பாசறைகளே இந்திய இராணுவம் வேட்டையாடியது. அக்டோபர் 9-ம் தேதி புலிகளின் டி.வி. நிலேயமும் வானெலி நிலேயமும் தாக்கப்பட்டன'' என்று கூறுகிருர். 10-ம் தேதியன்று ஈழமுரசு, முரசொலி என்ற இரண்டு தமிழ்ப்பத்திரிக்கை அலுவலகங்களே இந்திய இராணுவம் வெடி வைத்து தகர்த்து தரை மட்டம் ஆக்கியது.

இந்த பாசிச வெறியாட்டத்துக்கு இந்திய அரசு எந்த நியாயமும் கற்பிக்க முடியாது. புலிகளே அழிக்க இந்திய இராணுவம் புறப்பட்டது. தற்காப்புக்காக புலிகள் திருப்பித் தாக்கினர்கள்.

இம்மன்றத்தில் அமர்ந்துள்ள உறுப்பினர்களே! குரூரமாக வதைக்கப்பட்டு அழிந்து கொண்டிருக்கிற ஒரு இனத்தின் அவலக்குரலே செவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தந்த தகவல்களை இதோ தருகிறேன்.

(ஹிந்து பத்திரிக்கையில் அக்டோபர் 24-ல் ஜெயராஜ் எழுதியதிலிருந்து மேற்கோள் காட்டுகிருர்)

ஆஸ்திரேலிய பாரளுமன்றத்தில் அக்டோபர் 20-ம் தேதி நடைபெற்ற விவாதத்தில் இலங்கை பிரச்சனை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கென்ட் என்ன பேசினுர் என்பதை இங்கே மேற்கோள் காட்டுகிறேன்.

''இந்திய இலங்கை ஒப்பந்தம் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணுது. ரத்தக் களரியை சந்திக்கத்தான் நேரிடும் என்று நினைத்தேன். தற்போது எனக்கு கிடைத்துள்ள செய்திகளின்படி தமிழ்ப் போராளிகளை அடியோடு ஒழிக்க இந்திய இராணுவம் முழுமூச்சான தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும் அப்பாவி மக்களின் பாதுகாப்பைப் பற்றி இந்திய இராணுவம் பொருட் படுத்தவேயில்லை என்றும் அறிகிறேன்''

**ஆயுதங்களைப் பறிக்கவா? .அடியோடு அழிக்கவா?**

புலிகளின் ஆயுதங்களை பறிமுதல் செய்யத்தான் இந்த இராணுவ நடவடிக்கை என்று இந்திய அரசு கூறுகிறது. ஆனுல் 30 ஆயிரம் துருப்புகளும் 100க்கு மேற்பட்ட ராணுவ டாங்குகளும், போர் விமானங்களும், ராணுவக் கப்பல்களும் போர் தொடுத்திருப்பது ஆயுதங்களைப் பறிக்க அல்ல; புலிகளை அடியோடு அழிக்கும் நோக்கத்தோடு அல்லவா?

குற்றம் என்ருல் அந்தக் குற்றத்தை தொடர்ந்து செய்ய நான் தயார். முரசொலி மாறன் பேசியதற்கு விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று பிரதமர் மிரட்டிப் பார்த்தார்.

நெருக்கடி காலக் கொடுமைகளை அனுபவித்தவர்கள் நாங்கள். மாறன் உடல் நலமே அடக்குமுறையால் பாதிக்கப்பட்டது. என்ன விளைவுகள் வரும்? சொல்லுங்கள்! விபரீதத்தின் உச்சகட்டம் தூக்கு மேடையாகத்தான் இருக்க முடியும். எங்கள் இனத்திற்காக போராடுவதற்கு தூக்குமேடை தான் தண்டனை என்ருல் அதை வெகுமதி என்று ஏற்றுக் கொள்ளத் தயார்.

**டி.ஆர். பாலு:** அதனை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயார். (இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்ந்து குறுக்கிடுதல்-கூச்சல்)

**வாஜ்பாய், உபேந்திரா:** கோபால்சாமி தொடர்ந்து பேச அனுமதிக்க வேண்டும்.

**பண்டாரி:** இலங்கையில் ஒருமைப்பாட்டை பாதுகாப்பது மிக மிக அவசியம்.

**வை. கோபால்சாமி:** வங்க தேசத்தை ஏன் உருவாக்கினீர்கள்? தனிஈழமா? இல்லையா? என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள் இலங்கைத் தமிழர்களே; நீங்கள் அல்ல. அவர்களின் அரசியல் தலைவிதிக்கு உத்தரவிட நீங்கள் யார்? தனிஈழம் தான் பிரச்சனைக்குத் தீர்வு. இது என்னுடைய கருத்து.

**பண்டாரி:** (இ. காங்கிரஸ் உறுப்பினர்) பெண்களையும், சிறு பிள்ளைகளையும் சண்டையில் பயன்படுத்துகிருர்கள் புலிகள். கோழைகள்.

**வை. கோபால்சாமி:** கோழை யார்? வீரன் யார்? என்பது உலகத்துக்கு தெரியும். இது மக்கள் யுத்தம். இப்படித்தான் வியட்நாமில் நடந்தது. இது கொரில்லா யுத்தம்.

**ஜெயந்தி நடராஜன்:** கோபால்சாமி இங்கே கொரில்லா யுத்தம் நடத்துகிருர்.

**மோத்திராம் பட்டேல்:** (இ.காங்) கோபால்சாமி இலங்கைக்கு போய் சண்டை போடட்டும்.

**வை. கோபால்சாமி:** இலங்கைக்கு போய் யாரை எதிர்த்துப் போரிடுவது! உங்கள் இந்திய ராணுவத்தை எதிர்த்தா? அதுதான் முடிவாகுமானுல் அதனை இங்கேயே செய்யலாம்.

**ஆனந்த் சர்மா:** (இ.காங்) பிரபாகரன் பிறந்த ஊரான வெல்வெட்டித் துறைக்கு இந்திய இராணுவம் சென்ற போது அங்குள்ள மக்கள் இனிப்பு வழங்கி வரவேற்ருர்கள்.

**வை. கோபால்சாமி:** மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது இங்கே இந்தியாவிலுங் கூட சில இடங்களில் இனிப்புகள் வழங்கப்பட்டன. அதற்காக காந்தியின் படுகொலையை இந்தியா கொண்டாடியது என்று நீங்கள் ஒப்புக்கொள்ளத் தயாரா?

**மதன் பாட்டியா:** (இ.காங்) இந்தியத் துருப்புகளின் ரத்தத்தால் விடுதலைப் புலிகளின் கரங்கள் நனைந்திருக்கின்றன. அத்தகைய புலிகளுக்காக கோபால்சாமி பரிந்து பேசுகிருர்.

**வை. கோபால்சாமி:** தமிழர்களின் ரத்தத்தால் இந்திய அரசாங்கத்தின் கைகள் நனைந்திருக்கின்றன. நான் இந்த அரசாங்கத்தை வலியுறுத்துவதெல்லாம் போர் நிறுத்தம் அறிவியுங்கள். அக்டோபர் 2-ம் தேதிக்கு முன் இருந்த நிலைக்கு இந்திய இராணுவம் திரும்பட்டும். புலிகளோடு பேச்சு வார்த்தை நடத்துங்கள். இலங்கைத் தமிழர்களின் பலிபீடத்தின் மீது இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க நீங்கள் விரும்பினுல் இந்தியாவின் ஒருமைப்பாடு அபாயத்துக்கு இலக்காகும் என எச்சரிக்கிறேன்.

பிரிவினை விதைகளை தமிழர்களின் இதயங்களில் நீங்கள் விதைக்கிறீர்கள் என எச்சரிக்கிறேன். இந்த மன்றத்தில் தரப்பட்ட இந்த அறிக்கையை ஜெயவர்த்தனே தயாரித்து கொடுத்து, வெட்கமில்லாமல் இங்கே ராஜீவ் காந்தி வாசித்து காட்டியுள்ளார்.

*(11.11.87-ல் மாநிலங்களவையில்)*

**எனக்கு வாழ்க்கையையும், அன்பையும் சொல்லிக் கொடு. உனக்கு இந்த உலகத்தில் காணமுடியாத நளினமான, அன்பான, அமைதியான, சுதந்திரமான என் இதயத்தைத் தருகிறேன்.**

**—ஹெரிக்**

ஒரு விளக்கு போன்ற இதயம் முன்னுல்செல்கின்ற போது நடக்கின்ற பாதையில் பிரகாசம் ஏற்பட்டு இருளில் மறைந்திருந்த பொருள்கள் எல்லாம் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கின்றன.

# மிஸ்டர் ராஜபாளையம்



# பிழைக்கத் தெரிந்தவர்தான்

கைகளில்(?) இரண்டு பொட்டலங்களை தூக்கிக் கொண்டு வேகவேகமாக வந்தார் மிஸ்டர் ராஜபாளையம். 'வெடிகுண்டோ' என்று சந்தேகப்பட்ட நாம் பயந்து பின்வாங்கினோம்.

''பயப்படாதீர்கள், காங்கிரஸ் மாநாட்டில் போடப்பட்ட தயிர்சாதம் தான் இது. பிரித்துப் பாருங்கள் ஒரே முந்திரிப்பருப்புதான். பாயசத்திலிருந்து பாயா வரை எல்லாவற்றிலும் முந்திரிப்பருப்பு மயம்தான். சமையல் வெகுஜோர். மாநாட்டின் உருப்படியான ஒரே அம்சம் சாப்பாடு தான் என்றவர் 'நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டார்.

ஜெயலலிதா அணியிலிருந்து குடியரசு கட்சிவிலக்கப்பட்டு விடும்சூழ்நிலை உருவாகியிருக்கிறது. குடியரசு ஆட்சியின் தலைவரும், முன்னாள் எம். எல். ஏவுமான தமிழரசனுக்கும் ஜெயலலிதாவுக்கும் 'டேர்ம்ஸ்' சரியில்லை. தமிழரசனின் தொகுதியான வடாற்காடு பேரணாம்பட்டில் வேறு வேட்பாளரை தயார் செய்யச் சொல்லி ஜெயலலிதா உத்தரவிட்டு விட்டாராம், அடிதடி சட்டசபையில் இருந்த ஜெயலலிதா ஆதரவு எம். எல். ஏக்கள் 33பேரில் தமிழரசனும் ஒருவர்''. —என்ற மிஸ்டர் ராஜபாளையம் படுஉற்சாகத்திற்கு மாறினார்.

ஜெயசித்ரா தெரியுமோ உங்களுக்கு? அவர் 'காங்கிரஸ் கட்சியில் சேருவதாக மாநாட்டுக்கு முன்பே மூப்பனாரிடம் 'அப்பாயிண்ட்மெண்ட்' கேட்டிருக்கிறார். மூப்பனார் தேதி கொடுத்து விட்டு ஜெயசித்ராவுக்காக உட்கார்ந்திருந்தது தான் கண்டபலன், ஜெயசித்ரா வரவில்லை. அவரிடம் இருந்து ஃபோன் மட்டும் வந்தது.

காங்கிரஸ் மாநாட்டு மேடையில் கட்சியில் சேர்ந்து விடுவதாக ஜெயசித்ரா கூறியிருக்கிறாள். மூப்பனாருக்கு படுகோபம் வந்து விட்டது. ''அதெல்லாம் முடியாது நீ கட்சியில் சேரவேவேண்டாம்.'' என்று கூறி போனை வைத்து விட்டாராம் மூப்பனார். இன்னொரு விஷயம் பிலிம்சேம்பர் ஜி.வி. காங்கிரஸ் மாநாட்டு செலவுகளுக்காக நிதி வசூல் செய்த போது ஜீ.வி. யிடம் ஒரு 'லம்ப் அமவுண்ட்' எதிர் பார்த்திருக்கிறது காங்கிரஸ் கட்சி. ஆனால் கட்சிகளில் எந்தப் பொறுப்பு மில்லாத நிலையில் தான் பணம் தர முடியாது என்று ஜீ.வி. சொல்லி விட்டாராம். இதனால் சரியான 'இன்வைட்' இல்லை.

அதனாலேயே மூப்பனாரின் நட்பைக் கருதி சிறிது நேரம் தலை காட்டிவிட்டு வந்திருக்கிறார் ஜீ.வி.'' ஒரே மூச்சில் சொல்லி முடித்த மிஸ்டர் ராஜபாளையம் தன் முதுகையும், வயிற்றையும் தானே அடித்து கொண்டார். நாம் உடனே தயாராக வைத்திருந்த பிஸ்கட் பாக்கெட்டை நீட்டினோம். ''இனிமேல் பிஸ்கெட் வாங்காதீர்கள். ஃபைவ்ஸ்டார் வாங்கி வையுங்கள்'' என்று கூறி நம்மை வெறுப்பேற்றிய ராஜபாளையம் மேலும் தொடர்ந்தார்.

''முஸ்லீம் லீக் தலைவர் அப்துல் சமதும் கருணாநிதியும் சேர்ந்து கூட்டு பேட்டி கொடுத்திருந்தாலும் கூட முஸ்லீம் லீக்-தி.மு.க.உறவு நீடிக்குமா என்பது கேள்விக்குறிதான். லீக் தலைவர் அப்துல் சமது தனது சொந்த வியாபார விஷயத்தில் மத்தியஅரசு ஆதரவு பெற வேண்டிய நிலையிருக்கிறார். மீண்டும் தி.மு.க.உறவில் விரிசல் வரலாம்.

ஆனால் முஸ்லீம் லீக் தி. மு. க. வுடன் உறவு கொண்டாலும் சரி காங்கிரஸுடன் உறவு கொண்டாலும் சரி அதில் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

முஸ்லீம் லீக்கின் செல்வாக்கு மிக்க தலைவர்களான அப்துல் பகால் அப்துல் லத்தீப் இருவரும் தி. மு. க. ஆதரவாளர்கள், இன்னொருவரான யூசுப் காங்கிரஸ் ஆதரவாளர். எனவே நமது எந்த முடிவு எடுத்தாலும் பிளவுதான்.'' என்று சொன்ன ராஜபாளையம் திடீரென்று சோகத்துக்கு மாறி 'உச், உச்' என்றார் என்ன என்பது போல முறைத்தோம்.

''காளிமுத்துவைப் பார்த்தேன். கடந்த சில வாரங்களாக அவருக்கு அம்மை நோய் கண்டிருந்தது. தற்போது பரவாயில்லை ஆனாலும் ஆள் பாதியாகிப் போயிருக்கிறார் பாவம்''.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''சமிபத்தல் தி.மு.க. இளைஞரணி மாநாடு கோவையில் நடந்திருக்கிறது. தி.மு.க. இளைஞரணி செயலாளர் ஸ்டாலினுக்கு பிரச்சாரவேன் ஒன்று பரிசாக வழங்கவேண்டும் என்று அப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. உடனே ஸ்டாலின் அந்த பொறுப்பாளரைக் கூப்பிட்டு ''எனது தந்தையாரிடம் (கருணாநிதி) ஒரு வேன் விற்பனைக்குஇருக்கிறது. அதை வேண்டுமானால் வாங்கிக் கொடுத்து விடுங்கள்'' என்றி கூறியிருக்கிறார். எப்படி சாமர்த்தியம்! பிழைக்கத் தெரிந்தவர்தான்'' என்ற ராஜ பாளையம் சற்று நேரம் யோசித்தார்

''காங்கிரஸ் ஏடான நவசக்தி பத்திரிகை ஒரு சில பாலிஸிகளை வைத்திருக்கிறது. முரசொலியைப் போல 'தலைவர்கள் கலந்து கொள்ளும் தொண்டர்கள் திருமணம், மரணம், இறுதி அஞ்சலி' போன்ற செய்திகளை பிரசுரிப்பதில்லை என்பதும் கொள்கைகளில் ஒன்று.

கடந்த மாதம் திண்டிவனம் ராமமூர்த்தியும், மூப்பனாரும், திண்டிவனத்தில் ஒரு கல்யாணத்தில் கலந்து கொண்டார்கள். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் நவசக்தியில் பிரசுரிக்கச் சொல்லியிருக்கிறார் கல்யாணம் நடத்திய கட்சிக்காரர். ஆனால் பத்திரிகை மறுத்து விட்டது. உடனே கல்யாணக்காரருக்கு கோபம் வந்து திண்டிவனம் ராமமூர்த்தியிடம் போய் முறையிட்டிருக்கிறார். அவருக்கோ இவரைவிட இன்னும் அதிகமான கோபம் வந்து 'நவசக்தி' அலுவலகத்திற்கு வந்து ''கம்யூனிஸ்டுகளாக சேர்ந்து, பத்திரிகையை விணடிக்கிறீங்களா'' மாநாடு முடியட்டும் ஒரு கை பார்த்துக்கறேன் என்று கருவிவிட்டு போய் விட்டார். அங்கு நிர்வாகம் பார்த்து கொண்டிருக்கும் 'கோபண்ணா' என்பவருக்கு கோபம் வந்து மூப்பனாரிடம் போய் முறையிட்டிருக்கிறார். 'நான் போய் விடுகிறேன்' நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார். அவரை சமாதானம் செய்வதற்குள் மூப்பனாருக்கு போதும் போதுமென்றாகிவிட்டது.

என்ற மிஸ்டர் ராஜபாளையம் சடாரென்று எழுந்து இரண்டு கால்களில நின்று சிறிது நேரம் சர்க்கஸ் காட்டினார். பிறகு கால்களை தூக்கி 'டப் டப்' என்று அடித்துக்கொண்டார்.

நம்மை ஒருமுறை பார்த்து புன் சிரிப்பை சிதற விட்டவர் ''ரொம்ப டயர்ட்! அடுத்த வாரம் பார்க்கிறேன்'' என்றபடி பாய்ந்து வெளியே சென்று



# காளிமுத்துவின் மவுசு

''கிரிமினல் கைதி'' என்ற பட்டம் சூட்டுவதற்கு முன் ''அரசியல் தியாகி'' என்ற அங்கீகாரத்திற்காக அலைந்து கொண்டிருக்கும் ஜானகி அணியின் வசன கர்த்தா. டாக்டர் கா. காளிமுத்துவின் செல்வாக்கு இன்று இப்படி தான் இருக்கிறது!

80ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் திருப்பரங்குன்றம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் காளிமுத்து. இந்த காலக் கட்டத்தில்தான் திருப்பரங்குன்றம் தொகுதியில் விளச்சேரி என்ற கிராமத்தில் பர்னிச்சர் இண்டஸ்ட்ரியல் வைத்திருந்தார். ராமின் மெயின். காளிமுத்துவிற்கு மிகவும் நெருக்கமானார், பல களியாட்டங்களை இருவரும் சேர்ந்து நடத்தியவர்கள். காளிமுத்துவின் நட்பு-வங்கிகளில் கைவரிசையைக் காட்ட ராமின் மெயினுக்குப் பயன்பட்டது. சந்திக்கு வந்தது இவர்களது சங்கதிகள். புரிந்து கொண்டார் காளிமுத்து. ராமின் மெயின் நட்பை இழக்க விரும்பவில்லை. திருப்பரங்குன்றம் தொகுதியை இழக்க நினைத்தார். 84 தேர்தலில் மதுரை கிழக்குத் தொகுதியில் போட்டியிட்டார்.

சுமார் 6238 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். கருணாநிதியிடம் காளிமுத்துவின் மனைவி நிர்மலா தன் குழந்தைக்கு பெயர் வைக்குமாறு வேண்டிச் சென்றார். அ.தி.மு.க விலும், எம் ஜி.ஆரிடத்திலும் பிரச்சினை எழுந்தது. காளிமுத்து ஆவேசமானார். தனது உண்மையான மனைவி மனோகரி தான் என்றார். நிர்மலா கருணாநிதிதானெங்கள் திருமணத்தை நடத்தி வைத்தார். நான்தான் முதல் மனைவி. உண்மையான மனைவி என்றார் பிரச்சினை கோர்ட்டு வரைச் சென்றது. இடையில் யாரோ ஒரு மூன்றாவது பெண்ணும் காளிமுத்துவின் மனைவியென்று சொந்தம் கொண்டாடினார். இந்த மனைவிகளின் போராட்டம் மதுரை கிழக்குத் தொகுதி மக்களிடமும், தமிழக மக்களிடமும் காளிமுத்து மீது வெறுப்பை ஏற்படுத்தியது. இது மட்டுமல்ல காளிமுத்து மந்திரியாக வாழ்ந்த காலத்தில் நெசவாளர் பிரச்சினை, நிலையூர் கால்வாய் நிரந்தர பாசன வசதி, மற்றும் அடிப்படை வசதி கூட தனது தொகுதி மக்களுக்காக செய்யவில்லை. மதுரையில் தனது ஜம்பம் இனி பலிக்காது என்றும் உணர்ந்து கொண்டார் காளிமுத்து.

தப்பித்தவறி மதுரை கிழக்குத் தொகுதியிலேயே காளிமுத்து மீண்டும் போட்டியிடுவாரானால் ...... மதுரை கிழக்கு சேர்மன் அய்யன்னம்பலம், கம்யூனிஸ்டு பி. எம். குமார் மதுரை மாவட்டத்திமுகச் செயலர் பொன் முத்துராமலிங்கம் போன்றோர் காளிமுத்துவை மூட்டைக் கட்டி அனுப்ப முடிவு செய்து விட்டனர்.

வரப்போகும் தேர்தலில் முத்து தேவன் பட்டி ஊராட்சித் தலைவரும்-காளிமுத்துவின் சகோதரருமான பொன்னு பாண்டியன் என்பவரின் ஒத்துழைப்போடு சிவகாசி தொகுதியில் போட்டியிட புறப்பட்டு விட்டார் காளிமுத்து.

சிவகாசி மக்களே-திருப்பரங்குன்றத்திலும், மதுரைக் கிழக்குத் தொகுதியிலும் நின்ற அதே காளிமுத்து தான் இன்று உங்கள் தொகுதிக்கும் வருகிறார். கவனித்துக் கொள்ளுங்கள் !?!

— கோ. பாஸ்கரன்

உண்மையில் இரகசிய யோசனைகள் வைத்தானைச் சேர்ந்தவைகளாக இருக்கின்றன.

—திருக்குர்ஆன் 58:10

மூன்று பேர் ஒன்றாக இருக்கும்போது ஒருவனை ஒதுக்கிவிட்டு மற்றும் இருவர் இரகசியம் பேசுதல் கூடாது.

—நபிகள் நாயகம் (ஸல்)

உன்னுடைய இரகசியம் உன்னிடம் சிறைப்பட்ட கைதி. நீ அதை விடுதலை செய்தால் அதனிடம் நீ சிறைப்பட்டு விடுவாய் என்பதை நினைத்துக்கொள்.

—ஹசரத் அலி (ரலி)

வெளிப்படாத மறை பொருளும் இல்லை. வெளி வந்து பிரசித்தமாகாதபடி இரகசியமாகக் காக்கப் பட்டதும் எதுவுமில்லை.

-பைபிள்

அவன் வாயில் இருக்கும் இரகசியம் ஒரு காட்டுப் பறவை கூட்டிலிருப்பது போன்றது. அது திறந்தவுடன் பறந்து விடும்.

—பென் ஜான்ஸன்

இரகசியம் ஒருவனுக்குத் தெரிந்தால் மிகச் சிறிது இருவருக்குத் தெரிந்தால் போதுமானது. மூவருக்குத் தெரிந்தால் மிக அதிகமானது.

—ஹோவெல்

அதிக நாட்கள் இரகசியத்தை வெளியிடாமல் இருப்பது பெண்களுக்கு மிகக் கடினமானது. இந்த விஷயத்தில் நிறைய ஆண்கள் பெண்களாக இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

--ஃபோன்டைன்

தன்னுடைய வேலைக்காரனிடம் இரகசியத்தை வெளியிடுகிறவன், வேலைக்காரனை முதலாளியாக்கித் தன்னை வேலைக்காரனாக்கிக் கொள்கிறான்.

www.tamilarangam.net



# பணமா?... பாசமா?...

ஏழையை மனுசன் அளக்கிறாண்டா - அவன்
ஏழ மனசாலே
மனுசனை மனுசன் அளக்கிறாண்டா
பாவக் காசாலே.

காசு உள்ளவன் மனசிலே
அன்பு பாசம் இல்லே
அன்பு பாசம் உள்ளவனிடம்
கண் இல்லாக் காசு இல்லே.

இன்று இருந்து நாளை அழிவது
பாவம் படிந்த காசு.
பிறப்பு முதல் இறப்பு வரை
உடலுடன் ஒட்டி இருப்பது அன்பு மனசு

பாசம் இல்லாதவன் வாழ்விலே
நல்ல நிம்மதி இல்லை
நேசம் கொண்டவன் வாழ்விலே
என்றும் துன்பமும் இல்லை.

— ஞானம் பிள்ளை —

மார்ச் மாதம் (இதழ் 13) ஈண்டையின் "அட அப்படியா" என்ற தலைப்பில் 1971ல் கலைஞரின் ஆட்சி கலைக்கப்பட்டதாக வெளியிட்டு இருந்தீர்கள். அது தவறு. 1971ல் அகில இந்தியாவிலுமே லோக்சபையும், சட்டசபையும் கலைக்கப்பட்டு தேர்தல் நடந்தது. அதில் கலைஞர் ஆட்சி (தி.மு.க) 234 இடங்களில் 184 இடங்களைப் பெற்று மாபெரும் வெற்றி ஈட்டியது. அடுத்து 1976ல் எம்.ஜி.ஆர் ஆட்சி கலைக்கப்பட்டதாக எழுதி இருந்தீர்கள். அதுவும் தவறு. 1977ல் தான் எம்.ஜி.ஆர் ஆட்சியே தமிழ் நாட்டில் உருவானது. 1976ல் கலைக்கப்பட்டது கலைஞர் ஆட்சியாகும்.

MR. Rajaganthan
15 bis Henri Dunant

www.tamilarangam.net

**வன்னிய அடிகள் விஷமம் என்ற தலைப்பில் உங்கள் விசிட்டர் இதழில் வெளியிட்ட கட்டுரைக்கு வாசகர்களிடம் இருந்து பல் வேறு வகையான விமர்சனங்கள் வந்துள்ளன.**

**தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளை வெளியிடுகிறோம்.**

**— ஆசிரியர்**

# இனப்பகையை வளர்க்கிறார்!



**தா**ழ்த்தப்பட்ட மக்கள் கிறித்தவ மதத்திலோ, பௌத்த மதத்திலோ இணையும் பொழுது ஏற்படாத பரபரப்பும் கொந்தளிப்பும் இஸ்லாத்தில் இணையும் பொழுது ஏன் ஏற்படுகிறது என்றால் ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட அம்மக்கள் எம்மதத்தில் இணைந்தாலும் அவர்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. பிறர் பார்வையிலும் அவர்கள் எவ்வித மதிப்பையும் பெறுவதில்லை. மாறாக இஸ்லாத்தில் இணைந்த பின் அவர்களின் உடையிலும், நடையிலும் ஒரு பெரும் மாற்றமே ஏற்பட்டுவிடுகின்றது. அதற்கு முக்கிய காரணம் அவர்கள் மனதில் ஏற்படும் பெரும் மாற்றம்தான். தாழ்வு மனப்பான்மையின் கண் சிக்குண்டிருந்த அவர்களை தாங்கள் எவ்விதத்திலும் பிறரைவிட தாழ்ந்திடவில்லை என்னும் உணர்வினை இஸ்லாம் ஊட்டிவிடுகின்றது. இஸ்லாத்தில் இணைந்த மறுவினாடியே அவன் இறையில்லமாம் பள்ளிவாயிலின் உட்புறம் சென்று முன் வரிசையில் அனைவருக்கும் சமமாக இறைவனுக்கு மண்டியிடும் உரிமையினை பெறும்பொழுது அவன் இரண்டு விஷயங்களை உணர்ந்து கொள்கிறான். முதலாவது, இறைவனின் முன் அனைத்து மனிதர்களும் சமமானவர்களே. பிறப்பால் எவனும் உயர்வதும் இல்லை, தாழ்வதும் இல்லை. இரண்டாவது மனிதன் கூன் குறுகி அடிமையாய் மண்டியிட வேண்டியது தன்னைப் போன்ற மனிதர்களுக்கு முன்போ அல்லது மற்ற இனங்களுக்கு முன்போ அல்ல! மாறாக சர்வ வல்லமையும் வாய்த்த இறைவனுக்கு முன்தான். இந்த இரு உண்மைகளை உணர்ந்த அவனின் மனம் பெருமிதத்தால் நிறைகிறது. எனவே அவன் நெஞ்சை நிமிர்த்தி நடக்க ஆரம்பிக்கிறான். மேலும் பிறர் பார்வையினிலும் தனி மதிப்பைப் பெறுகின்றான். இவ்வளவு காலம் தன்னைக் கண்டு கூனி, குறுகிச் சென்றவன் இன்று தலை நிமிர்ந்து செல்கிறானே என்றும் வயிற்றெரிச்சலின் காரணமாக வேதனைப்படும் சிலருக்கு இஸ்லாத்தின் மீது கோபம் ஏற்படுகிறது. இதனால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாத்தில் இணைவதைக் கேள்விப்படும் போது ஒரு குறிப்பிட்ட சாரார்தான் அதிக ஆத்திரம் கொள்கின்றனர்.

இந்த உண்மையினை வன்னிய அடிகள் அறியாதவரல்லர். எனினும் அவர் சரித்திரச் சான்றுகளை திரித்துக் கூறுகிறார். இந்தியாவில் முஸ்லிம்கள் தொடர்ந்து 800 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தனர். அடிகளார் குறிப்பிடுவது போல் ஹிந்துக்களை முஸ்லிம்கள் கொன்று குவித்திருந்தால் இன்று இந்தியாவில் ஹிந்துக்களே இருந்திருக்க முடியாது. மதவெறியர் என்று குற்றஞ்சாட்டப்படும் ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தில்தான் மொகலாய சாம்ராஜ்யம் விரிவடைந்தது. அவர் ஹிந்துக்களை வலுக்கட்டாயமாக முஸ்லீமாக மாற்றி இருந்தால் இன்று இந்தியாவின் பெரும்பகுதியினராக முஸ்லிம்கள் இருந்திருப்பர். ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் முயன்று இருந்தால் இன்று கர்நாடகம் இஸ்லாமிய மாநிலமாக இருந்திருக்கும். அவ்விதமின்றி இன்றைய நிலையே அன்றைய முஸ்லிம் மன்னர்களின் செயல்திறனை தெரிவிக்கிறது.

இன்று செல்வச் செழிப்பில் மிதந்து கொண்டிருக்கும் வளைகுடா நாடுகளில் லட்சக்கணக்கான ஹிந்துக்கள் எவ்வித தொல்லையும் இன்றி கை நிறைய சம்பாதித்துக் கொண்டிருப்பதே முஸ்லிம்கள் மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வரலாறு மற்ற அவதார புருஷர்களின் வரலாறு போன்று மூடி மறைக்கப் பட்ட ஒன்றல்ல. அது ஒரு திறந்த புத்தகம். Rev. Bosworthsmith என்ற அறிஞர் கன்பூசியஸ், மோசஸ், ஜீசஸ், புத்தர் சோலன் ஹிப்போக்கிரடிஸ் போன்றோரின் வாழ்க்கை வரலாறு குழப்பங்கள் நிறைந்ததாகவும், ரகசியமானதாகவும் இருக்கிறது. ஆனால் முஹம்மது நபியின் வரலாறு தெளிவாக இருக்கிறது என்று Mohamed and Mohamednism என்று நூலில் குறிப்பிடுகிறார். எனவே எவர் வேண்டுமானாலும் முஹம்மது நபியின் வரலாற்றை ஆராயலாம். அப்படி ஆராய்கின்ற போது முஹம்மதின் வாழ்க்கை மற்ற மனிதர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்ததை உணர முடியும். 1795-ம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அரபிப் பேராசிரியராகப் பணியாற்றிய கார்லைல் Carlyle, "Hero who is the prophet" என்னும் நூலில் முஹம்மது நபி அவர்களைப் பற்றி தூஷணையாக எழுதியுள்ள லூதர், வால்டேர் போன்றோரின் மறுப்பாக நபியின் அருங்குணங்களை விவரித்து எழுதியிருக்கிறார் 12 நூற்றாண்டுகளாக பலகோடி மக்களை நிர்வகிப்பவர் நாகரிகமான கிழக்கு, மேற்கு நாடுகளை ஏற்படுத்திய ஒரு மனிதர் ஒரு பொழுதும் ஏமாற்றுக்காரராக, ஒரு பொய்யராக இருக்க முடியாது. A low person could not reach hadrat Mohammed's accomplishments, only a perfect person an owner of faith and morality can give faith to others. If it had not been so. No one would have follwed him. Hadarat Mohammed's words are true for a liar can not establish a religion or even a home.

சாதாரணமான ஒருவர் முஹம்மதுவின் சிறப்பைத் தொட இயலாது. ஓர் உயர்ந்த உண்மைக்குச் சொந்தக்காரராக அருங்குணமுடையவராக இருக்கும் ஒருவரே பிறர் மனதிலும் நம்பிக்கையூட்ட முடியும். பரிசுத்தமான மக்களுக்காகவே முஹம்மது நபி பிறந்தார். அவர் ... டார்கள். ஹஸரத் முஹம்மதுவின் வார்த்தைகள் உண்மையானவை. ஒரு பொய்யர் ஒரு மதத்தை என்ன ஒரு குடும்பத்தைக் கூட உருவாக்க முடியாது.

பாவம் வன்னிய அடிகள் தன் இன மக்களாலேயே ஒதுக்கப்பட்ட அவர் சகோதர பாசத்துடன் வாழும் முஸ்லிம்களுக்கும் வன்னிய இன சகோதரர்களுக்கும் இடையே பகையை உருவாக்க எண்ணுகிறார். ஏற்கனவே வன்னிய மக்களின் இட ஒதுக்கீடு கொள்கைக்கு முஸ்லிம்கள் ஆதரவு தந்துள்ளதை அடிகள் மறந்து

www.tamilarangam.net





# போதையின் பாதையில் மோனிகா!

போதை வஸ்துக்களின் புகழ் நாளாவட்டத்தில் பொங்கிப் பெருகி வருகிறது. இன்றைய இளவட்டங்கள் மத்தியில் போதைப் பொருட்களின் நடமாட்டம் அதிகமாகிவிட்டது. பள்ளிகள், கல்லூரிகள், விடுதிகள் - என்று அங்கங்கு ஒரு இளைஞர் கும்பல் தங்கள் வாழ்க்கைக்கு மரண பத்திரம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ மாணவிகள் இந்தப் பழக்கத்திற்கு அடிமையியாகி தங்களையே தானமாக்கித் தந்து வாழ்க்கையை வீணடித்துக் கொண்டுள்ளனர் இந்தக் கொடுமையான பழக்கத்திற்கு அடிமைப் பட்டுப் போனவர்களின் குடும்பங்கள் நிறையவே நடுவீதிக்கு வந்து விட்டிருக்கின்றன.

-இந்த போதைக்கு அடிமையாகி, ஒரு பெண்ணின் வாழ்க்கையே நசித்துப் போன உண்மைக் கதை இது.

-கிழக்கு, மேற்கு ஜெர்மன் நாடுகளைப் பிரிக்கும் எல்லைப் புறத்தில் இருக்கும் அமைதியான கிராமம் பிலிப்ஸ்டால். இக்கிராமத்தில் வசித்து வரும் பெரும்பாலோர் அருகேல உள்ள பாக்சைட் சுரங்கங்களில் பணியாற்றபவர்கள். மேய்ச்சலுக்குச் செல்லுபவர்களும் உண்டு.

-பிலிப்ஸ்டால் கிராமத்திற்கு சற்றுத் தொலைவில், நாகரீகமான நகரம் "பேடுஹர்ஸ் ஃபெல்ட்". இந்நகரின் ஆரம்பத்தில் கேளிக்கை விடுதி ஒன்று அமைந்திருந்தது. இந்த விடுதி 'டிஸ்கோ டான்ஸூக்குப் பெயர் பெற்றது. தற்காலிகமாக வந்து இந்நகரில் தங்கியிருந்த அமெரிக்கப் படைகளுக்கு இந்த விடுதி ஒரு உல்லாசபுரியாக அமைந்தது. உல்லாச விடுதியின் மங்களான ஒளி விளக்கின் மயக்கத்திலும், போதையூட்டும் நடனங்களிலும் மெய்மறந்து சரச சல்லாபங்களில் அவரவர் இன்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய போக நகரமாக இவ்விடுதி இருந்து வந்தது, படைவீரர்களின் பசிக்கு மருந்தாக அமைந்தது. இந்தச் சூழலில்தான் ஒரு வேதனையான கதை ஆரம்பமாகியது.

-பிலிப்ஸ்டாலில் உள்ள அரசினர் மருத்துவமனையில் செவிலியாகப் பணியாற்றி வந்தவள் 'மோனிகா' மிகவும் பேரழகியான மோனிகா திருமணமாகி இரண்டு பெண் குழந்தைக்கு தாயாகவும் இருப்பவள். இவளது கணவன் வெய்னார்டு. வேலை வெட்டி ஏதுமில்



மோனிகா

அமைதியைப் பரப்புங்கள். பசித்தவர்க்கு உணவளியுங்கள். உறவு முறையை விடாதீர்கள். இரவு பிறர் உறங்கும்போது விழித்து வணக்கம் புரியுங்கள். சொர்க்கத்தினுள் நுழைவது எளிதாகும்.

—நபிகள் நாயகம் (ஸல்)

உடலுக்குத் தூக்கம் தேவைப்படுவதுபோல், மூளைக்கு ஓய்வு கொடுப்பதுதான் உண்மையான அமைதியாகும். அமைதியாக இருப்பது மிக நல்ல பழக்கம். ஏனெனில் அது தவறுகளை மூடி, இரகசியங்களைக் காத்து, விவாதங்களைத் தவிர்த்துப் பாபத்தைத் தடுக்கிறது.

நீ பரிபக்குவமான மனிதனையும், நேர்மையாளனையும் கவனித்துப் பார். அவனுடைய முடிவு அமைதியானதாய் இருக்கும்.

—பைபிள்

நாம் அமைதியாக இருந்தால், தெய்வங்கள் மெதுவாகப் பேசுவதைக் கேட்கலாம்.

—எமர்சன்

கண்ணீர்த்துளிகள் ஆத்மாவிற்கு கோடை கால மழையாக இருக்கின்றன.

—அல்பிரட் [illegible]

www.tamilarangam.net

லாமல் கிராமத்தைச் சுற்றுவதை மட்டுமே வழக்கமாக்கிக்கொண்டவன்.

-மோனிகாவின் வருமானத்தை மட்டும் நம்பியே குடும்பம் நடத்த வேண்டிய சூழ்நிலை. (மோனிகாவின் வயதான தாயும் இதில் அடக்கம்)

-'பிரிகிடா' - இவள் மோனிகாவின் தங்கை. முன்னாளில் ஒரு அமெரிக்க வாலிபனை மணந்து கொண்டு அவன் மூலமாக மதுவுக்கு, கஞ்சாவுக்கு அடிமையாகி ஒரு கட்டத்தில் அவனை விவாகரத்து செய்து தூக்கி எறிந்து விட்டவள். கணவனைத் தூக்கி எறிந்த பிரிகிடாவுக்கு அவன் கற்றுத் தந்த தீய பழக்கங்களைத் தவிர்க்க முடியாமலாகி விட்டது. எப்போதும் போதையுடனே அலைபவளுக்கு டிஸ்கோ டான்ஸ் விடுதி கண்களில் படவே, உடனடியாக அதனுடைய அங்கத்தினராகி உல்லாச வாழ்க்கையை பல ஆடவர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தாள்.

-பிரிகிடாவின் இந்த செயல்கள் மோனிகாவிற்கு எரிச்சலை ஏற்படுத்தவே தங்கையைக் கூப்பிட்டுக் கண்டித்தாள். ஆனால், விளைவு வேறுவிதமாக மாறியது. உபதேசம் செய்த அக்காவை தன் பாதைக்குக் கொண்டு வர நினைத்த பிரிகிடா போதையுடன் பேசி கேளிக்கை விடுதியின் சொர்க்க போகங்களை எடுத்துக் கூறி ஆசை வார்த்தைகளை அள்ளிக் கொட்டவே, வெகு சீக்கிரமே மோனிகா அந்த ஆசை வார்த்தைகளுக்கு அடிமையாகிப் போனாள்.-தங்கையின் வழியை மாற்ற நினைத்தவள் தன்னுடைய வழியை மாற்றிக் கொண்டாள்.

- பணி நேரம் தவிர்த்து மற்ற நேரங்களை விடுதிகளில் பல போதைபொருட்களைக் கையாண்டு பல ஆண்களின் படுக்கையைப் பகிர்ந்து கொண்டு... இப்படி சுதந்திரமாகச் செயல்பட ஆரம்பித்தாள் மோனிகா. பிரிகிடாவும் அக்காவை இடுக்கிப்பிடியில் வைத்திருந்தாள்.

- மோனிகாவின் இந்த திடீர் மாற்றம் குடும்பத்தையே நிலைகுலையச் செய்தது. கணவன் வெய்னார்டு மனைவியைக் கண்டித்துப் பார்த்தான். ஆனால், கையாலாகாதவனின் வார்த்தையாகி விட்டது.

- மோனிகாவிற்கு குடும்பத்தில், கணவனின் மீது இருந்து வந்த விரக்திகளுக்கு விடுதி வாசம் - ஒரு வடிகாலாய் அமைந்தது. இதை அவள் பெரிதும் விரும்பினாள்.

- ஒரு கட்டத்தில் மோனிகாவின் செயல்கள் எல்லைமீறவே வெய்னார்டு மிகவும் வெறுப்படைந்துபோய் ஆத்திரமுற்று அவளைக் கண்டபடி அடித்து நொறுக்கினான். மோனிகா நிலைகுலைந்துவிழுந்தாள்.

- இந்த சம்பவம் நடந்த சிலநாட்களுக்குள் மோனிகா ஒரு நாள் விடியற்காலையில் அழுது புலம்பியவாறு உள்ளூர் காவல் நிலையத்தைநோக்கி ஓடிக்கொண்டிருந்தாள். - வழிமறித்துக் கேட்டவர்களுக்குப் பதில் சொல்லாமல் ஓடியவளை காவலர்கள் விபரம் கேட்ட போது 'தன் குழந்தைகள் நான்கு வயதான 'கரோலாவையும்',மூன்று வயதேயான 'மெலானி'யையும் காலையில் யாரோ கடத்திப் போய் விட்டார்கள் என புகார் செய்தாள். குழப்பத்தின் உச்சியில் கதிகலங் கிப் போயிருந்தவளை போலீசார் சமாதானப்படுத்தி குழந்தையைத்தேடித்தருவதாக உறுதியளித்து வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் நடந்தது மே மாதம் 4ம் தேதி (1987) -மோனிகாவின் மீது இரக்கமுற்ற சில தனியார்துறை டிடெக்டிவ் ஏஜென்சிகள் பெருமுயற்சி எடுத்து துப்பு துலக்கிய போது காணாமல் போன இரு குழந்தைகளும் மே-7ம் தேதியன்று மோனிகா வீட்டின் அருகே உள்ள ஒரு புதர்க்கூட்டத்திலிருந்து கண்டெடுத்தனர். மேற்கொண்டு வழக்கு ஆரம்பமாகியது. கொலையாளிகளைப் பிடிக்கும் முயற்சி தீவிரப்படுத்தப் பட்டது. சுமார் பத்து மாதங்களுக்கு மேலாக பல்வேறு தரப்பு சாட்சியங்களும் விசாரிக்கப்பட்டு விசாரணையின் இறுதிக் கட்டத்தில் பரபரப்பான முறையில் ஒருவர் கைது செய்யப் பட்டார். கைதான நபரைப்பார்த்து கிராமமே திகைப்பில் மூழ்கியது.

- நீதிபதியின் தீர்ப்பிற்காக வழக்கு காத்திருந்தது.



1988 - பிப்ரவரி 12ம் நாள்,

மாவட்ட நீதி மன்றத்தில் கிராமத்து மக்களனைவரும் இருந்தனர்.

- பத்திரிக்கைகள் பல்வேறு கோணங்களில்வழக்கைப் பற்றியும், தீர்ப்பைப்பற்றியும் விலாவாரியாக எழுதித் தள்ளியிருந்தன.

- பார்வையாளர்களின் வரிசையில் பத்திரிகையாளர்கள் அதிகம் நிரம்பியிருக்க கூட்டம் முழுவதும் நீதிபதியின் வருகையை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தது.

- படுநிசப்தம்!... நீதிமன்றம் 'கப்சிப்' என்றிருந்த வேளையில்

- நீதிபதியின் வருகையைத் தெரிவித்து டவாலிக்காரர் கட்டியம் தெரிவிக்க...

- நீதிபதி ஆசனத்தில் வந்தமர்கிறார்.

- வழக்கு ஆரம்பமாகி வெகுதீவிரமான கட்டத்தில் சூடு பறக்கிறது.

- கொலை வழக்கில் கைதான நபருக்காக 9 வக்கீல்கள் வழக்கில் குதித்திருந்தனர்.

இத்தனை ஆரவாரங்களுக்கிடையே மோனிகா மட்டும் அமைதியாக உட்கார்ந்திருந்தாள். எந்தவித பதட்டமும் இல்லாமலிருந்த மோனிகா மிகவும் விலையுயர்ந்த வெளிர்நீலநிற மேலாடையுடன் ஆரஞ்சு கலர் சாக்ஸுடன் கூடிய ஆரஞ்சு நிறபாதணிகளை அணிந்து, தலையில் வெண்பட்டு நிறத்தில் ஸ்கார்ப் பறந்து கொண்டிருந்தது. அவளது அழகான கூந்தலில் செருகப்பட்டிருந்த ப்ளாஸ்டிக் ரோஜா - அவளை ஒரு ராணியாக்கிக் காட்டிக் கொண்டிருந்தது. அவளுடைய பக்கத்தில் சோகமே உருவாக வெய்னார்டு தலை கவிழ்ந்திருந்தான்.

-நீதிபதி தன் தீர்ப்பினை படிக்க ஆரம்பித்தார்.

- 'பத்துமாத காலங்களாக பல தரப்பு சாட்சிகளையும் விசாரிக்கப் பட்டு, பிராசிக்யூஷன் தரப்பில் 97 பேர்களின் சாட்சியங்களுடன் 17 வகையான ஆதாரங்களின் அடிப்படையின் பேரிலும் - கொலை செய்யப்பட்ட சிறுமியின் ஸ்கர்ட் பட்டன் சம்பந்தப்பட்ட கொலையாளியின் காருக்குள் கிடைத்திருப்பதும், போஸ்ட்-மார்ட்டம் அறிவிப்பின் அடிப்படையில் துளிக்கூட மனிதாபிமானமற்ற முறையில் தலையணையைப் பயன்படுத்தி இரு குழந்தைகளையும் இரக்கமற்ற முறையில் கொலை செய்த....

- நீதிபதி வாக்கியங்களைப் படித்து முடிப்பதற்குள் நீதிமன்றத்தில் ஒரு குண்டூசி விழுந்தால் எழும் சப்தம்கூட கேட்குமளவு நிசப்தத்தை - ஒரு முறை பார்த்து விட்டு இறுதியை படித்தார்...கீழ்க் கண்டவாறு...

-தாயான நர்ஸ் மோனிகாவிற்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கிறேன். என்று கூறி முடித்தார்.

- அதுவரை நிசப்தத்தை 'தத்து' எடுத்திருந்த நீதிமன்றத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. எதுவுமே அறியாதவள் போல் அமர்ந்திருந்த மோனிகாவை அதிர்ச்சியுடன் பார்த்துச் சென்றனர்.

- எதையுமே மறுத்துப் பேசாமல் 'மோனிகா' தன் இரு கரங்களையும் காவலர்களிடம் நீட்டிக் கொண்டிருந்தாள்.

- வெய்னார்டின் கண்கள் ரத்தத்தை வடித்துக் கொண்டிருந்தன.

— வெய்னார்டு, மோனிகாவின் செயல்களைக் கண்டித்து அடித்துப்போட்ட போது தாயின் பரிதாப நிலைமையைக்

மேல் விழுந்து கதறியபோது, நிதானமாக எழுந்தமர்ந்த மோனிகா இரு பெண்களையும் எழுப்பி அவர்களின் கால்களைக் கட்டிப்போட்டு கட்டிலில் கிடத்திவிட்டு தலையணையை இருவர் முகத்திலும் வைத்து அழுத்திய படி அவர்களின் இறப்பை தீர்மானித்தாள். அதன்பிறகு சடலங்களை புதர்களில் எறிந்து விட்டு போலீஸ் நிலையத்தில் போலியாக புகார் கொடுத்தாள்.

— 'ஆக அவளுடைய 'போதைத்தனம்' தாய்மையையே மறக்கடிக்கிறளவுக்கு நஞ்சாகி விட்டிருக்கிறது.

— இப்படிப்பட்ட கொடுமையான செயலைச் செய்யுமளவுக்கு 'குடி' அவளை வளர்த்து விட்டது என்பதுதான் இந்த வழக்கின் பிரதானமான அம்சம்



www.tamilarangam.net






# டோஸ் நெ. 7

இழவு வீட்டிலே பலர் கூடி அழுகிறார்கள். அங்கே பந்தலிலே பாகற்காய் தொங்குகிறது. அதைப் பார்த்த ஒரு மாது மற்றொருத்தியிடம் அழுகையுடன் அழுகையாக

''பந்தலிலே பாவக்கா
பந்தலிலே பாவக்கா''

என்று சேதி கூறிவிட்டாள். அதைக் கேட்டுக் கருத்தைத் தெரிந்துகொண்ட அந்த நங்கை, அதை அழுகைப் பாட்டு மெட்டிலே,

''போகையிலே பார்த்துக்குவோம்
போகையிலே பார்த்துக்குவோம்''

என்று போகும்போது பறித்துக் கொள்ளலாம் என்று ''பிளான்'' கூறிவிட்டாள். வந்தது துக்கத்திலே கலந்து கொள்ள! அழுகைப் பாட்டு!! அதிலே ஒரு திருட்டுக்கூட்டு! அதுவும் பாட்டாலே நடக்கிறது, இவ்வளவும் இழவுவீட்டிலே! இந்த இருவர் மட்டுந்தான் இப்படியா? இல்லை! வந்தவர்கள் பாகற்காய் பறிக்கும் பிளான் போட்டதை அவர்கள் பாடியதனால் கேட்டுத் தெரிந்துகொண்ட வீட்டுக்கார அம்மாள், ''இதேது இழவிலே கலந்துகொள்ள வந்தது, பாகற்காயைப் பறித்துக்கொள்ள நினைக்கிறார்களே'' என்று பயந்து ஒரு எச்சரிக்கை விடுத்தாள், அழுகுரலிலேயே,

''அது விதைக்கல்லோ
விட்டிருக்கு

அது விதைக்கல்லோ
விட்டிருக்கு''

என்று வீட்டுக்குடையவள் கூறிவிட்டாள். ஆக மூவரும், அழுதவுடன் தத்தம் மனத்திலே தோன்றியதையும் கூறி விட்டனர். அந்த இழவு வீட்டுக்குச் சென்ற இரு அம்மைகள் எவ்வளவோ மேல் என்பேன். ஏன்? சோகத்தைக் காண, கம்பர் அயோத்தி மக்களுக்கு அயோத்தியை அடுத்துள்ள ஓர் சோலைக்குச் செல்கிறார். அங்கு அவர் மக்களின் துக்கத்தைக் கண்டு வர வேண்டியதுதானே முறை! அவரோ அங்கு போயும் அந்த நேரத்திலும் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் நெக்கு நெக்குருகும் அந்த மேலிட மறைவிட மேன்மையைத்தான் கண்டு கதறுகிறார்.

அழுகுரலுடன், பாகற்காயைப் பறிக்கத் திட்டமிட்ட திருமதிகள் போலவே, கம்பரும் சோகத்தோடு சோகமாகத் தமது காமக் கள்ளையும் கவிக் கலயத்தில் ஊற்றித் தருகிறார்.

சிலா கலயத்தில் வீழ்ந்துள்ள ஈ எறும்பினை எடுத்துவிட்டுப் பருகுகின்ற முறைபோல அன்பர் டி. கே. சிதம்பரநாத முதலியார், சில திருத்தங்கள் செய்து பருகுவது மேல் என்றார். சிலர், ''கண்ணை மூடிக்கொண்டு கலயத்தை உறிய வேண்டுமப்பா. அப்போதுதான் ரசம் பூரணமாக இருக்கும்'' என்கின்றனர். நமக்கோ அந்தக் கலயம் இருக்கும் திக்கிலே போனாலே, திக்குமுக்காடிப் போகிறது அதன் கெட்ட நாற்றம் பட்டதும்.

அழுத கண்களையும், சிந்திய மூக்கினையும், அவிழ்ந்த கூந்தலையும், சோர்ந்த முகங்களையும் காண வேண்டிய இடத்திலேயுங்கூட, கம்பர் சொர்ண கும்பமோ சோகம் போக்கும் செவ்விள நீரோ என்று மயக்கும் விதமான அமைப்புடன் விளங்கும் அந்த மேலிடத்தைக் கண்டு போற்றித் திரு அந்தாதி பாடுகிறார். புலமை இருக்கட்டும்; அதை எந்தெந்த சமயத்திற்கு எதெது இருத்தல் வேண்டும் என்ற கட்டு திட்டத்தையும் மீறிடத்தான் வேண்டுமோ என்றுதான் நான் கேட்கிறேன்.

கம்பர், சோகமுற்றிருந்த அயோத்தி மக்களைச் சோலை சென்று ''குளோசப்'' எடுத்துக் காட்டுகையிலே தெங்கின் குரும்பையோடு அரும்பனைய மேலிடத்தைக் காட்டிவிட்டு குழந்தைகள் தாயிடம் பாலுண்டு கொண்டு மார்பினை நெருடிக் கொண்டிருந்தனவாம், அதையும் காட்ட மறக்கவில்லை. அயோத்கியா காண்டம், தைலமாட்டுப் படலம் 13-ம் பாடல் கடைசி அடியைப் பாருமின்.

''மகவு முலைவருட இளமகளிர் கண் துயின்றோர்—என்ற பகுதி உளது. 15-ம் பாடலிலே பாருமின், ''வம்பளவு கொங்கை'' என்று கூறினார். 16-ல் பாருமின் துயின்று கொண்டிருந்த மாதரின் மேலிடத்தில் புழுதி படிந்திருந்ததாம்; அதையும் கூறாது விடுக்க மனமின்றி கம்பர்,

''குங்கும மலைக்குளிர் பனிக்
குழுமியென்னத்
துங்கமுலை யிற்றுகளுறச்
சிலர் துயின்றார்''

என்று கூறுகிறார். பொருளைப் பாருங்கள்.

சிலர்—சில மாதர்கள்; குங்குமம் மலை—குங்குமப்பூ நிறைந்துள்ள மலையிலே; குளிர்பனி குழுமியென்ன—குளிர்ந்த பனி படிந்ததுபோல்; துங்கம் முலையில்—பருத்துள்ள தனங்களிலே; துகள்உற—புழுதி படிந்திருக்க; துயின்றார்—தூங்கிக் கிடந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசு இழந்து ஆரண்யம் செல்கிறாரே, ஈரேழாண்டு எங்ஙனம் வதைவாரோ என்று துக்கித்துக் கதறி களைத்துக் கண் மூடிட, கம்பரோ, இச்சமயம் தவறினால் மறுசமயம் வாய்ப் பதரிது என்று எண்ணி, தூங்கும் தையலரின் மேலிடத்திலே புழுதி படிந்திருப்பதைக் கூர்ந்து நோக்கி, ஆழ்ந்து சிந்தித்து, அதற்கோர் உவமையணியும் அமைத்து மகிழ்கிறார். இது பொருத்தமா என்று கேட்கிறேன். மேலிடத்திலே புழுதி படிந்திருப்பதைக் கூருவிட்டால் சோகரசம் பூர்ணமாகாதா என்று கேட்கிறேன்.

அந்தத் தைலமாட்டுப் படலத்திலே பலமுறை பாவை யரின் மேலிட வர்ணனையிலே கம்பர் தமது புலமையைப் பூசி மகிழ்கிறார். பக்தியை இத்தகைய வர்ணனை ஊட்டுமா, இச்சா சக்தியைக் கிளறுமா என்று நான் கேட்டால், கம்ப தாசர்கள் கோபிக்கின்றனர் அன்பர்களே! அரி அவதாரமாம் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் அரிய காதையினைப் படிப்பவரும், பக்க நின்று கேட்பவரும், இகத்திலே இன்பமெய்தி பரத்திலே பரமனருள் பெறுவர் என்று பாகவத சிரோன்மணிகள் கூறுகின்றனர்.

புழுதி படிந்திருந்த மேலிட வர்ணனை இதற்கு அவசியமா என்று கேட்கிறேன். மார்பிலே மண் படிந்திருந்தது என்று சாதாரணமாகக் கூறிவிட்டு, கதைக்கு அவசியமான வேறு விஷயத்துக்குக் கவி உடனே சென்றிருக்கலாம். ஆனால் கம்பரின் நோக்கம், சமயம் கிடைத்தால் சரி, சமயம் கிடைக் காது என்றிருந்தால் எதனை வரவழைத்துக் கொண்டாவது தமது பிரத்யேகச் சரக்கான காமரசத்தைப் பொழியவேண்டும் என்பதுதான். எனவேதான் அவர், மாதரின் மார்பிலே புழுதி படிந்தது என்பதை மட்டும் கூறுது. அந்தச் சமயத் திலும் மேலிடத்தின் அளவு, அமைப்பு, மினுமினுப்பு ஆகிய வற்றையும் உடனிழைத்துக் கூறுகிறார். புழுதி படிந்திருந்த மேலிடம் சாமான்யமானதல்ல—துங்கமுலை பெரிய மேலிடம்! அளவு இதுவாக இருக்கவேண்டும் என்பது, அரிகதா கவியின் மனப்பான்மை துங்கமுலை என்று கூறிவிட்டால் போதுமா! எவ்வளவு பெரிய மேலிடம் என்ற சந்தேகம் ரசிகர்களுக்கு எழுமே! அதைப் போக்கவே, கம்பர், மலையினை அம்மாதரின் மேலிடத்துக்கு உவமை கூறுகிறார். அளவு இத்தன்மையாக இருக்கவேண்டும் என்பதை விளக்க, மலையை உவமை கூறி விட்டதோடு ஒய்ந்ததா? இல்லை. பெரிதாக இருந்தால் மட்டும் போதுமா? பளபளப்பாக இருக்கவேண்டும்; அதனை உணர்த்தவே, குங்குமப்பூ நிறைந்த மலை என்று கூறுகிறார்; ஆகவே, மேலிட அளவு, அமைப்பு, மினுமினுப்பு எனும் திருமந்திரம் மூன்றும் உறைத்தபிறகே, திரு அவதாரக் கதை கூறினவருக்கு திருப்தி உண்டாகிறது! எவ்வளவு காமுகராக இருப்பின் கதறிக்கிடந்த காரிகையின் மேலிடத்தின் அளவை யும் அமைப்பையும் மினுமினுப்பையும் கவனிக்கவும் கூறவும் மனப்பான்மை ஏற்பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். இராமன் காடேகுவது கேட்டு, மண்டலத்து மக்கள் மனம் உடைந்தனர் என்ற கருத்தை விளக்கப் போந்த கவி குங்கும மலைக்கு நிகர் துங்கமுலைப்பற்றி ஆர்வத்தோடு பாடியுள்ள பாடலை ரசிகர் படித்து, பக்திப் பிரவாகத்தைப் பெறுவார்களா? "குங்கும நிறம்; மலையின் அமைப்பு போன்றது. அத்தகைய மேலிடமன்றோ மேலிடம்!" என்று எண்ணி ஏங்குவார்களா என்பது எனக்குள்ள பல பல சந்தே கங்களில் ஒன்று.

சரி, பரதா! என்னமோ அவருக்கு அந்த மேலிட வருணனை செய்வதென்றால் கொஞ்சம் குஷி. அதற்காக அவரைப் பிடித்துக் குடைகிறாயே; விடு" என்று கூற நினைப் பீர்கள். தோழர்களே! மேலிடத்தோடு அவர் விட்டுவிட்டால் நானும் "சரி தொலையட்டும் சனியன்" என்று இருந்து விடுவேன். அவர் மேலிடத்தைக் கூறினதோடு போதுமென்று இராமல் மறைவிடத்தையும் தமது நாவன்மைக்கு இரையாக்கு கிறாரே, அது சரியா என்று கேட்கிறேன்? எங்கே என்பீர்கள்? பாருங்கள் மீண்டும் அயோத்தியாபுரிக்கு! அயோத்தியா காண்டம், நகர் நீங்கு படலத்தைப் படித்துவிட்டுக் கூறுமின், என் உரை பொய்யா, மெய்யா என்பதை.

மலையிலே நதிகள் உற்பத்தியாகும். வழியே வருகையில் வண்டல் அடித்துத் தள்ளிக்கொண்டு செல்லும். கடைசியில் ஆறு ஆழியில் சென்று சேரும். இயற்கையின் இந்த அமைப்பை எத்தனையோ கவிதா விற்பன்னர்கள் கூறிடக் கேட்டிருப்பீர்கள்; மிகச் சாதாரணக் காட்சியையும் தீட்டிடும் நேர்த்தித் திறத்தால், காண்போர் களித்து வியந்திடச் செய்யும் ஓவியக்காரனையும் மிகச் சாமான்யமான பாடலையும், குரலின் இனிமையாலும், உச்சரிப்பின் உயர்வாலும், கேட் போர் செவியும், சிந்தையும் குளிரப் பாடிடும் இசைவாணனை யும் புகழ்வதுபோல், மிகமிகச் சாதாரணமான இயற்கை அமைப்பையோ, செயலையோ, தனது கவித்திறனால் அழகுற எடுத்துக்காட்டி படிப்போரைப் பரவசமாக்கிடும் பாவாணரைப் போற்றாத புல்லனல்ல நான்.

என் மனம் உண்மையான கவிதையினால் உருகாதபடி, பிரத்யேகமாக அமைக்கப்பட்டதுமல்ல. எனவே, இயற் கையை எழிலுடன் வர்ணிக்கும் கவிகளை நான் போற்றத் தவறமாட்டேன். கம்பர், தமது திறமையை இத்துறையிலே காட்டிடும் இடங்கள் எனக்கு இன்பமூட்டாமல் இருக்குமா? ஆனால் அந்த இயற்கையை கூட, ஏன் அப்புலவர் காமச் சுவைக்கு கள்ளியாக்குகிறார் என்பதை எண்ணும் போதுதான் என் மனம் பதைக்கிறது. மலையினின்று உற்பத்தியாகும் அருவி போல! கல்வியினின்றும் குணம் பிறக்கும் என்று கூறட்டுமே; சூதிலிருந்து சதி பிறக்கும் என்று சொல்லட்டும் அவர் வாழ்த்தி வணங்கும் ஐயனெனும் குன்றினின்று அருளெனும் அருவி கிளம்பி கைகேயி எனும் வண்டலை அடித்துத் தள்ளிவிட்டுச் சென்றது என்று கூறட்டும், ஆயிரமாயிரம் உவமைகள் கூறட்டும், எனக்கு அவைகளைப் படிக்க அட்டியில்லை; அவர் புலமையைப் பாராட்டத் தடையில்லை. ஆனால் அவர் ஆறு மலையினின்றும் கிளம்பி, கடலில் சேரும் விஷயத்தை எதற்கு உவமையாக்கினார் என்பதைக் கலாரசிகர்கள் சற்றே சிந்திக்க வேண்டுகிறேன். எவ்வளவு ஆபாசமான முறையினை அவர் கையாண்டுள்ளார் என்பது அப்போது விளங்கும்.

மிகைப்படக் கூறலும், உவமைக்குப் பல பொருளை எடுத்துக் கொள்வதும், கவிகளின் உரிமை என்பதும், அந்த உரிமையை அவர்கள் உபயோகிப்பது உலகினருக்கு உவகை தரவே எனபதும் நான் அறியாததல்ல கம்பர், மிகைப்படக் கூறுவதை விளக்கும் பாடல் ஆயிரம் உண்டு. நான் அவற் றினை குறை கூறவில்லை. அயோத்தி மக்கள் இராமர் காடு செல்ல வேண்டுமாமே என்று கூறினர் பூவையரும் பூனையும் அழுதன, என்று கூறினர். "பூனை ஏன் அழுதது புலவரே?" என்று நான் கேட்கவில்லை. சோகத்தைத் தீட்ட கவி மிகைப் படக் கூறினார்; அது அவர் உரிமை என்று எண்ணினேன். மற்றோர் இடத்திலே, அயோத்தி மக்களின் கண்ணீர் ஆறெனப் பெருகி, வீதியெல்லாம் வழிந்தோட, தேரோடும் வீதியின் புழுதி வண்டலாக அந்நதிகளிலே படிந்தது என்று பாடுகிறார். கண்ணீராவது ஆறாகி ஓடுவதாவது; என்று நான் கடிந்துரைத்தேனில்லை. மிகைபடக் கூறல் இது சரி என்று விடுத்தேன் ஆனால் இனி நான் கூறப்போகும் இந்த எடுத்துக்காட்டை மானத்திலும் நாகரீகத்திலும், தூய்மை யிலும், ஒழுக்கத்திலும், உண்மைக் கலையிலும், கடவுட் கொள்கையிலும் பற்றுக்கொண்ட யார்தான் பொறுத்திருக்க முடியும் என்று யோசித்துப் பாருங்கள்!

மாதர் அழுதனர்; கண்களினின்றும் நீர் அருவியெனக் கிளம்பிற்று. இதனை வர்ணிக்கிறார் கவி மலையினின்றும் கிளம்பும் மாநதிகள் அலைகடலில் போய்ச் சேரும் இயற்கை முறையை இணைத்து, கலை வண்ணம் நமது வாய்வண்ணம் முழுத்திறமையுடன் துவங்கும் விதத்திலே! கம்பரெனும் கவிக் குன்றிலிருந்து கிளம்புகிறதய்யா, காமரசமெனும் ஆபாச அருவி! காண்மின் அதனை, ஏடு தூக்குமின்! அயோத் தியா காண்டம், நகர் நீங்கு படலம், 184ம் பாடலைப் பார்மின்! பக்கத்திலே எவரேனும் கம்பதாசர் இருப்பின், கேட்டுப் பார்மின், இதுதானா கம்பரசம் என்று!

"சிந்துரைக் குங்குமச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிடைமிடை வண்ட
விட்டாரம் ஈர்த்தன
மிடைமுலைக்கு வடொர் இ
மேகலைத் தடங்
கடலிடைப் புகுந்தகட்
கலுழியா றரோ''

கவி, விவரிக்க எடுத்துக்கொண்ட விஷயம், காரிகையரின் கண்ணீர் பெருகியது பற்றி என்பது கவனமிருக்கட்டும், தோழர்களே! இனிப் பதவுரை செய்யுங்கள்.

கட்கலுழியாறரோ என்னும் கவித் தொடரைப் பிரியுங்கள். கண் கலுழி ஆறு அரோ—என்று பதம் பிரியுங்கள். இதிலே அரோ என்பது அசை! அசைமட்டுமல்ல என்பேன், என்ன சொல்வது என்று தெரியாமல் தன்னை மறந்த கம்பர், வியந்து கூறிய சத்தம். அந்த ''அரோ!'' என்ன அவ்வளவு வியப்பிற்குறிய விஷயம் என்று கேட்பீர்கள். பொருளைப் பாருங்கள். புலவர் பரவசமாகி, ''அரோ'' என்று ஆனந்தக் கூச்சலிட்ட காரணம் விளங்கும்

கண் கலுழி ஆறு—கண்களினின்றும் புறப்பட்ட கலங்கல் நீராகிய நதிகள்;

திடர் உடை குங்குமம் சேறுஉம்—மிகுதியான குங்குமக் குழம்பும்;

சாந்தம் உம்—சிவந்த சாந்தினையும்;

இடைஇடை—நடு நடுவே;

வண்டல் இட்டு—சேருகப் பொருத்தப் பெற்று;

ஆரம் ஈர்ந்தன—மாதருடைய முத்து மாலையை இழுத்தன.

முதலிரண்டு அடி முடிந்தது. மற்ற இரண்டடிக்கு போகு முன், கருத்தைக் கவனியுங்கள். அருவிபோலக் கிளம்பு கிறது நீர். கண்ணினின்றும், அந்தக் கட்கலுழி ஆறு மாதரின் மேலே பூசப்பட்டுள்ள குங்குமம், சாந்து ஆகிய வாசனைப் பூச்சுக்களை அடித்துக்கொண்டு; அந்த வண்டலோடு அவர்கள் அணிந்துள்ள முத்துமாலைகள் அறுத்துக்கொண்டு செல்கின் றன!'' ஆஹா! எவ்வளவு புலமை! என்ன இனிமை! செவிச் சுவையில்லாதோனே! இந்தக் காவியத்தைக் கொளுத்த வேண்டும் என்று கூறுகிருயே, கட்கலுழி ஆறு குங்குமம் சாந்தாகிய வண்டலை அடித்துக்கொண்டு, முத்து மாலைகளை இழுத்துச் செல்கிறது என்று செந்தமிழில் கம்பர் செப்பின திறததைப் பார், பார், பார்!'' 'ரசனைப்' பிரியர்கள் கூறுவர். ''ஸ்வாமிகளே! கொஞ்சம் பொறும்; ஆற்று வேகத்திலே போகவேண்டாம், மற்ற இரண்டு அடிகளையும் கொஞ்சம் பாரும்'' என்று அவர்களுக்கு கூறிவிட்டு, மூன்று நான்காவது அடிகளுக்குப் பொருள் கூறுகிறேன்.

கட்கலுழி ஆறு குங்கும வண்டலோடு, எங்கே சென்றது? மூன்ருவது அடியைப் பதம் பிரியுங்கள், மிடை முலை குவிடு ஓரி இ நெருங்கிய தனங்களாகிய மலைச் சிகரங்களின்று நீங்கி. புலனுகிறதா கம்பரசம்? வந்துவிட்டார் பாருங்கள். அவருடைய பிரத்யேக திறமைக்கு! கண்ணீராகிய ஆறு, மலையாகிய முலைகளிலே ஏறி இறங்கிற்ரும்! மலை போன்றது மட்டுமல்ல மேலிடம்; நெருங்கிய மேலிடம்; அந்த இரு மலைகளுக்கிடையே கணவாய் அதிகப் பெரிதல்ல! சரி! இந்த ஆபாசத்தோடு விட்டாரா? என்ன கேள்வியப்பா கேட்பது? ஆறு நடுவிலே நின்ருவிடும்? கண்ணிலிருந்து புறப்பட்டது கலவை வண்டலாக அடித்துக்கொண்டு சென்றிட மேலிடமாகிய மலைகளைக் கடந்து கடலிலே கலக்க வேண்டாமோ? இதோ, கவி கலக்க வைக்கிருர்: படியுங்கள்; மேகலை தடங்கடலிடைப் புகுந்த—மேகலாபரணம் தரிக்கப் பட்டிருந்த அல்குல் எனும் கடலில் புகுந்தது!

பாடுங்கள் ரசிகர்களே, பாடுங்கள்; ரகுபதிராகவ ராஜா ராம், பாடுங்கள். பக்திப் பிரவாகம் பரிபூர்ணமாக இந்த நேரம் உண்டாகிவிடுமே அந்தக் கட்கலுழி ஆறு முலைக் குவட்டைத் தாண்டி, தடங்கலிடைப் புகுந்து என்ற புண்ய கதையைக் கேட்டபின்! தோழர்களே! சுருக்கவுரை

என்ன தெரியுமா இச் செய்யுளுக்கு? கண்ணினின்று வழிந்த நீர், மேலிடத்திலே புரண்டு, மாதரின் மறைவிடத்திலே புகுந்தது. இதுதானு கலை என்று கேட்கிறேன்!

மேகலைத் தடங்கடலையும் மிடைமுலைக் குவட்டையும் பாடவா, கம்பருக்கு சடையப்ப வள்ளல் சகல சம்பத்தும் தந்தார் என்று கேட்கிறேன்? எந்தப் புலவனுவது கடவுட் கதையிலே, கட்கலுழி ஆறு, மேகலைத் தடங்கலிடைப் புகுந்ததைப் பாடினுரு? இந்தப் பூனூரம் பூண்ட புதுமைகளைக் கண்டதுண்டா? புலமையின் வேலை இதுதானு? மாதரின் கண்ணீர், மறைவிடத்திலே புகுந்தது என்று கவி பாடியிரா விட்டால், பக்தி ரசம் மனதிலே புகாதா என்று கேட்கிறேன். பரிதாபம் அந்த அயோத்தி நாட்டுப் பாவையர், தமது கண்ணிரை ஒரு கவி இங்ஙனம் சித்தரித்து எழுதியிருப்பார் என்று தெரிந்திருந்தால், ஆயிரம் இராமர்கள் ஆரண்யம் போனுலும், அழுதிருக்கமாட்டார்களே!

தோழர்களே! என் குலை நடுங்குகிறது, இந்நாட்டுக்கு இதுதான் கலை என்று கூற; வாமமேகலை இற வளர்வதும், ஒளி புறத்தளிப்பதும், தடங்கலிடைக் கட்கலுழி புகுவதும் தேவ கதையின் முக்கியாம்சமா? கலையின் உச்சமா? புலமைக்கு இதுதான் அத்தாட்சியா? புண்ணியத்திற்கு இதுதான் ஏடா? புகலட்டும் புலவரும், பக்தரும். கதை எந்த இனத்தைப் பற்றியதாக இருந்தால் என்ன? கலையைக் கவனி என்று கூறும் அன்பர்களிடம் கேளுங்கள். இத்தகைய கம்ப ''ரசம்'' கடவுட் கொள்கையையோ, கலை உணர்வையோ தருமா. அன்றி, ''தொந்தி சரிய மயிரே வெளிர நிறைந்த மசைய உடலே'' படைத்த தொண்டு கிழமானுலும், அவருக்கு மங்கையர் மலரடி தடவியும், கருத்தறிந்தபின் பலபல புரியவும் மன மயக்கத்தை ஊட்டுமா என்று.

ஒரு மனிதன் அவனையே மூழ்கடிக்கும் அளவுக்கு உலகின் போதுமான செல்வங்களைப் பெறலாம். ஆனுல் ஒருக்காலும் அவன் இதயம் நிறைவு பெறும் அளவுக்குப் போதுமானவற்றைப் பெற முடியாது.

—ப்ரூக்ஸ்

நாம் கைகளை உபயோகிப்பதனுல் பலமடைகிருேம். மூளையை உபயோகிப்பதனுல் அறிவடைகிருேம். இதயத்தை உபயோகிப்பதனுல்கருணையுள்ளவர்களாகிருேம்.

—ரஷ்யப் பழமொழி

ஒரு பெண்ணின் இதயம் கருணையின் கோவிலாக மாறும்போது அதற்கு இணையான வாஞ்சை இந்த உலகத்தில் எங்குமே இல்லை.

—மார்ட்டின் லூதர்

நம்முடைய இதயங்கள் கோணலாக இருந்தால் தலைகள் நேராக இருந்தாலும் பலன் இல்லாமல்போய் விடும்.

—யங்

இறைவனை அடைவதற்கான வழிகள் புதிராக இருப்பது போல இதயத்திற்கான வழிகளும் இருக்கின்றன.

—வார்

இதயம் ஒருமுறை பெற்று சொந்தமாக்கிக் கொண்ட எதையும் பிறகு ஒருபோதும் இழப்பதில்லை.

—ஹெச். டபிள்யூ. பீச்சர்

அறிவு என்பது மனிதனின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆனுல் இதயம் மனிதனின் ஒவ்வொரு பகுதியாகவும் இருக்கிறது.

அனைவர்க்கும் தேவையான இலங்கை, இந்திய
அத்தனை உணவுப் பொருட்களும்
ஒரே இடத்தில் மலிவு விலையில் கிடைக்கிறது

# ROSALIE

பாரீஸில் பலசரக்குப் பொருட்களின் களஞ்சியம்

நம்பிக்கை,
நாணயம், கைராசி

சகல விதமான இந்திய வியட்நாமிய மளிகை சாமான்களும், காய்கறி வகைகளும், சுவை மிக்க மீன் இறால் வகைகள் மற்றும் ஆசிய கலை அன்பளிப்பு பொருட்களும் குறைந்த விலையில் கிடைக்குமிடம்

# ROSALIE

15, RUE LAGRANGE, PARIS.5e

(M) METRO: MAUBERT MUTUALITE

என்னுடைய இதயம் எங்கும் இருக்கிறது. என்னுடைய இதயம் இப்பொழுது ஒரு மேட்டுப்பகுதியில் மானைத் துரத்திச் சென்று கொண்டிருக்கிறது.

—ராபர்ட் பர்ன்ஸ்

"உன்னுடைய கிரீடத்தையும், செல்வங்களையும் கொடு. ஆனால் உன் இதயத்தைக் கொடுத்துவிடாதே" என்று ஒரு அறிஞன் சொல்வதைக் கேட்டேன்.

—ஏ. இ. ஹவுஸ்மேன்

இதயம் என்பது ஒரு சிறந்த தர்க்கவாதி.

—வெண்டல் ஃபிலிப்ஸ்

அறிவுக்கே தெரியாத பல காரணங்கள் இதயத்தில் இருக்கின்றன.

—பாஸ்கல்

இதயம் விரிந்து வயிறு சுருங்குவது ஆத்மீக வளர்ச்சிக்கு அடிப்படை. ஆனால் இன்றைய உலகில் வயிறு விரிந்து இதயம் சுருங்கி இருக்கின்ற நிலையினைக் காண்கிறோம். இதன் விளைவாக அன்பு, கருணை போன்ற நற்குணங்கள் நலிந்து நிற்கின்றன.

—கா. அ. கஃபூர்

## இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!

தேர்ச்சிபெற்ற சமையற்காரர்களைக்கொண்டு பசிக்காகவும், ருசிக்காகவும், சாப்பிடும் விதத்தில் நாவிற்கினிய கோழி, இறைச்சி பிரியாணிகள் மணமும் சுவையும் உள்ளது. குணமிக்க கறி வகைகள் புரு, வாத்து, மீன் புராட்டா இன்னும் பல வகையான சிந்தை மகிழும் சிறந்த உணவுகளுக்குச் சிறந்த இடம்

ஆர்டர் கொடுத்தால் உள்ளம் மகிழும் வகையில் அருமையாக அற்புதமாக சப்ளை செய்ய என்றென்றும் காத்திருப்பது.

# RESTAURANT INDIEN

(M) MÉNILMONTANT. 18, RUE DE MENILMONTANT.
PARIS. 75020.

www.tamilarangam.net



குறிப்பு — இக் கவிதையில் வரும் நாயகன் தமிழ் ஈழத்தில் நடைபெறும் அரசியல் அசம்பாவிதங்களால் தாங்கொணா இம்சைகளிலிருந்து தப்பி அரசியல் அகதியாக, பிரான்சில் தஞ்சம் அடைகிறான். இராணுவத்தின் இரும்புப் பிடியில் இருந்து தப்பினாலும் தமிழ் ஈழத்தில் உள்ள அவனது காதல் மனைவியின் நினைவு மனதை வாட்டுகிறது. அவ் வேளை அவன் மனைவி தனது முதல் மகனை பிரசவித்து விட்டதாகக் கடிதமூலம் அறிகிறான். தன் மனைவியும் குழந்தையும் பிரான்சிற்கு வந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்கிறான். அவனின் மனதின் வெளிப்பாடே இக் கவிதையாகும் : —

## பிரிவாற்றாமை

அன்றில் நீயல்லோ
அதன் ஜோடி நானல்லோ!
தென்றல் நீயல்லோ
தேனூறும் மலரல்லோ!
கன்றீந்த பசு வென்னில்
காளை யெனைத் தேடாயோ!
காளையினும் நானென்றால்
காரம் பசு நீயல்லோ!
கான மயில் நானிங்கே
கடுங்குளிரில் வாடுகிறேன்
வேடு மயிலே நீவந்து
போர்வை யெனக்காகாயோ
பாடுபடும் மனதுடனே
பாட்டெழுதி அனுப்புகிறேன்
தேடும் பொருளே நீதானே
தேன் நிலவுக்கு வாராயோ.

அன்றில் — ஜோடியாய்ப் பிரிந்து வாழாத காதல் பறவை
காரம்பசு — கெட்டதைக் கொல்லும் தெய்வீகப் பசு.

நவாலியூர் இராஜகாந்தன்

www.tamilarangam.net



விசிட்: 2-25
18-5-88

உங்கள் விசிட்டர்

# ஜெயலலிதாவின் விரக்தி

ஜெயலலிதாவின் நாக்குத் தடிப்பு பற்றி தமிழக மக்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் போது தடித்த நாக்கால் தமிழ்நாட்டு நிருபர்களையும் சாடியிருக்கிறார் ஜெயலலிதா!

—இல்லஸ்டிரேட்டட் வீக்லி மே முதல் தேதி இதழில் ஜெயலலிதாவின் அரசியல் பேட்டி ஒன்று வெளிவந்திருக்கிறது.

—பேட்டியின் ஒரு இடத்தில் ஜெயலலிதாவை பேட்டி கண்ட பிரித்தீஷ் நந்தி "பத்திரிகைகள் இப்போதே உங்களது அரசியலை இறந்தகால அரசியலாக கருதுகின்றனவே!"— என்று கேட்க ஜெயலலிதா அளித்துள்ள பதில் என்ன தெரியுமா?...

—"நிருபர்களை விலைக்கு வாங்க முடியும்! அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஜானகியிடம் உள்ளதைப் போல் என்னிடம் பணம் இல்லை, பத்திரிகைகள் என்னை ஒதுக்கினால் பத்திரிகைகளை நான் அறவே ஒதுக்குவேன்!"

—இந்தப் பதிலைப் பெற்றவுடன் பிரித்தீஷ் நந்தி அடுத்த கேள்வியை கேட்கிறார்.

—"நீங்கள் குற்றஞ்சாட்டுவது தமிழ்நாட்டு பத்திரிகையாளர்களையா? அல்லது தேசியப் பத்திரிகைகளையும் சேர்த்தா...?"

—ஜெயலலிதா, இந்த கேள்விக்கு கூறிய பதில் என்ன தெரியுமா?...

—"நான் பிரித்துப் பார்த்து பதில் சொல்லவில்லை! தமிழக பத்திரிகைகளைப் பொறுத்தவரை அவற்றிற்கு என்னுடன் அறவே தொடர்பு கிடையாது!... காலையில் வெளியாகும் பத்திரிகைகளில் ஒரு பத்திரிகைகூட ஒழுங்காகச் செய்தி வெளியிடுவதில்லை..!"

—அடுத்த கேள்வி: "ஒழுங்காகவா, அல்லது நியாயமாகவா....?"

—ஜெயலலிதா "செய்தி வெளியிடுவதில் ஒழுங்கும் வேண்டும்..! நியாயமும் வேண்டும்!.... என்னைப் பற்றி வெளிவரும் செய்திகளில் இவை இல்லை!"

—ஜெயலலிதா எல்லா நிருபர்களையும் விலைக்கு வாங்க முடியும் என்று நினைப்பதும், பேசுவதும் அவரது அரசியல் அரைவேக்காட்டு நிலையையே காட்டுகிறது! ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான பத்திரிகைத் தூணை கேவலமாக மதிப்பீடு செய்வது ஜனநாயகத்தின் வழிமுறைக்கு ஒவ்வாது!

—டிசம்பர்-ஜனவரி மாதங்களில் தமிழகப் பத்திரிகைகள் ஒட்டுமொத்தமாக ஜெயலலிதாவை ஆதரித்தே செய்தி வெளியிட்டது, அன்று அவர் நம்பிக்கைக்குரியவராக தமிழக மக்கள் முன்னிலையில் காட்சி அளித்தார்!.. என்பதற்காகத்தான்.

—இன்று, நிலை அப்படி அல்ல!... என்பது ஜெயலலிதாவிற்கே தெரியும். தமிழக அரசியல் கட்சிகளில் முக்கிய இடத்தைப் பெற வேண்டிய ஒரு கட்சியை ஜெயலலிதா பெற்றிருந்தும் அரசியல் அறிவின்மையால் 'எடுத்தேன்- கவிழ்த்தேன்' என்று நடத்தி கட்சியைக் கெடுத்துக் கொண்டிருப்பதைத் தான் நிருபர்கள் விமர்சனச் செய்தியாக வெளியிடுகிறார்கள்.

—அரசியலில் எல்லாமே ஒரு அரசியல்வாதி எதிர்பார்ப்பது மாதிரி மட்டும் நடந்துவிடாது. ஏற்றத் தாழ்வுகளும், ஏமாற்றங்களும் சகஜம். இன்று ஜெயலலிதா ஆதரவு இல்லை என்பதற்காக ஆத்திரப்படுகிறார்.

—ஜெயலலிதாவின் அந்த ஆத்திரம் பத்திரிகை நிருபர்கள் மீது பாயத் தூண்டுகிறது. இது அவரது அரசியல் விரக்தியையே காண்பிக்கிறது!

* காங்கிரசை விமர்சிக்கும் கருணாநிதி, நிதானத்தை இழந்து விட்டதாக திண்டிவனம் ராமமூர்த்தி கூறியுள்ளது பற்றி...!

—கௌரி
மருவூர்

கருணாநிதி நிதானத்தை இழக்க வேண்டும் என்பதுதான் காங்கிரசின் நோக்கம். கருணாநிதி நிதானம் இழக்காததை பார்த்து திண்டிவனம் தான் நிதானம் இழந்து அறிக்கை வெளியிட்டுள்ளார்!

* 'கருணாநிதி தமிழ் மணத்தையும் - தமிழ்மனத்தையும் பெற்றவர்!' என்று கே.ஏ.கே. கருத்து தெரிவித்து உள்ளாரே?....

—பிரபு
குடியாத்தம்

பிறந்த இடத்து பாசம்! துவங்கிய இடத்திற்கே போக நினைக்கிறார் போலிருக்கிறது கே.ஏ.கே.

* காமராஜ் ஆட்சியை அமைப்போம் என்று கூறுகின்ற மூப்பனார் ராஜீவ் காந்தி ஆட்சியை அமைப்போம் என்று கூறுவதற்கு தைரியம் உண்டா?... என்கிறாரே கருணாநிதி!

—ஜி.எஸ். மகேஷ்
திருவையாறு

கருணாநிதி கூட தி.மு.க. ஆட்சியை அண்ணா ஆட்சி என்று தானே

www.tamilarangam.net



தினமணி

சென்னை - புதன்கிழமை - ஏப்ரல் 6, 1988

# அறத்தின் பெயரால் மறம்

"தீண்டாமை வாழ்க! ஹரிஜனங்கள் கோயிலுக்குள் நுழைவதை ஹிந்து சாஸ்திரங்கள் அனுமதிக்கவில்லை.

"விதவை மறுமணம் ஒழிக! விதவாவிவாகம் சாஸ்திர சம்மதமானது அன்று.

"பொம்மைக்கல்யாணம் வாழ்க! பெண்கள் ருதுவான பிறகு விவாகம் செய்வது சாஸ்திர விரோதமானது.

"உடன்கட்டை ஏ(ற்)றுதல் வாழ்க! ஒரு ஸ்திரீ சககமனம் செய்தால் அவள் முக்தியடைவதுடன், அவளுடைய பிறந்த வீட்டினரும், புகுந்த வீட்டினரும் 'மூன்றரை ஆயிரம் கோடி வருஷங்கள்' க்ஷேமமாக இருப்பார்கள்."

இவ்வாறெல்லாம் நாம் சொல்லவில்லை. பூரி ஸ்ரீசங்கரமடத்துப் பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ நிரஞ்சன தேவ தீர்த்த சுவாமிகள் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளிவருகின்றார்கள்.

மேற்கூறிய விஷயங்கள் சாஸ்திர சம்மதமானவையா, விரோதமானவையா என்று தீர்மானிக்க எமக்கு அருகதை கிடையாது. ஆனால் வேதங்களை நன்கு கற்றுணர்ந்தவரும் ஆரிய சமாஜத்தின் மூத்த தலைவருமான சுவாமி அக்கினிவேஷ், பூரி மடாதிபதியின் கருத்துகளை (-முக்கியமாக, 'சதி' விஷயத்தில்-) மறுத்து அவரை வாதுக்கு அழைத்தார். வாதத்தில் தோற்றால் ஆசாரிய பீடத்திலிருந்து விலகிக்கொள்வதாக ஸ்ரீ நிரஞ்சன தேவ தீர்த்தர் கூறினார். இந்தச் சவாலை ஏற்று சுவாமி அக்கினிவேஷ் உத்தரப்பிரதேசத்தில் பாக்பத் என்ற ஊருக்கு அருகில் முகாமிட்டிருக்கும் பூரி சுவாமிகளைச் சந்திக்கச் சென்றார்.

ஆனால் நடந்தது வேறு; சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிடும் என்று சாக்குக்காட்டி அவ்வூர் சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் 144-ம் பிரிவுத் தடையுத்தரவைப் பிறப்பித்து, சுவாமி அக்கினிவேஷரையும், அவரது ஆதரவாளர்களையும் கைது செய்து வாதத்தை நடக்கவிடாமல் தடுத்துவிட்டார்.

அதாவது, உடன்கட்டையை ஆதரித்து ஓர் இயக்கமே நடத்தப்போவதாகக் கூறும் பூரி சங்கராசாரியரைச் சட்டம் ஒன்றுமே செய்யவில்லை. மாறாக, உடன்கட்டை ஏறுவதை எதிர்த்துப் பிரசாரம் செய்துவரும் ஆரிய சமாஜத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார். உத்தரப்பிரதேச அரசின் இந்த அக்கிரமமான செயலுக்கு, உடன்கட்டை ஆதரவுப் பிரசாரத்தைத் தடை செய்து சட்டமியற்றிய மத்திய அரசும் உடந்தையென்பது வெளிப்படை.

ஆனால் பாக்பத் கிராமத்தில் தடைசெய்து நிறுத்தப்பட்ட விவாதம் நாடெங்கிலும் தொடரவேண்டும், இப் பிரச்சினைகளுக்கு முடிவு காணும்வரை.

ஹிந்து சமுதாயத்தின்முன் இன்று இரு வழிகள் உள்ளன. சுவாமி அக்கினிவேஷ் காட்டும் சீர்திருத்த, முன்னேற்றப் பாதையில் ஹிந்துக்கள் போகலாம். இந்த வழி என்றெனவே ராஜா ராம்மோகன் ராய், ஈசுவர சந்திர வித்தியாசாகர், சுவாமி விவேகானந்தர், தயானந்த சரசுவதி, மகாத்மா காந்தி போன்ற சான்றோர் காட்டிய வழி. அல்லது, அறத்தின் பெயரால் மறத்தை வளர்த்து, ஹிந்து தருமத்திற்கு இழிவையும் அழிவையும் தேடித்தரும் பூரி சுவாமிகளின் சொற்களுக்குச் செவிசாய்க்கலாம். இந்தத் தலைமுறையில் வாழும் ஹிந்துக்கள் தேர்ந்தெடுக்கும் வழியே ஹிந்து மதத்தின், சமுதாயத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்.

ஹிந்து மதத்திற்கும், சமூகத்திற்கும் தொண்டு செய்துவரும் நிறுவனங்களும் ஏனைய சங்கர மடங்களும் இந்த விவாதத்தில் தமது நிலை என்ன என்று மக்களுக்குத் திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும். ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக் சங்கம், விசுவ ஹிந்து பரிஷத், ஹிந்து முன்னணி, துறவிகளின் பேரவைகள் போன்ற அமைப்புகள் பூரி சுவாமிகளின் தீய, பிற்போக்கு வாதங்களுக்கு எதிராகக் குரலெழுப்பவேண்டும். இத் தலையங்கத்தின் தொடக்கத்தில் கூறியுள்ள விஷயங்களில் அவர் தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளாவிடில், பூரி மடத்தின் பீடத்திலிருந்து அவர் உடனடியாக விலகிக் கொள்ளவேண்டும் என்று ஹிந்து ஸ்தாபனங்கள் அமைதியான கிளர்ச்சியை நடத்தவேண்டும்.

ஆதி சங்கரரின் பதிமூன்றாவது நூற்றாண்டு விழாக் காணும் இந்த ஆண்டில், அந்த மகானின் பரம்பரைக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயல்களை எதிர்ப்பதே அவருக்கு நாம் செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலியாகும்.

# சிறுமியுடன் உடல் உறவு வைத்திருந்த ஆசாமிக்கு அபராதம்

சிங்கப்பூர். மே 19—

குறைந்த வயது பெண்ணுடன் உடலுறவு கொண்டதற்காக 26 வயதான ஆசாமி ஒருவருக்கு ஒரு நாள் சிறையும் 2000 வெள்ளி அபராதமும் விதிக்கப்பட்டது.

டான் டோக் செங் மருத்துவமனை அடுக்கு வீட்டில் 1984 மார்ச்சில் இந்த குற்றத்தை புரிந்ததை கோவிந்தனின் மகன் கருணாகரன் ஒப்புக்கொண்டார்.

அந்த 10 வயது சிறுமியுடன் உடலுறவு கொண்ட பிறகு கருணாகரன் என். கோபாலின் மகன் சைமனிடம் 15 வெள்ளி கொடுத்தார். முன்னதாக சைமனை விட்லி ரோடு அங்காடி நிலையத்தில் கருணாகரன் சந்தித்தார் என்றும் கூறப்பட்டது.

கொஞ்சம் பணம் கொடுத்தால் பெண்ணுடன் உடல் உறவு செய்வதற்கு ஏற்பாடு செய்துதருவதாக கருணாகரனிடம் சைமன் தெரிவித்தார்.

டேவிட் மானுவலின் மகன் பிராண்டனும் சைமனும் ஒன்றாகச் சேர்ந்து 1984 பிப்ரவரியில் அந்த சிறுமியைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் சிறைத் தண்டனை அனுபவித்துவருகிறார்கள்.

சைமனுக்கு 18 ஆண்டு சிறைத்தண்டனையும் 18 பிரம்படிகளும் அளிக்கப்பட்டிருக்கிறது பிராண்டனுக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனையும் 15 பிரம்படிகளும் அளிக்கப்பட்டிருக்கிறது.

டான் டோக் செங் மருத்துவமனை குடியிருப்பு அடுக்கு வீட்டுக்கு வரக்கூடிய எந்த ஆசாமியுடனும் உடல் உறவு வைத்துக்கொள்ளுமாறு அந்த சிறுமியை சைமன் கட்டாயப்படுத்தினார் என்றும் கூறப்பட்டது

தான் உடலுறவு கொண்டபோது அந்தப் பெண்ணுக்கு 16 வயதுக்கும் குறைவாக இருக்குமென்பதை கருணாகரன் அறிந்திருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**CABRI** MÔT CỮA HÀNG RẤT TÍN NHIÊM TỪ LÂU VỀ THỊT BÒ, GÀ, DÊ VÀ DỒ LÒNG V.V. <u>HALAL</u> VỚI GÍA RẤT RE QÚY VỊ CO THỂ TIN CẬY DƯỢC.

NẾU QÚY VỊ MÚÔN MUA SĨ, BAN NÊN DẶT TRƯƠC VÀO NGAY THỨ BA.

SAU DÂY LÀ DIA.CHỈ:

# SOCIETE CABRI

உங்களுக்குத் தேவையான ஹலாலான ஆடு, மாடு, கோழி, வான் கோழி இறைச்சி, குடல், ஈரல் போன்றவைகள் சுத்தமான முறையில், குறைந்த விலையில் கிடைக்கும் இடம்.

சில்லறை, மற்றும் மொத்த வியாபாரமும் உண்டு.

முகவரி:

195, Rue du Faubourg Saint Denis, 75010 PARIS
(Metro: GARE DU NORD)

TEL (1) 42 39 27 11

www.tamilarangam.net

## ஒரு தலைக் காதல்..!

"காதலுக்கு கண் இல்லையாம்"!
யார் சொன்னது...?

கண்ணே...!
உன்
விழி மைதானங்களில்
சிறைச் சாலைகள்
இருக்குமென்பதால்
என் நெஞ்சு
சிம்பொனி இசையாய்
துடித்துப் போகின்றது..!
அது.. ஏன்...?

பெண்மை இடை
கவிதை பாடி
கம்பன் ரசித்தான்
என்னை அசைக்கவில்லை!
உதட்டுப் பிரகாசங்களில்
[illegible] கட்டம்
அழகிக்கு வந்தேன்
கொடி இடையை
தெரியும் தாக்கலாம்
என்
மன வெண்கல படபடப்பு..!
அது... ஏன்...?

உன் பாதங்கள்
மண்ணைத் தொடும்

வேர்களில் இல்லாமல்
என் நெஞ்சு
நொறுங்கி
புகைக்க போகிறது..!
அது.. ஏன்...?

உறக்கத்தைத் தேடி
கண்கள் ஓட
தலையணை நனைகிறது!
விழித்துப் பார்த்தால்
கன்னங்களின் ஓரம்
கண்ணீரின் காயம்!
அது... ஏன்..?
ஓ..! அதனால்
காதலுக்கு கண் இல்லை
என்று
சொல்லுதானோ இது?

கஜா

# அரசியலுக்குள் விஜயகாந்த் பராக்... பராக்...

நமது தமிழ் சினிமா கதாநாயகர்களின் ரசிகர் மன்றங்கள் அரசியலில் பங்கெடுப்பது நீண்ட காலமாக நடந்துவரும் நிகழ்ச்சிதான். எம். ஜி. ஆர், சிவாஜி, பாக்யராஜ், டி. ராஜேந்தர் போன்றவர்களின் ரசிகர் மன்றங்களைத் தொடர்ந்து இப்போது விஜயகாந்த் ரசிகர் மன்றமும் அரசியலில் குதிக்க முடிவு செய்திருக்கிறது.

ஆனால் மற்றவர்களைப்போல எந்த கட்சியுடனும் ஐக்கியமாகாமல் தானே சுயமாக ரசிகர் மன்றத்தை பொது-மக்கள் இயக்கமாக மாற்ற முடிவு செய்திருக்கிறார் விஜயகாந்த். இதன் பூர்விக வேலைகளும் ஆரம்பமாகி விட்டன. தி. மு. கவைப் போல விஜயகாந்த் ரசிகர் மன்றத்திலும் பொதுக்குழு, செயற்குழு ஆட்சிமன்றக்குழு, தலைவர், செயலாளர் பொருளாளர் போன்ற பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமீபத்தில் ஈரோட்டில் விஜயகாந்த் ரசிகர்மன்ற மாவட்ட மாநாடு நடத்தி ஒரு கலக்கு கலக்கிவிட்டார்கள். வருகிற மே. 16ம் தேதி புதுக்கோட்டையில் மாவட்ட மாநாடு நடக்க இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.



மேலும் எம். ஜி. ஆர். பாணியில் மழைக் கோட்டு, ரிக்‌ஷா, இலவச உணவு போன்றவற்றை ஏழைகளுக்கு வழங்குவதற்கான விழாக்களையும் நடத்தி பத்திரிகைகளில் பிரபலப்படுத்துகிறார் விஜயகாந்த். இதன்மூலம் மக்கள் மனதில் இமேஜை வளர்த்துக் கொள்வதே அவரது திட்டம். இன்றைய நிலையில் அவர் எந்த கட்சியிலும் இல்லை என்கிறார். ஆனால் கருணாநிதியின் விழாக்களில் கலந்து கொள்கிறார். நிதி வழங்குகிறார்.

வீட்டுக்குள் பெரிய அளவில் மூப்பனார் உருவப் படத்தை மாட்டி வைத்திருக்கிறார். சமீபத்தில் காங்கிரஸ் மாநாட்டில் இவரது பினாமியான இப்ராஹிம் ராவுத்தர் பெயரில் கட்-அவுட்கள் வைக்கப்பட்டிருந்தன.

தான் எந்தக் கட்சியும் இல்லை என்பதைக் காட்டிக் கொள்வதற்காக இப்படி பலதரப்பட்ட வேடங்களில் காட்சிதரும் விஜயகாந்த் மனதில் தமிழக அரசியலில் மாபெரும் சக்தியாக உருவெடுக்க வேண்டும் என்ற ஆசை அதிகமாக உள்ளது.

தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கு பிறகு தமிழக அரசியலில் ஒரு பெரும் வெற்றிடம் ஏற்படும். அப்போது தன்னுடைய ரசிகர் மன்ற பலத்தைக் காட்டி தமிழக அரசியலில் இடம் பிடித்துவிடலாம் என்று விஜயகாந்த் கணக்குப் போட்டிருக்கிறார். தேவைப்பட்டால் எந்த கட்சியுடனும் உடன்பாடு கொண்டு கோட்டையை நோக்கிப் பயணம் செய்யலாம் என்பது அவரது நினைப்பு. எனவே தான் தனது ரசிகர்மன்றத்தை வெறும் போஸ்டர் ஒட்டுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் பலம் வாய்ந்த அமைப்பாக மாற்றி வருகிறார்.

பிறகென்ன! எதிர்காலத்தில் விஜயகாந்த் முதல்வரானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறீர்களா? ஹூம் நமது தமிழக அரசியலில் எப்போது, எது வேண்டுமானாலும் நடக்கும்.

www.tamilarangam.net

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (குறள்)

## நண்பன்

நற்பண்புக்கு உரியான் இந்நண்பன்
நவில்பவர்க்கு இனியான் இந்நண்பன்
நாடுபவரைக் கூடுவான் இந்நண்பன்
நால்பவர்க்கும் நடுவன் இந்நண்பன்
அன்பன் அறிவன் பண்பன் (இந்)
நண்பன்! நண்பன்!! நண்பன்!!!

கண்ணுக்கு ஒளியாம் இந்நண்பன்
கருத்திற்கு பரம்பொருளாம் இந்நண்பன்
மண்ணுக்கு நல்எருவாம் இந்நண்பன்
நலத்திற்கு நல்மருந்தாம் இந்நண்பன்
அன்பன் அறிவன் பண்பன் (இந்)
நண்பன்! நண்பன்!! நண்பன்!!!

முக்கனியின் முழுச்சுவையாம் இந்நண்பன்
பிறைநிலவின் முழுநிலவாம் இந்நண்பன்
பாலைவனத்தின் அருந்நீராம் இந்நண்பன்
பகையார்க்கும் நல்பந்தமாவான் இந்நண்பன்
அன்பன் அறிவன் பண்பன் (இந்)
நண்பன்! நண்பன்!! நண்பன்!!!

பாட்டுக்கு பரமரசிகனாம் இந்நண்பன்
ஏட்டுக்கு ஏற்றதுணைவனும் இந்நண்பன்
நாட்டுக்கு நன்மைதரும் இந்நண்பன் (நம்)
வீட்டிற்கும் வேண்டும் இரு நண்பன்
அன்பன் அறிவன் பண்பன் (இந்)
நண்பன்! நண்பன்!! நண்பன்!!!

# மித்திரன் மாமாவிற்கு

அன்புள்ள மாமாவிற்கு, மித்திரன் மாமாவிற்கு,

அன்புடன் நலம் நாடும்.

ங்கள் நலம் நாடும் தங்களின் நலம் நாடும் ன்பு மருகன் எழுதும் மடல். வந்தனம். ங்களின் எதிர்பார்த்த மாபெரும் வெற்றிக்கு மனப் பூர்வமான வாழ்த்துக்கள்.

எங்கள் மொழியில் "மூர்த்தி சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது" என்ற பழைய வாசகம் உண்டு. அதுவும் உங்களுக்கு எவ்வளவு பொருந்தும் என்பதை எம்மவர் ன் பலர் அறியாதது பெரிய குறை. காரணம் வர்கள் மண்டையில் போதிய அளவு பொது அறிவு ற மசாலா இல்லாதது தான்.

பல வேறுபட்ட தரப்பினரையும் கவரும் ஆற்றல் டையவர்; இடதுசாரி சித்தாந்த அறிவாளி; பண்டிதர் சிரியர்; இலக்கியவாதி; இப்படி நகரக்கார மத்தியில் ண்டிப்பு பெற்றிருப்பது மட்டுமன்றி,

இயற்கை மேல் காதல், விவசாய பிரச்சினைகள் வைகள் குறித்தும் நன்கறிந்த நாவலர் என்று ராட்டு மக்களும் பக்கம் வண்ணம் பட்டிக்காட்டு யங்களிலும் விரிவான அறிவு பெற்ற நீங்கள் எல்லா ற்றுக்கும் ஒத்தாப்பாக ஒரு விஷயத்தை நன்கு உணர்ந்து, அதன் அடிப்படையில் செயல்பட்டு ஆடம்பர ஏற்பாட்ட தேர்தல் பிரச்சாரம் செய்த வலதுசாரிகளுக்கு, திலும் இலேசாக "சிராக்"கின் வாயில் "பிஸ்கோத்" வைத்து விட்டீர்கள். அந்த விஷயம் தான் என்ன?

"பிரெஞ்சு வாக்காளர்களுக்கு இதயம் இடதுசாரியாக இருந்தாலும், அவர்களது 'பணப்பை மட்டும் வலதுசாரிதான்" என்பதே.

அதற்கேற்ப வெறும் வறட்டு வாதம் பேசும் ட்டு கொம்யூனிஸ்ட்டாக இல்லாமல் காலத்திற்கேற்ப, மக்கள் விருப்பத்திற்கேற்ப வளைந்து கொடுக்கும் உமது திறமை எவ்வளவு பெருக்கேண்டு.

எங்களூர் எம்.ஜி.ஆருக்கு எவ்வளவு கட்சியை விட்டும் தனிப்பட்ட செல்வாக்கு உண்டோ அதே போன்று உமக்கும் உண்டு என்பது "நண்பனண்பர்கள்" அறிந்த விஷயம்.

ஆனால் அத்துடன் எதிரியை பிளந்து பலவீனப் படுத்தும் இராஜதந்திரியான கருணாநிதியின் திறமையும் உமக்குண்டு. அதை தனது "லெபென்" மருமகன் மூலம் வலதுசாரியை பலவீனப்படுத்தி அதிபர் தேர்தலில் பெரு வெற்றி பெற்று வரலாறு படைத்தீர். அவ்வளவா அப்போது தான் பலருக்கு அது புரிந்தது.

உண்மையில் பழைய முறைப்படியே நடைபெற்ற தேர்தல் முறை இருந்திருக்குமானால் சென்ற தேர்தலில் லெபென் கட்சியினர் கணிசமாக உள்ளே நுழைய முடியாது. ஆனால் அண்ணாவுடன் அக்கட்சியினர் கணிசமாக உட்புக காரணகர்த்தாவாக விளங்கி இன்று வலது சாரிகளுக்குள் பிளவை, பலவீனத்தை ஏற்படுத்தி விட்டீர்கள்.

இதை உணர்ந்து விட்ட காரணத்தால் தான் என்னவோ நம்முடைய தேசம் எதிர் கால்போது மித்திரன் அல்ல. லெபென் தான். அடுத்து தான் நீங்கள் என்று உணர்ந்த வலதுசாரிகள் லெபென் நன்கு ஏறங்கட்டி விட்டார்கள். அதை நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலே நிரூபித்து விட்டது.

மித்திரன் அதிபரானால் 'கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் தலைதூக்கும்" என்ற அச்சத்தையும் போக்கி, கம்யூனிஸ்டுகளையும் இளைக்க வைத்து விட்டீர்கள். இன்று ஏராளமான கம்யூனிஸ்டுகள் உங்களின் ஆதரவாளர்கள் தான்.

எப்படியும் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற தீவிர திட்டத்தில் எவ்வளவோ பணத்தை இறைத்து, எத்தனையோ விதங்களில் நடித்து, திறமான வகையில் பல முறைகளில் கவர்ச்சிகரமாக பிரச்சார உத்திகளை கடை பிடித்த "சிராக்"கிற்கும் நீங்கள் கொடுத்தீர்களே ஒரு குட்டி பிஸ்கோத். பாவம் அவர் தேர்தல் கன்றும் விடியலை

www.tamilarangam.net


இல்லை.

மிகப்பெரிய வேடிக்கை என்னவென்றால் பலவீனத்தை உங்கள் பலமாக்கியது தான். 1986-ல் நாடாளுமன்றத் தேர்தலில் வலதுசாரிகள் மெஜாரிட்டி பெற்ற போது, மக்கு போட்டியாக உள்ள 'சிராக்'கை பிரதமராக நியமிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது, முடிந்தது மித்தரானின் அத்தியாயம். இனிமேல் ஓய்வுக் கேள்வி எடுக்க ஆரம்பிக்க வேண்டியது தான் என சில அன்பர்களுக்கள் எண்ணினர். எழுதினர்.

ஆனல் ஆட்சி என்ற பாடமே சிராக்கிற்கு பலவீனமாக் விட்டது. "ஸ்டார் வார்ஸ்" அதிபராக இல்லாமல், [illegible]க்காக எடுத்ததற்கெல்லாம் [illegible] போல் [illegible]ப்புக் குரல் கொடுக்காமல் நீங்கள் நடந்து கொண்டு தேசிய நலன் பாதுகாக்கும் பெருந்தலைவராக [illegible]ர்ந்து விட்டீர். உமது வாழ்வு உண்மையில் [illegible]க்கு பல பாடங்கள் கற்றுக் தருகிறது.

மாமா! நாடாளுமன்றத் தேர்தலில் உங்களுக்கு புதிய மெஜாரிட்டி கிடைத்ததான். நிச்சயம் நீங்கள் [illegible]ன் பெறுவீர்கள் என்ற நம்பிக்கையில் பல [illegible]ட்சியமாக ஓட்டு போட செல்லாத காரணம் தானோ என எண்ணுகிறேன். அந்த அளவுக்கு மிகக் குறைந்த [illegible]க்கள் புகழுகள். எப்படி இருக்கிறோம் பிரெஞ்சு [illegible]க்கள் உங்களிடம் புதிய பாடம் கற்க [illegible]ப்புகிறார்கள்.

ஆம். பல மாறுபட்ட சூழ்நிலைகளில் [illegible]ங்களாக நீங்கள், மெஜாரிட்டி அற்ற அரசை [illegible]ப்படி திறம்பட நிர்வகிப்பீர்கள் என்பதே அது. [illegible]ன்று சிக்கல் தான் என்றாலும், இதுவும் சோஷலிஸ்டு[illegible]க்கு பாதிப்பு ஏற்படாது என்றே கருதுகிறேன். [illegible]ல் சமயங்களில் வலதுசாரிகள் உங்கள் திட்டத்[illegible]க்கு ஆதரவு தர, கம்யூனிஸ்டுகள் "பாவ்லா" காட்டுவார்கள். அதே போன்றே இவர்கள் ஆதரவு அளிக்க [illegible]வர்கள் பாவ்லா காட்டுவார்கள் தனி நாடாளுமன்றம் [illegible] சுவையான சம்பவங்களை சந்திக்கும் என்பதில் ஐயம் இல்லை. எது எப்படி இருப்பினும் இன்று மக்கள் உங்கள் பக்கம் தான். அவர்கள் மனம் மகிழும் வண்ணம் உங்கள் பணி தொடரட்டும். உங்கள் ஆயுள் நீளமாக நீக்கட்டும். என வாழ்த்தும் பணியில் ஏற்றுக்க முடிக்கிறேன் மாமா.

அன்புடன்
மருகன்.

## சில கேள்விகள்?

1. நாடாளுமன்ற தேர்தலில் சோஷலிஸ்டுகள் தானே அதிக வெற்றி பெற்றுள்ளார்கள்?

ஆம். ஆனல் போதிய மெஜாரிட்டி இல்லை. கம்யூனிஸ்டுகளோடு கூட்டணி அமைத்தால் முடியும். ஆனல் அதை இரு தரப்பும் தற்போது விரும்பவில்லை.

2. பிரதமர் பதவி ரோகார்டு எப்படி?

இன்றைய சோஷலிஸ்டுகளில் மக்களுக்கு அடுத்த இடத்தை வகிப்பவர். மிதவாத. கம்யூனிஸ்ட்களை அரவணைத்து செல்வதை விட வலதுசாரி மிதவாதிகளை இழுத்து பிடிக்க விரும்புபவர். மக்கள் செல்வாக்கு பெற்றவர். தனது தொகுதியில் அதிக சதவீதத்தில் வெற்றி பெறுபவர். தனது அரசுக்கு போதிய ஆதரவு இல்லை என்பதால் இராஜிநாமா செய்துவிட்டார். ஆனல் மித்தரான் அதை ஏற்கவில்லை. தற்போது ரோகார்டு பிரதமராக தொடர வலதுசாரிகள் பெரும்பாலும் முட்டுக்கட்டையாக இருக்க மாட்டார்கள் என்பதே இன்றைய நிலவரம்.

3. பிரான்சின் ஐந்தாம் குடியரசிலேயே மிக குறைந்த மெஜாரிட்டி பெற்ற தேர்தல் என்று சொல்லப்படுகிறதே?

அப்படி அல்ல. அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற அதிபர் தனது அதிகார உரிமை கொண்டு கலைத்து நடைபெற்ற தேர்தல்களிலேயே மிகக் குறைந்த மெஜாரிட்டி என்று சேர்த்துக் கொள்ளவும். நாடாளுமன்ற ஆயுட்காலம் 5 ஆண்டுகள். அது முடிவதற்கு முன்ற முறை மித்தரான் கலைத்தார். மெஜாரிட்டி வென்ற. தவிர 2 ஆண்டுகள் தான் முடிந்து இருக்கிறது. எப்போதும் கலைத்தார் விரும்பினால் மீண்டும் கலைக்க அவருக்கு அதிகாரம் உண்டு.

www.tamilarangam.net



# வீரனுக்கு வழிவிட பேசுவதா? இந்தியாவின் ஈனபுத்தி!

தமிழர்களே! தமிழர்களே!

இந்தியாவை ஆட்சி செய்து கொண்டு வரும் காங்கிரஸ்காரர்கள் தமிழ் இனத்தை எப்படி எல்லாம் கேவலப்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதைப் பற்றி நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிங்களக் கொம்பேறி மூக்கன்கள் ஈழத் தமிழ் மக்களை கண்ட துண்டமாக வெட்டிப் புதைத்துக் கொண்டுவரும் கொடுமைகளை உலகமே அறியும்!

தமிழ் இனத்தைக் காப்பாற்று. தமிழ் இனத்தைக் காப்பாற்று என்று அபயக்குரல் கொடுத்த போதெல்லாம் வக்கணை பேசிக் கொண்டு இருந்தது காங்கிரஸ் ஆட்சி!

ராணுவத்தை அனுப்பு! ரத்தக் குளத்தில் மிதக்கும் தமிழனைக் காப்பாற்று என்று கதறியபோதெல்லாம் முடியாது. முடியவே முடியாது என்று மறுத்துவிட்டது டெல்லி அரசாங்கம்!

இலங்கை ஒரு அந்நிய நாடு. அவர்கள் பிரச்சினையில் நாம் தலையிட முடியாது என்று நியாயம் பேசத் தொடங்கியது டெல்லி அரசாங்கம்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாத கட்டம் ஜெயவர்த்தனவுக்கு ஏற்படத் தொடங்கியது!

ஜெயவர்த்தன டெல்லியின் உதவிக்கரம் கேட்டார்.

ஜெயவர்த்தனவைக் காப்



பாற்ற இந்தியப்படை புறப்பட்டது. அந்தப் படைக்கு அமைதிப் படை என்ற பெயரையும் சூட்டினார்கள்.

இந்தியாவில் இருந்து கிளம்பிய அமைதிப்படை டாங்கிகள் சகிதமாகப் புறப்பட்டுச் சென்றது. அத்தோடு விமானப் படையும், கப்பல் படையும் கைகோர்த்துக் கொண்டது.

அமைதிப் படை தமிழர்களை அழிக்கும் படையாக மாறி தமிழனை சின்னாபின்னம் செய்து வருவதை உலகமே அறியும்.

ஈழத்திலே வீரம் செறிந்த போர் நடந்து கொண்டிருக்கிறது.

புலிப்படை—இந்தியப் படைகளை துச்சமாக மதித்து போரிட்ட வண்ணம் இருக்கிறது. முப்படைகளையும் முட்டியைத் தட்டி விரட்டும் காட்சி வீரம் நிறைந்த காட்சியாகும்.

புலிப்படை தங்கள் மண்ணுக்காக உயிரை துச்சமாக மதித்து போரிட்டு வருகிறது. இந்தியப் படை எதற்காக உயிரை இழந்து வருகிறது. நம்முடைய பிரதமருக்குத்தான் வெளிச்சம்.

புலிக் கூட்டத்தின் தலைவர் பிரபாகரன் வீர வரலாற்று நிகழ்ச்சிகளைத் தீட்டிக் கொண்டு இருக்கிறார்.

புறநானூற்று காவியத்தையும் மிஞ்சி நிற்கிறான் ஈழத் தமிழன்.

வீரம் என்ற சொல்லையே உருவாக்கியவர் பிரபாகரன்தானோ என்ற எண்ணமே ஏற்படுகிறது.

குண்டு மழையைக் கண்டு அஞ்சாத கூட்டம் புலிக் கூட்டம்!

டாங்கிகளைக் கண்டு அலறாத கூட்டம் புலிக் கூட்டம்.

இந்தியப்படை புலிக் கூட்டத்தில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறது.

வெற்றி அல்லது வீரமரணம்! இதுதான் விடுதலைப் புலிகளின் லட்சியமாகும்!

புலிக்கூட்டம் என்று ஒரு தனிக் கூட்டம் இல்லை. ஈழத்தில் வாழும் அத்தனை பேருமே புலிகள்தான்.

ஆண்களும் பெண்களும் மட்டும் துப்பாக்கி ஏந்தி நிற்கவில்லை, பள்ளிப் பிள்ளைகளும், கல்லூரி

# வீரத்தில் விளையாடும் வெற்றித் தோள்கள் ஈழத்தில் பொறிக்கும் சாதனைகள்!

காளைகளும் வீரப் போரில் குதித்திட காத்து நிற்பவர்கள்.

வயிற்றுப் பிள்ளைகளும் வீரப் பிள்ளைகள்தான் என்று சிலவீராங்கனைகள் கூறி வருவது கேட்டு மெய்சிலிர்த்து நிற்கிறோம்.

ஈழத் தமிழன் மட்டும் இப்படி பொங்கி நிற்கிறானே? அது ஏன்?

அவன் தன் மண்ணுக்காக போராடுகிறான். அதனால் அவன் உள்ளத்திலே வீரம் பொங்கி எழுகிறது. ரத்தத்திலே வீரம் கலந்து உந்தி எழ வைக்கிறது.

அவன் தமிழன் என்பதால் நாம் பெருமைப்படுகிறோம். நாம் தமிழன்தானா என்று வெட்கப்படவும் செய்கிறோம்.

இப்படி வீரத்தின் விளிம்பிலே நின்று கொண்டு உணர்ச்சி கீதம் இசைத்துக்கொண்டிருக்கும் புலிப்படைத் தலைவன் பிரபாகரன் மீது இந்தியா புழுதியை வாரி தூற்றக்கிளம்பியிருக்கிறது.

பிரபாகரனுக்கு இந்தியா 50 லட்ச ரூபாய் லஞ்சம் கொடுத்ததாம். அதன்பிறகுதான் இலங்கை ஒப்பந்தத்திற்கு சம்மதித்தானாம்.

இப்படி ஒரு கதையை கட்டிவிட்டு இருக்கிறது இந்தியா!

இந்தியா கட்டிவிட்டு இருக்கும் இந்த கதையை எந்த மடையனாவது நம்புவானா? இந்தியாவிற்கு ஏன் இந்த ஈனபுத்தியோ தெரியவில்லை.

பிரபாகரனுக்கு ரூ. 50 லட்சம் பெரிய பணம் அல்ல.

பிரபாகரனுக்கு பணம் வேண்டும் என்றால் ஈழத்தமிழர்களே கோடி கோடியாய் காலில் கொட்டி மகிழ்வார்கள்.

பிரபாகரனுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது உண்மை என்றால் ஏன் இன்னும் காட்டிலே ஒளிந்து கொண்டிருக்கிறான்! ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணாகதி அடைந்திருக்கமாட்டானா?

இலங்கை — இந்தியா ஒப்பந்தத்தை உலக அதிசயங்களில் ஒன்று என்று கூறிவிட்டு பிறகு லஞ்சம் கொடுத்தோம், காரியத்தை முடித்தோம் என்று கூறுவதிலே அர்த்தம் என்ன இருக்க முடியும்!

பிரபாகரனை இழிவுபடுத்துவதாக நினைத்துக் கொண்டு இந்தியா தன்னையே இழிவுபடுத்திக் கொண்டிருப்பது வெட்கப்படவேண்டிய விஷயமாகும்.

குளிக்கப் போகிறேன் என்று கூறிவிட்டு நதிக்கரைக்குப் போனவன் சேற்றைப் பூசிக் கொண்டு வந்த சோமாளியின் கதையைத்தான் இந்தியா செய்து இருக்கிறது.

வீரன் ஒருபோதும் விலைபோக மாட்டான் என்பது வீரனுக்குத்தான் தெரியும்.

எந்த விலையானாலும் தன்னை விற்றுக்கொள்ளும் காங்கிரஸ் கூட்டத்திற்கு வீரத்தின் பெருமையைப் பற்றி என்ன தெரியும்?

வீரனை வாளால் வீழ்த்த முடியவில்லை. வேலால் காயப்படுத்த முடியவில்லை.

வீரனைத் துப்பாக்கிக் குண்டுகளால். துளைக்க முடியவில்லை. அவனை பணத்தால் வீழ்த்தி விட்டோம் என்று கூறுவது பேடிகளின் செயலாகும். இதைவிட இந்தியாவிற்கு கேவலம் எதுவுமே இருக்கமுடியாது.

எப்படியாவது தமிழனை அழிக்க நினைக்கும் காங்கிரஸ்காரனோடு நாம் உறவு கொள்ளலாமா? அது நமக்கே கேவலம் இல்லையா? தமிழர்களே, தமிழர்களே! சிந்தியுங்கள்!

தங்களைக் கேவலப்படுத்திக் கொண்டாலும் பரவாயில்லை! தமிழனை அழித்துவிட வேண்டும் என்பதுதான் காங்கிரஸ்காரனின் திட்டமாகும்.

தமிழகத்தில் தேர்தல் நடந்தால் காங்கிரஸ்காரன் இப்படித்தான் நடந்துகொள்வான் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

தமிழர்களே! தமிழர்களே! சிந்தித்து செயல்படுங்கள்.


பரபரப்பாக விற்பனையாகிறது!

**மருமகள்**
(மாத நாவல்)

ரஜ்னீஷ்குமார் படைக்கும்

**ஒரு கொலை!**

**ஒரு முத்தம்!**

படிக்கத் தவறாதீர்கள்!

விலை ரூ. 2-50

மருமகள்,
6A ரயில்வே காலனி முதல்தெரு
சென்னை—29.

www.tamilarangam.net



# உன் 16 வயது கதை ஒரு பாவக் கதை அல்லவா?

கலகலக்க வைத்துவிடாது அல்லவா?'' என்றோம்.

''கலைஞர் இருக்கும்வரை கழகத்திற்கு ஒன்றும் ஆகாது'' என்று கூறினார் எம்.ஜி.ஆர்.

''உங்களுக்கு கலைஞர் மீது கோபமா?'' என்று கேட்டோம்.

''சேசே! அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. அவர் வெள்ளை உள்ளம் படைத்தவர். கள்ளத்தனம் படைத்தவர்கள் கலைஞரை வென்று விட்டார்கள்'' என்று கூறினார்!

சில தினங்களுக்குப் பிறகு காக்காய் கூட்டங்கள் எம்.ஜி.ஆரை வென்றுவிட்ட செய்தியைப் பத்திரிகைகளில் படித்தோம்!

நாங்கள் தோட்டத்தை விட்டு வெளியே வந்து கொண்டிருந்த போது கே.ஏ.கே. கார் உள்ளே நுழைந்து கொண்டிருந்தது.

கலகக் கொடி உயரப் போகிறது என்ற நினைப்போடு காரில் வீடு வந்து சேர்ந்தோம்.

சில தினங்களுக்குப் பிறகு மாநில அமைப்பாளர் கே.ஏ.கே. என்ற அறிவிப்போடு அ.தி.மு.க. உதயமாயிற்று!

சில பல ஆண்டுகளுக்குப் பிறகு உறவுகள் முறிந்துவிட்டன என்றாலும் உணர்வுகள் அப்படியேதான இருந்தன.

இந்த உண்மைகள் எல்லாம் சின்ன வீடுகளுக்குத் தெரிய நியாயம் இல்லை.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கலைஞருக்கும், எம்.ஜி.ஆருக்கும் ஏற்பட்ட உணர்வு பூர்வமான நட்பு—

1987ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24-ம் தேதி அதிகாலையில் விழி நீரை சிந்தி விட்டு தோட்டத்தை விட்டு கலைஞர் புறப்பட்ட போது தான் இந்த உலகமே உணர்வுகளின் சக்தியை புரிந்து கொண்டது!

அதற்குப் பின்பு நடந்த நிகழ்ச்சிகளெல்லாம்—

வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை,



கடைசி வரை யாரோ என்ற கண்ணதாசன் பாடல் வரிகளின் காட்சியைத்தான் காண முடிந்தது!

பதினாறு வயது பந்தமோ, தலை மாட்டில் நின்று கொண்டு தொலை காட்சிக்கு போஸ் கொடுக்கவே பயன்பட்டது! மாறி மாறி சேலை உடுத்தி வந்த காட்சிகள் பலருக்கு வெறுப்பையே தந்தன!

ஒரு கட்டத்திலே வெள்ளைப் புடவை உடுத்தி வந்த போது 16 வயது பந்தம் விதவை கோலத்தில் காட்சி அளித்தது. பலரை நெகிழ வைக்கவே செய்தது! ஆனால் அடுத்து அடுத்து காட்சிகள் மாறிக்கொண்டே இருந்தன! 16 வயதுக்கு மரியாதையும் குறைந்து கொண்டே இருந்தது!

எம்.ஜி.ஆர். உடலைத் தாங்கிச் சென்ற ராணுவ வண்டியில் உட்கார்ந்து கொண்டு செய்த ரகளை எந்த சின்ன வீடுகளுக்குமே அடுக்காத ரகளையாகும்!

எல்லாமே நான் என்று காட்டிக் கொள்ள இந்த சின்ன வீடு செய்த ரகளை பலருக்கும் வெறுப்பையே ஏற்படுத்தியது! எம்.ஜி.ஆர். மறைந்த சில தினங்களிலேயே நிர்ப்பந்தம்நீங்கி விட்டது. இனி சுதந்திரமாக செயல் படுவேன் என்று ஜெயலலிதா அறிக்கை விடுத்தார்!

16 வயது பந்தம் நிர்ப்பந்தமாக மாறிய காரணம் என்ன?

''சனியன் தொலைந்தது! இனி யாரும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது! சுதந்திரமாக பவனி வருவேன்'' என்பது தானே இதற்கு அர்த்தம்!

இந்த நினைப்புள்ள போக்கிரிப் பொம்பளைதான் சாவு செய்தியை கலைஞருக்கு எப்படிச் சொல்லலாம். எனக்கல்லவா சொல்லி இருக்க வேண்டும் என்று குதிக்க ஆரம்பித்திருக்கிறது!

கலைஞருக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட மனஸ்தாபம் இல்லை! அதை ஒரு பங்காளி சண்டை என்றே கூற வேண்டும்!

குடும்பத்தில் ஒருவர் மறைந்து விட்டார் என்றால் உடனே பங்காளிகளுக்குதான் சொல்லி அனுப்புவார்கள்! இது தான் தமிழன் மரபாகும்!

சின்ன வீட்டிற்குச் சொல்லி அனுப்பும் பழக்கம் தமிழ் நாட்டில் கிடையாது!

சின்ன வீடு என்றால் கேவலம் ஒன்றும் இல்லை! வைப்பாட்டியாக இருப்பது அசிங்கம் இல்லை! எம்.ஜி.ஆருக்கும் சின்ன வீடு, சோபன் பாபுவுக்கும் சின்ன வீடு என்றால் தமிழகம் ஏற்குமா? ஒரு நாளும் ஏற்காது!

இனி இந்த சின்ன வீட்டிற்கு யார் யார் குடி போவார்களோ அதுவும் தெரியாது!

இந்த நிலையில் நான் தான் பட்டம் சூட்டிக் கொள்வேன் என்று கூறினால் சும்மா இருப்பார்களா?

பங்காளிகள் பிரிந்து இருப்பது இயற்கை!

சின்ன வீடுகள் பிரிந்து இருப்பதும், பிறரோடு சேர்ந்து வாழ்வதும் எப்படி சகஜமாகும்? சின்ன வீடு ஜெயலலிதா செய்யும் போக்கிரித்தனத்தை அடக்குவது நம் கடமை!

அடக்கம் இல்லாத பொம்பளை அரசியலுக்கு வந்தால் அரசியலே அசிங்கமாகி விடும்! எனவே ஜெயலலிதாவை அடக்கி வைப்போம்!

# ஆட்டம்போடும் போக்கிரி பொம்பளையே! காட்டாதே உன் கை வரிசையை!

எம். ஜி. ஆர். மறைந்த செய்தியை ஈரோட்டில் இருந்த கருணாநிதிக்குச் சொன்னார்கள். பக்கத்திலே இருக்கும் எனக்குச் சொல்லவில்லை.

எனக்கும் எம்.ஜி. ஆருக்கும் 16 வயதிலேயே பந்தம் ஏற்பட்டு விட்டது. அதைத் தெரிந்தாவது சொல்லி இருக்கக் கூடாதா என்று ஜெயலலிதா ஆதங்கப்படுகிறார்.

கருணாநிதியை கண்டிப்பவர் எம்.ஜி.ஆர் எதிர்த்து வந்தார். எதிரியாகவே நினைத்து வந்தார்! அந்த கருணாநிதியின் காலில் விழுந்து கிடக்கும் சண்டாளிகளை சதிகாரர்களை ஆதரிக்கலாமா? இது எம்.ஜி. ஆருக்கு செய்யும் துரோகம் இல்லையா என்றும், ஜெயலலிதா வெறித்தனமான கூச்சலை எழுப்பி இருக்கிறார்.

நாள்தோறும், மேடை தோறும் இதே பேச்சுதான்! எம். ஜி. ஆர். கருணாநிதிக்கு எதிரி! எம்.ஜி.ஆர். கருணாநிதிக்கு எதிரி என்று கூறிக்கொண்டே அலைகிறார்!

எம். ஜி. ஆருக்கு ஒரே ஒரு விரோதி ஜெயலலிதாதான்! ஒரே ஒரு துரோகியும் ஜெயலலிதா தான்! கலைஞருக்கும் எம்.ஜி. ஆருக்கும் இருந்த உறவு வேறு! எம்.ஜி.ஆருக்கும் ஜெயலலிதாவுக்கும் இருந்த உறவு வேறு! இரண்டு உறவும் ஒன்றல்ல. இதை ஜெயலலிதா புரிந்து கொள்ள வேண்டும்.

தனக்கும் எம். ஜி. ஆருக்கும் 16 வயதிலே பந்தம் ஏற்பட்டு விட்டதாகப் பெருமைப்படுகிறார் ஜெயலலிதா!

புகழ்பெற்ற ஒரு நடிகரோடு, ஒரு அரசியல் தலைவரோடு ஏற்பட்ட பந்தத்தைப்பற்றி நினைத்து பெருமைப்படுவதிலே தவறு இல்லை.

ஆனால் அந்த 16 வயது பந்தம் எந்த வயது வரையில் நீடித்தது? அதுதான் நம்முடைய கேள்வி!

இப்போது ஜெயலலிதாவிற்கு நாற்பது வயது என்கிறார்கள். அப்படியானால் 1964 ல் 16 வயதாக இருந்திருக்கிறார் ஜெயலலிதா!

1964 ல் ஜெயலலிதாவுக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஏற்பட்ட பந்தம் நடிகர் நடிகை என்ற வகையைச் சேர்ந்ததுதான்.

பிறகு உணர்வுகள் உருமாறும் போது உறவிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

எல்லாமே எனக்கு அவர்தான் என்று ஜெயலலிதா பச்சையாக கூறிவிட்ட பிறகு நாம் மட்டும் ஏன் மறைத்து மறைத்து ஒளித்து ஒளித்து எழுதவேண்டும். எம்.ஜி. ஆருக்கு தாலி கட்டாத மனைவியாகவே ஜெயலலிதா வாழத் தலைப்பட்டார் என்பதுதான் உண்மை.

முன்பெல்லாம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மூப்பனாரைப் போன்ற பெரிய பண்ணை முதலாளிகள் எல்லாம் வீட்டிலே மனைவி இருந்தாலும் ஒரு வைப்பாட்டியை வைத்துக் கொள்வதைப் பெருமையாக நினைப்பார்கள். அந்த வைப்பாட்டிமார்களும் பெருமைப்படுவார்கள்.

ஆனால் அந்த காலத்து வைப்பாட்டிகளுக்கெல்லாம் ஒரு நெறி இருந்தது. ஒரு முறையும் இருந்தது!

ஆனால் இப்போதுள்ள சின்ன வீடுகளுக்கு நெறியும் கிடையாது. முறையும் கிடையாது.

இப்போது எந்த சின்னவீட்டிலும் எவர் வேண்டுமானாலும் நுழையலாம் என்ற நிலைதான் இருந்து வருகிறது.

16 வயது பந்தமும் இதற்கு விதிவிலக்கு அல்ல!

அந்த 16 வயது பந்தம் சில வருடங்களில் சந்து பொந்துகளில் நுழைய ஆரம்பித்தது. இருபதாவது வயதில் சோபன்பாபுவோடு அந்த பந்தம் சொந்தம் கொண்டாடத் தலைப்பட்டது.

கண்வலை மாற்றிக் கொண்ட பிறகு பந்தமும் எம்.ஜி.ஆரை விட்டு பிரிந்து செல்லத் தொடங்கியது!

சோபன்பாபுவோடு ஏழு வருட பந்தமும் பாசமும், உருண்டு கொண்டிருந்தது.

மறுபடியும் அந்த பந்தம் சடுகுடு விளையாடத் தொடங்கியது. 36 வயது பந்தம் மீண்டும் எம். ஜி. ஆர். பக்கம் திரும்பியது.

ஆனால் கலைஞருக்கும் எம். ஜி. ஆருக்கும் இருந்த உறவு இப்படிப்பட்டது அல்ல. அவர்களுடைய பிணைப்பு உணர்வுகளால் பின்னப்பட்டு இருந்தது.

சேலத்தில் ஒன்றாக இருந்தவர்கள், ஒரே வீட்டில் வறுமையைப் பங்கு போட்டு வாழ்ந்தவர்கள்.

''வளமான கருத்துக்களுக்கு எனக்கு ஆசானாக இருந்தவர் கலைஞர்'' என்று எம்.ஜி.ஆரே கூறி இருக்கிறார்!

திருக்கழுக்குன்றத்திலே எம். ஜி.ஆரின் பேச்சு கழகத்திலே ஒரு புயலை உருவாக்கியது. அந்தப் புயலை பிரளயமாக மாற்றியவர் நம்முடைய நாவலர்தான்!

''அவசரப்பட வேண்டாம்'' என்று தடுத்தும் நாவலர் கேட்கவில்லை! கட்சியை விட்டு எம்.ஜி. ஆரை வெளியேற்றினார்.

கட்சியில் இருந்து எம்.ஜி.ஆர். பிரியப் போகிற நேரம்.

பதட்டத்தோடு மாலைமணியின் சார்பில் தோட்டத்திற்குள் நுழைகிறோம்.

''ஏன் இப்படி?'' என்று எம். ஜி.ஆரைப் பார்த்துக் கேட்டோம்.

''ஒன்றும் இல்லை, சும்மா கணக்கு விஷயம்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

''கணக்கு விஷயம் கழகத்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**CROWN HAIR DRESSINGS**
**VIDEO, AUDIO CLUB**

# கிறவுண் சலூன்

# &

# வீடியோ ஓடியோ கிளப்

எங்கள் பரீஸ் 11-ல் நிறுவப்பட்டுள்ள கிறவுண் சலூனில் ஆசிய ஐரோப்பிய நவீன முறையில் சிகை அலங்காரங்களும் சிகை வர்ண அலங்காரங்களும் செய்யப்படும்.

முகவரி : 2, Rue Jules Verne
**75011 PARIS**
***Tel. 43572639***

**M° : Belleville or Goncourt**

***All days, Except Mondays***

உங்கள் வருகைக்கு மிக்க நன்றி.



**MADINA INTERNATIONAL S.A.R.L.**

**IMPORT EXPORT**

7. RUE HENRI MONNIER

75009 PARIS

Tel : 42 81 37 61

எங்களிடம் அனைத்து மளிகை சாமான்களும் மற்றும் ஆசியா சாமான்களும் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும், கிடைக்கும். விஜயம் செய்து பயன் அடையுங்கள்.

பாரிஸ் நகரில் எல்லா விதமான மளிகை சாமான்களும் கிடைக்கும் ஒரே நிறுவனம் எமது "மதீனா இண்டர்நேஷனல்"

உரிமை : S. ஷேக்சுல்தான்

**METRO : SAINT - GEORGES**

**OU**

**PIGALLE**

**ALIMENTATION ASIATIQUE**

திருப்தியடைந்தால் தயவுசெய்து நண்பரிடம் சொல்லுங்கள்.

திருப்தி இல்லையேல் எங்களிடம் சொல்லுங்கள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அங்கே இங்கே என்று அலையாதீர்கள்
அனைத்து உணவுப் பொருட்களையும்
ஒரே இடத்தில் தெரிவு செய்ய

## அ ம லா ம ளி கை

இலங்கை இந்திய உணவு வகைகள்
விஷேடமாக மரக்கறிகள் மற்றும்
மீன், ருல் போன்றவையும் தரமானவையாகக் கிடைக்கின்றன.

தெளிவான
வீடியோ
பிரதிகள்
வாடகைக்கு
வழங்கப்படுகின்றது.

தரம், மலிவு விரையுங்கள் ->

**AMALA** S. A. R. L.

7, RUE PERDONNET,

75010 PARIS

TE: 42 03 36 33

M°: GARE DU NORD et LACHAPELLE

தினசரித் தேவைப் பொருட்களை திறம்படத் தெரிவு செய்ய
நினைவில் நிலை பெற வேண்டிய ஸ்தாபனம்

மளிகைப் பொருட்கள்
மலிவு விலையில்

நி

இனிய உணவுகள்
இதமாகச் சுவைத்திட

ஒலிப்பதிவு
செய்யப்பட்ட
ஒடியோ கசெற்றுக்கள்

ஷா

இட்லி, தோசை,
பரோட்டா, கொத்து ரொட்டி
குருமா ஏனைய கறி வகைகள்

சுத்தம் - சுவை - தரம்

**NISHA** S. A. R. L.

192, RUE Fg. ST DENIS
75010 PARIS, M°: GARE DU NORD
TE: 42 40 17 05

# QĀSRE SHIREEN

## PATISSERIE FRAICHE ET SALON DE THE

*இந்திய ஈழ பாகிஸ்தானிய இனிப்பு
கார உணவு பலகார வகைகள் எம்மிடம்
*தரமான முறையில்
*குறைந்த விலையில்
தயாரித்து விற்கப்படுகின்றன. பிரான்ஸில்
உள்ள ஒரே இந்திய ஸ்வீட் ஸ்டால்
இது மட்டுமே. வாடிக்கையாளர்களுக்கு
மொத்த விலையாக விலையிலேயே தருகிறோம்
என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
*வகைவகையான பலகாரங்களை
ருசிக்க இன்றே விஜயம் செய்க. ஓடர்
தருபவர்கள் 2 தினங்களுக்கு முன்பாக
கொடுக்க வேண்டும். * * * * *

172, RUE DU FAUBOURG ST. DENIS - 75010 PARIS
TEL. 42.49.19.30 Métro : GARE du NORD

SARL AMBALA

QASRE SHIREEN

*RASSE MALAY
*MOTI CHOUR
*GOLABE JAMANE
*AMRATIE
*PATISSA
*SOHNE HALWA KARACHI etc
(GATEAUX ET BISCUITS)
*SAMOSSA
*NAMAK PARE
*MOEGRE
*DALLEENS etc


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


JSJ
VIDEO CLUB

# OUR BEST WISHES

வி. ஜி. பி. & தொம்சன்
வீடியோ ஒறிஜினல் பிரதிகளுக்கு
விஜயம் செய்யுங்கள் பாரீஸ் மாநகரில்

## J. S. J. VIDEO CLUB

புதிய, பழைய திரைப்படங்களின் முதல்ரக வீடியோ
பிரதிகள் வாங்கவும், வாடகைக்குப் பெறவும்
THOMSON - BHARATH சிறந்த திரைப்படப்பாடல்
ஒலிப்பதிவுக் கசெற்றுகளுக்கும்
V. G. P. & THOMSON வீடியோ முதல்தரக் கசெற்றுக்களை வழங்கும்.

*பாரீஸ் மாநகரில் வீடியோ கேசட் சேவையில்*
*பலரின் நன்மதிப்பையும் பாராட்டையும்*
*பெற்ற*

## ✱ ஜ-எ-ஜ- வீடியோ கிளப் ✱

7, RUE JULES VERNE, PARIS - 75011.
☎ 47.00.48.45.

*உங்கள் திருப்தியே எங்கள் சேவை*



பாரில் அழகிய பாரீஸ் நகரில்
பாவனையாளர் மனம் குளிர
பணி புரியும் ஒரே ஸ்தாபனம்

## ஸ்ரீ ஐங்கரன் ஸ்ரோர்

மலிவான விலையில் மளிகைப் பொருட்கள்
அன்பளிப்புக்கேற்ப அலங்காரப் பொருட்கள்
படிப்பதற்கு பத்திரிகைகள் சஞ்சிகைகள்
அனைத்தும் ஓரிடமாய் பெற்றிட
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## SRI INKARAN STORE

7 Rue Jules Verne
75011 Paris
Tel 4 338, 28 57.

www.tamilarangam.net


MALA

இலங்கை இந்திய
மளிகைப் பொருட்கள்

உணவுத் தயாரிப்பிற்குதவும்
உபகரணங்கள்

பச்சையம் குன்ருத
மரக்கறி வகைகள்

சுவை குன்ருத
ரின் உணவுவகைகள்

எண்ணம் கவரும்
வண்ணச்சேலைகளின்
சோலை

ஆண்களுக்குக் கேற்ற
சேட்ஸ், ரி-சேட்ஸ்
வகைகள்

அன்பளிப்புகள்
அழகு சாதனங்கள்

எல்லா வித
எவர்சில்வர் பொருட்கள்

தமிழ் நாவல்கள்,
சஞ்சிகைகள்,
இலக்கிய நூல்கள்,
தமிழ், ஆங்கில, தினசரிகள்

தேவைகள் அறிந்து
சேவைகள் உண்டு
கேட்டு அறிந்து கொள்ளுங்கள்

மாலா

மாலா

தலைமை ஸ்தாபனம்
78, B^D BARBES
22, RUE LABAT
75018 PARIS
M^O: M-POISSONNIERS
TE: 42 62 01 23

MALA
88, 90, PASSAGE BRADY
75010 PARIS
M^O: STRASBOURG S^T DENIS
ou CHATEAU D'EAU
TE: 42 46 26 79

பாவனையாளர்களின் பாராட்டை பெற்றவர்கள் - மாலா